AstroVed

நவம்பர், 2022


# சத்வித்யா

மாலை: 3 மலர்: 37

பிரின்ஸ் இன்ஃபோ பார்க், பிளாட் எண்.81-பி, ஏ-பிளாக், 4வது தளம்,
2வது பிரதான சாலை, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை 600058.

ஆன்மீக விஞ்ஞான இதழ்

இணையதளம் வாயிலாக வாரம் ஒருமுறை வெளிவரும்



## சகல தோஷங்களையும் போக்கி அருளும் பிரதோஷம்

அனைத்து இதழ்களையும் AstroVed.com இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்து பயன் பெறலாம்
மேலும் விபரங்களுக்கு போன்: 88702 88701, www.astroved.com



வசதி படைத்தவர்கள் தனியார் பள்ளிகளில் உயரிய கல்வியையும் வறுமையில் உழல்வோர் அரசு பள்ளிகளில் சாதாரண கல்வியையும் பயில்வதாய் சொல்கிறார்கள்.

ஆனால், எந்த பள்ளியில் எத்தகைய கல்வியைப்பெற்றாலும் அது நம் பேரறிவை வளர்ப்பதாய் இருத்தல் வேண்டும். இந்த பேரறிவை புகட்டுகின்ற "திருமந்திரம்" போன்ற நூலினை கற்றுக் கொடுக்க வேண்டும். திருமந்திரம் என்பது பேரறிவின் திறவுகோல் என்றாகுமே தவிர, அது ஒரு சமயம் சார்ந்த நூல் என ஒதுக்கி விடக் கூடாது! எச்சமயம் சார்ந்தோருக்கும் பேரறிவைத் தருகின்ற அரிய கருத்துக்கள் அடங்கிய
திருமந்திரப் பாடல்கள் அனைத்து கல்விச்சாலைகளிலும் எந்தவித பாரபட்சமுமின்றி கற்றுத்தந்தாலே பேரறிவு வளரும்.

Dr. Baskaran Pillai



அன்பு வாசகர்களே!... இந்த நவம்பர் மாத 'சத்வித்யா', பல ஆன்மீக அம்சங்களைத் தாங்கி, மின்திரையில் மிளிர்கிறது.

மக்களின் அரும்பசிக்கு உணவளித்து, அகிலம் சிறக்க பாடுபடும் உழவர் பெருமக்களுக்கு ஆதரவுப் பேரலையை நல்கும். ஐப்பசியும், கார்த்திகையும் கைகோர்த்து அடைமழைக்கு வித்திடும் காலம் இது. இறைவனின் இன்னருளாலும், கடைக்கண் பார்வையாலும் 'போதும்' என்னும் அளவிற்கு பருவமழை அதிக அளவில் பெய்து இன்ப அலைகளை சில பகுதிகளிலும், இடர்பாடுகளை பல பகுதிகளிலும் ஏற்படுத்தி உள்ளது.

இந்த நிலையில் மீண்டும் அடைமழை என்பது மக்களை மிரள வைப்பதாய் அமைந்து விடக்கூடாது. ஆண்டவனின் அருட்கருணையான மழையை அனைவருமே வரவேற்கக் காத்திருந்தாலும், இன்னல்கள் இடையூறுகள் இல்லாமல் மக்களின் உள்ளங்களிலும் இல்லங்களிலும் இன்பத்தை வளர்க்க, இறைவன் துணைசெய்ய வேண்டும் என அனைவருமே வேண்டுவோம்! நிச்சயம் அந்த இறைவன் நமக்கு துணையிருப்பான்.

அன்புடன்
(அச்சிட்டு வெளியிடுவோர்)
ஆஸ்ட்ரோவேட்.காம்

அன்பு சத்வித்யா வாசகர்களே! இதுவரை இணையதளத்தில் வெளியாகி, எல்லையில்லா ஆன்மீக செய்திகளை அள்ளித் தந்து கொண்டிருக்கும் நமது சத்வித்யா இணையதள மாத இதழ், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க விரைவில் புத்தக வடிவில் உங்கள் கரங்களில் தவழவிருக்கிறது என்பதனை பெரு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

என்றென்றும் உங்கள் ஆதரவை வேண்டும், Astroved.com மாத இதழ்

அன்புடன்
Astroved.com



# சகல தோஷங்களையும் போக்கி அருளும் பிரதோஷம்



பிரதோஷம் என்றால் ...?

பிரதோஷம் என்பது ராத்திரி பொழுதின் தொடக்கம் என்றும், நல்ல நேரம் என்றும் பொருள்தரக் கூறப்படுகிறது. மனிதர்கள் கொண்ட அத்தனை தோஷங்களையும் அழிப்பதோடு, வேறு தீய சக்திகள் தரும் இன்னல்கள் நீங்கும்படி அருளும் சிவபிரானை வணங்கத்தக்க நன்னாளாக பிரதோஷ காலம் கொண்டாடப்படுகிறது.

பிரதோஷ வேளை பகற்பொழுது முடியும் நேரம் முதல் வானில் நிலவு தோன்றும் நேரம் வரையும் கணக்கிடப்படும்.

பிரதி மாதம் அமாவாசை திதி நாளில் தொடங்கி 13ஆவது நாளும், பௌர்ணமி திதியிலிருந்து 13 ஆம் நாளும் திரயோதசி திதி வரும். அந்தத் திதி நாளே, பிரதோஷ நாள் எனப்படும்.
இப்படி ஒவ்வொரு மாதத்திலும் இரண்டு பிரதோஷங்கள் உண்டு.

கிருஷ்ண பட்ச திரயோதசி திதியில் பூஜையை ஆரம்பித்து ஒரு வருட காலமும் பிரதோஷ பூஜை செய்து உத்யாபனம் புரிதலே மகாப்பிரதோஷம் என வழங்கப்படுகிறது. இவ் விரதத்தை ஆண்டு தோறும் வரும் ஐப்பசி, கார்த்திகை, சித்திரை, வைகாசி என நான்கு மாதங்களில் ஒன்றில், சனிக்கிழமையில் இடம்பெறும் பிரதோஷத்திலிருந்து முதலாவதாக ஆரம்பித்து அனுஷ்டித்தலே முறையானது. இவ்வாறு வருகிற சனிப்பிரதோஷம் மிக உயர்வானது என்பார்கள் ஆன்மீகப் பெரியவர்கள்.

பிரதோஷ தினத்தில் பகவான் மகாவிஷ்ணு கைலாயத்தில் இருந்ததை நினைவூட்டும் முறையில்தான், வைணவ திருக்கோயில்களில் இன்றும் மாலை 5:45 மணிக்கு மேல் மாலை 6:30 மணிக்குள் வருகிற பிரதோஷ காலத்தில் திரையிடும் ஐதீகம் உள்ளது.
பிரதோஷம் இப்படி ஐந்து வகையாகிறது.

### நித்தியப் பிரதோஷம்

தினமும் சூரியன் பிற்பகல் மறைவதற்கு மூன்று நாழிகைக்கு முன்பு தொடங்கி, நட்சத்திரங்கள் வானில் தெரியும் வரை உள்ள காலத்தில் வருவதே நித்யப் பிரதோஷம்.

### பட்சப் பிரதோஷம்

சுக்ல பட்ச சதுர்த்தி நாளில் மாலை வேளையில் வருவதே பட்சப் பிரதோஷம் எனப்படுகிறது.

### மாதப் பிரதோஷம்

ஒவ்வொரு அமாவாசை திதியிலிருந்தும் 13 ஆம் தினம் வரும் திரயோதசி திதியில் வருவது தான் மாதப் பிரதோஷம் ஆகிறது.

### பிரளயப் பிரதோஷம்

பிரளய காலத்தில் அனைத்தும் சிவபெருமானுடன் ஐக்கியமாகும் வேளையில் இடம் பெறுவதே பிரளயப் பிரதோஷம் ஆகும்.

### சோம சூத்திரப் பிரதோஷம் என்கிறார்களே அது என்ன தெரியுமா?

பிரதோஷ காலத்தில் ஆலயங்களில் வழக்கமாக வருவது போல ஆலயப் பிரதட்சணம் செய்யாமல், அப்ர (எதிர் வகை) பிரதட்சணம் செய்தல் தான் அது!
அந்த முறை விளக்க மிது.
முதலில் நந்தி தேவரை தரிசித்து விட்டு, அங்கிருந்து இடப்புறமாகத் திரும்பி சண்டிகேசுவரத்தேவரை வணங்கி முடிந்ததும், மறுபடியும் நந்தியை வணங்கி, அவருடைய இரண்டு கொம்பின் மூலம் பிரணவ மந்திரத்தோடு கூடிய, ‘ஹர ஹர’ என உச்சரித்து, ஈஸ்வரனைத் தரிசித்து வணங்க வேண்டும். இவ்வகை பிரதட்சணம் கொண்ட பெயரே சோம சூத்திரப் பிரதட்சணம். இவ்வாறு பிரதோஷ வேளையில் சுற்றுவதை மேற்கொள்ள அது மிக நற்பலன்களை அருளிவிடும்!

இந்த அப்பிரதட்சண முறை ஒரு புராணப் பின்னணியைக் கொண்டுள்ளது.
புராண காலத்தில் தேவர்களும், அசுரர்களும் இணைந்து அமிர்தத்தைப் பெறுவதற்காக, மந்தார மலையை மத்தாயும், வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகவும் கொண்டு அவர்கள் திருப்பாற் கடலைக் கடைந்தனர்.
இப்படி அவர்கள் செய்து கொண்டே இருக்கையில் ஒரு இரவு கழிந்து, மறுநாள் ஏகாதசி திதி காலை வரை செய்ய, வாசுகிப் பாம்பு திணறிப்போய் கக்கிய விஷமும், அப்பொழுது கடலில் தோன்றிய ஆலமும் சேர்ந்து ‘ஆலகாலமாகி’ அனைத்து இடங்களும் புகைமண்டலத்தில் மூழ்கி விட்டன. அதனால் அனல் உற்பத்தியாகி கடுமையாகி விட்டது. அதனுடைய மிக வெப்பத்தைத் தாங்க இயலாத தேவர்கள் கூட்டம் திருக்கயிலையை நோக்கி விரைந்து வலமாகச் செல்ல முயன்றனர். ஆனால் பரவி விட்ட புகை மண்டலமோ, தேவர்கள் அவ்வாறு செல்ல தடையானது.
எனவே வேறு வழியின்றி வானுலகத் தேவர்கள் கூட்டம் அப்ரதட்சணமாக (இடதுபுறம்) ஓடி சிவனை தரிசித்து நிவாரணம் அடைந்தார்கள். எனவேதான் பிரதோஷ காலத்தில் இந்த அப்பிரதட்சண முறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**ஆர். வைத்தியநாத சுவாமி**



# மங்கள காரியங்களை நடத்தி வைக்கும் சர்வமங்களா தேவி எந்திரம்



திரு. செந்தில் நாதன்
ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்

திதிகளில் பதிமூன்றாம் திதியான திரயோதசி திதியை ஆள்பவள் இந்த சர்வமங்களா தேவியாவாள். சர்வம் என்றால் அனைத்தும் என்று பொருள்படும். மங்களம் என்றால் சுபகாரியம் என்று பொருள்படும். சில குடும்பங்களில் பெண் பிள்ளை பெரிய பெண் ஆவதில் தாமதம் ஏற்பட்டு இருக்கும். சிலருக்கு திருமணம் ஆவதில் தாமதம் ஏற்பட்டு இருக்கும். சிலருக்கோ குழந்தை பிறப்பில் சிக்கல் மற்றும் தாமதமும் ஏற்பட்டு இருக்கலாம். இது போன்ற சுப காரியங்கள் ஏற்படுவதற்கு தடை மற்றும் தாமதம் ஏற்பட்டு இருந்தால் அந்த சுபகாரியங்கள் நடப்பதில் தடை மற்றும் தாமதங்களிலிருந்து விடுபட்டு அச்சுபகாரியங்கள் விரைவாக நடக்க இந்த சர்வமங்கள தேவி எந்திர வழிபாட்டு முறைகள் மிகவும் பயன் உள்ளதாக உள்ளது.


இந்த சர்வமங்கள தேவி திரயோதசி திதியை ஆழ்பவள் என்பதால் திரயோதசி திதியில் பிறந்தவர்களும் இந்த சர்வமங்கள தேவி எந்திரத்தை வைத்து பூஜித்து வந்தால் நேர்மறையான எண்ணங்களையும் தன்னம்பிக்கையையும் அவர்களுக்கு ஏற்படுத்தி அவர்கள் எடுக்கும் எல்லா முயற்சிகளிலும் வெற்றியை கொடுக்கக்கூடியது இந்த சர்வமங்கள தேவி எந்திரம் ஆகும்.

இந்த சர்வமங்கள தேவியின் யந்திரத்தை பூஜை அறையில் கிழக்கு அல்லது வடக்கு நோக்கி வைத்து, சந்தன குங்கும திலகமிட்டு தினமும் செவ்வரளி மலர் கொண்டு பூஜித்து தீப தூப ஆராதனை காட்டி கீழே கொடுக்கப்பட்டிருக்கும் மந்திரத்தை 108 முறை கூறிவந்தால் வீட்டில் மங்கள காரியங்களை விறைவாக முடித்து தரும் வல்லமை இந்த சர்வமங்களா தேவி எந்திரத்திற்கு உண்டு.

சர்வமங்களா தேவியின் காயத்ரி மந்திரம்:
“ஓம் ஸர்வமங்களாயை வித்மஹே
சந்த்ராத்மிகாயை தீமஹி
தன்னோ நித்யா ப்ரசோதயாத்”

### சர்வமங்களா தேவியின் எந்திரம்:





## மந்திர மகிமை

# விஞ்ஞான, மெய்ஞான அறிவுபெற...

ஜகத்குரு ஆதிசங்கரர் அருளிய 'செளந்தர்ய லஹரி' எண்ணற்ற பொக்கிஷங்களை தன்னுள் அடக்கியதாய் உள்ளது. இதில் உள்ள ஒவ்வொரு பாடலும் அன்னையின் அழகினை வர்ணிப்பதோடு, வேதத்தின் தன்மை பொருந்திய மந்திரச் சொற்களை உள்ளடக்கி, மாயம் செய்யும் தன்மையினைக் கொண்டதாய் விளங்குகின்றது.

அந்த வகையில் செளந்தர்ய லஹரியின் 17 வது பாடல், மூடர்களைக் கூட, விஞ்ஞான அறிவும், மெய்ஞானம் என்னும் ஆன்மீக அறிவும் பெறத்தக்க வகையில் வலிமை வாய்ந்ததாக விளங்குகின்றது. அதனை விளக்கமாகப் பார்க்கலாம்.

மந்திரப் பாடல்:

ஸவித்ரீபிர் வாசாம் சசிமணி சிலாபங்க ருசிபிர்  
வசின்யாத்யாபிஸ் த்வாம் ஸஹ ஜனனி ஸஞ்சிந்தயதி ய:  
ஸ கர்த்தா காவ்யானாம் பவதி மஹதாம் பங்கிருசிபிர்  
வசோபிர் வாக்தேவீ வதன கமலா மோத மதுரை

இதுதான் அந்தப் பாடல். இதன் உட்பொருள் என்னவென்று பார்க்கலாம்.
"அன்னையே! வாக்கு வன்மையை கொடுக்கக்கூடியவளும், ஒளிமிகுந்த சந்திரகாந்தக் கல்போல் ஒளிவீசும் தன்மை உடையவளுமான வாக்தேவி என்கிற தேவதையை உன்னுள் வைத்திருக்கிறாய்; இத்தனை ஆற்றல் கொண்ட உன்னை யார் ஒருவர் எப்போதும் சிந்திக்கின்றாரோ... அவர் மாபெரும் காவியங்களைப் போல் அழியாதத் தன்மை பெறுவதோடு, கலைமகளின் ஆசனமான தாமரை போன்ற நறுமணமிக்க வார்த்தைகளால் புனையப்பட்டது மான காவியங்களைப் படைக்கின்ற ஆற்றலையும் பெறுவார்."

பிரயோகிக்கும் முறை:
இந்த மந்திரப் பாடலுக்கான யந்திரத்தை, தங்கம் அல்லது தாமிரத் தகட்டில் வரைந்து கொள்ள வேண்டும். 45 நாட்கள், சரியாக 1000 முறை என, வடகிழக்கு முகமாய் அமர்ந்து ஜெபிக்க வேண்டும்.

செண்பக மலர்களைக் கொண்டு லலிதா அஷ்டோத்ரம், சரஸ்வதி அஷ்டோத்ரம், அர்ச்சனை செய்தல் நலம்.
பால், தேன் என இனிப்பான பொருட்கள் சேர்ந்த அன்னத்தால் நைய்வேத்யம் செய்ய வேண்டும்.

மேற்கண்ட முறையில் இந்த மந்திரத்தை ஜெபித்து வந்தால் நுட்பமான விஞ்ஞான அறிவு வளர்வதோடு, சகல ஆன்மீக கலை மற்றும் சாஸ்திரங்களில் தேர்ச்சியும் பெற்று, நல்லோர் உறவும் கைகூடும்.



ரா. பன்னீர்செல்வம்



# ஆனந்தம் பெரிதா... அமைதி பெரிதா...

ஆனந்தமும் அமைதியும் ஒரு சேர இருந்தால் எளிதில் மெய்ஞானம் பெறலாம். ஆனந்தமும் அமைதியும் சங்கமிக்கும் திருத்தலம் ஸ்ரீ நடராஜ பெருமான் எழுந்தருளும் திருத்தலம் தில்லை! எல்லையே இல்லாத ஆனந்தம் எழுகின்ற அற்புத திருத்தலம்! ஸ்ரீ நடராஜ பெருமான் திருத்தலம். சிதம்பரத்தில் அமைந்துள்ள ஸ்ரீ ஆனந்த நடராஜர் திருக்கோயில்.

மனிதனின் குணத்தை உணர்த்துகிறார் சிவன். மனிதன் மகிழ்ச்சியின் உச்சத்தில் இருக்கும் போது தன்னை மறந்து ஆடுகின்றான். களிப்பு கட்டுக்கடங்காத போது ஆடி ஆடி மகிழ்கின்றான். மனதில் உற்சாகம் கரைபுரண்டு ஓடுகிற போது கால்கள் சோர்வுறும் வரை ஆடித்தீர்க்கின்றான்.

36 சிவ மகா தத்துவங்களை உணர்த்தியபடியே திருநடம் புரியும் சர்வேஸ்வரன் உருவமாக, அருவமாக, அரு உருவமாக உள்ளதை உணர்த்துவதே சிதம்பர ரகசியம். பரிமேலழகர் வைணவர். ஆனாலும் திருக்குறளில் எண்குணத்தான் என்ற சொல்லாட்சியை சொல்லும் போது சிவபெருமானையே உணர்த்துகிறார். சிதம்பர மகா சிவாலயத்தில் சிவ சந்நிதிக்கு அருகே கோவிந்த ராஜ பெருமாளை ஆனந்த சயன திருக்கோலத்தில் தரிசிக்கலாம்.

களிப்பு தீர்ந்த பிறகு மனம் அமைதியைத் தேடுகிறது. மனதை அமைதி வெல்லும் போது உறக்கம் தலைப்படுகிறது. மனதில் சுமை எழும் போது உறக்கம் விடைபெறுகிறது. தெளிந்த நீரோடை போன்ற மனமே உறக்கத்திற்கு வழிகோல்கிறது. துயில் ஒன்றே மனநிறைவைத் தருகிறது. அமைதியிலும் ஆனந்தம் இழையோடுகிறது. ஆடிக்களைத்த ஈசனைக் கூட கால் மாற்றி ஆட வேண்டினான் ஓர் அடியவன். பெருமாளோ அமைதியின் வடிவமாக மனிதன் வாழ உணர்த்துகிறார். மாலவனின் மனச்சுமையை, அவரைத் தாங்கும் ஆதிஷேஷனால் கூட சுமக்க முடியவில்லை. உடல் சுமையை விட உள்ளச் சுமையே பெரிதும் வருந்த வைப்பது. அதனால் அன்றோ ஈசன் சங்கர நாராயணராக அருட்காட்சி தரமுடிகின்றது.

“தாழ்சடையும் நீள்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்
சூழ்அரவும் பொன்னாணும் தோன்றுமால் சூழும்
திரண்டருவி பாயுந் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து”

என்று பேயாழ்வார் மொழிகின்றார்.

இந்த ஆன்மீகச் சங்கமத்தில் ஆழ்ந்திருப்போர் ஆனந்தத்தில் எல்லை மீறாமலும், அமைதியில் ஆழ்ந்திருப்பதும் தெய்வ சங்கல்பம் என்றால் அது மிகையில்லை.



சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர். சீனு. செந்தாமரை
கடலூர்



# மாமழை போற்றுதும்!

கோடை வெப்பம்
ஏற்படுவது எதனால்?
ஏரி குளம்
குட்டை சுனை
கொண்ட நீரை
கதிரவா! கடனாய்
பெற்று நீ
உறிஞ்சி உறிஞ்சி
பின் எதனாலோ
மழை வட்டியை
கட்ட மறக்க
மக்கள் வெந்து போகவும்
பயிர் பச்சை
விளைச்சல் போம்!
பின் மனம்மாறி
அசலில் ஓர் பகுதி
செலுத்திட ஐயகோ!
வந்திடும் பெரும் வெள்ளம்
பூமிக்கு சாபமாகும்!
முழு அசலும் உன்னிடமிருந்து
திரும்பிட விளைவு
பிரளய வரவாகி
உயிர்களும் பயிர்களும்
ஒருமித்து அழியும்
வேண்டாம் சூரியா,
அசல் வேண்டவே வேண்டாம்
தொடர் வட்டியே
வந்தால் போதும்!
மாதம் மும்மாரி
பொழிந்திட நானிலம்
போற்றி மகிழும்
மாரி, பகலவா!
உங்கள் இருவரையும்!
நீயின்றி நீரின்றி
இவ்வுலகு ஏது?

ஆருரன்



# குறளும் பொருளும்

நகரில் புதிதாக தொடங்கப்பட்ட மருந்து கம்பெனி! திறமையும், பொறுப்பும் உள்ள நான்கு நண்பர்கள் ஒன்றாக இணைந்து, தாங்கள் பணியாற்றிய மருந்து கம்பெனிகளில் பெற்ற அனுபவத்தினை வைத்து, நோயாளிகளுக்கு பக்க விளைவுகளை ஏற்படுத்தாத, வீரியமிக்க மருந்துகளைத் தயாரித்து விநியோகம் செய்யத் தொடங்கினர்.

புதிய மருந்து கம்பெனி என்பதால் மருந்தின் தரத்தை சரியாக விளக்கி, விற்பனை செய்வதற்கு, திறமையான விற்பனைப் பிரதிநிதிகளை வேலைக்கு அமர்த்த, நேர்காணல் ஒன்றை நடத்தினர்.

இந்த நேர்காணலின் வாயிலாக ஒன்பது பேர்களைத் தேர்ந்தெடுத்தனர். தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவருக்கும் நிர்வாக இயக்குனரான தர்மதுரை, மருந்தின் தன்மைகள், நோயின் விபரங்கள் என அனைத்தையும் தெரிவித்து, கூடவே... எந்த நிலையிலும் இந்த மருந்தை எடுத்துக் கொள்வோருக்கு எந்தவித பக்க விளைவுகளும் ஏற்படாது என்கிற தன் கம்பெனியின் தனித்துவத்தை சிறப்பித்துக் கூற வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறி, உறுதி செய்ய வேண்டும் என விற்பனைப் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுக்கு அறிவுறுத்தினார்.

மறுநாள், புதிதாக வந்த விற்பனைப் பிரதிநிதிகள் அனைவரும் வந்தனர். அனைவரிடமும் 'மாதிரி' மாத்திரைகள் அடங்கிய 'பை' கொடுக்கப்பட்டு, அவர்கள் செல்ல வேண்டிய பகுதியும் குறிப்பிட்டுச் சொல்லப்பட, அனைவரும் புறப்பட்டனர்.

தங்கள் நிறுவன மருந்துகள் வெளிச்சந்தையில் வெளிச்சத்திற்கு வரப்போகிறது; இனி, தொழிலில் நல்ல வளர்ச்சியை அடைந்து விடலாம் என்ற நம்பிக்கையோடு, அவர்கள் கொண்டுவரப் போகும் 'மருந்தாணை' களுக்காக காத்துக் கொண்டிருந்தார், தர்மதுரை!
மாலை நேரம்... ஒவ்வொருவராக வந்தனர். தாங்கள் சந்தித்த மருத்துவர்கள், மருத்துவமனைகள், மருந்துக் கடைகள் போன்ற விவரங்களைத் தந்து ₹5000, ₹10000 என தாங்கள் பெற்றுவந்த மருந்துகள் தேவை என்பதற்கான 'மருந்தாணை' களைக் காட்டினார்கள். விற்பனை பிரதிநிதிகள் எட்டு பேரும் சேர்ந்து மொத்தமாக ஆறு லட்ச ரூபாய் பெறுமானமுள்ள மருந்துகளுக்கான ஆணையினைப் பெற்று வந்திருந்தார்கள். தர்மதுரை மகிழ்ந்தார்.

எல்லோரையும் பாராட்டியதோடு, தொடர்ந்து இப்படியே விற்பனையைப் பெருக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இன்னும் ஒருவன் வரவே இல்லை; யார் அது?... கண்ணபிரான்?... அவன் மட்டும் ஏன் இன்னும் வரவில்லை? நேரம் ஆகிக் கொண்டே இருந்தது.
தர்மதுரை வீட்டிற்குப் புறப்பட எத்தனித்த வேளையில், உள்ளே நுழைந்தான், இளைஞன் கண்ணபிரான்! அங்கே நின்றிருந்த மற்ற எட்டு பேரும் அவன் எவ்வளவு ரூபாய்க்கு 'ஆணை' பெற்றிருப்பான் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவலில் நின்றிருந்தனர்.

தர்மதுரை கண்ணபிரானிடம், "நீ எவ்வளவு ரூபாய்க்கு...?" என அவன் முகத்தைப் பார்க்க... தலை குனிந்தபடி நின்றான். தர்மதுரைக்கு ஒன்றும் புரியவில்லை. "சொல்லுப்பா... என்ன ஆச்சு?" சற்றே குரலை உயர்த்திக் கேட்டார்.

கண்ணபிரான் பொறுமையாக, ஒரு புகழ்பெற்ற மருத்துவமனையின் பெயரைச் சொல்லி, தான் அங்குபோய் கம்பெனி மருந்தினை அறிமுகம் செய்ததாகக் கூறினான்.

அந்த மருத்துவமனை மிகவும் பெரியது. புகழ்பெற்றது. சென்னையில் மட்டுமே நான்கு இடங்களில் அமைந்துள்ளது. இது தவிர, நாட்டின் முக்கிய நகரங்களிலெல்லாம் கிளைகள் உள்ளன. போதாக் குறைக்கு, இவர்களின் அங்கீகரிக்கப்பட்ட மருந்தகங்கள் 500 க்கும் மேற்பட்டவை நாடு முழுவதும் உள்ளன.



அப்படிப்பட்ட இடத்திற்கு போய் நமது மருந்தை அறிமுகம் செய்தேன் என கண்ணபிரான் சொன்ன மறுவினாடி மற்ற எட்டு பேரிடமிருந்தும் ஏளனச் சிரிப்பு வெளிப்பட்டது. தர்மதுரை மட்டும் அவனையே பார்த்தபடி இருந்தார். எட்டு பேர்களில் ஒருவன் சிரித்தபடியே சொன்னான், “அவங்க எப்படிப்பட்ட நிறுவனம்...? புது கம்பெனி மருந்தை அவங்க வாங்குவாங்களா? நாம இப்பதான் சந்தையில அறிமுகமாகிறோம். அதுக்குள்ள அங்க போய் காத்திருக்கிறது வீண் வேலைனு தெரியாதா, கண்ணபிரான்!?

இன்னொருவன், “அந்த நேரத்துல பத்து இருபது மருந்து கடையில ஏறி இறங்கி இருந்தால... ரெண்டாயிரம் மூவாயிரம்னு ஏதாவது கிடைச்சிருக்கும்” என்று ஏளனம் செய்தான்.

மற்றொருவன், “நோயாளிகளே செலவுக்குப் பயந்து அந்த மருத்துவமனைக்கு போகப் பயப்படுவாங்க! நீ எந்த தைரியத்துல அங்க போனே?!” என்றான். எல்லோரும் ஏளனமாகப் பார்த்தார்கள். தர்மதுரை பொறுமையிழந்து, “எல்லோரும் கொஞ்சம் சும்மா இருங்க; நீ சொல்லு, கண்ணபிரான்...” என்றார்.

“நம்ம மருந்து, மாத்திரைகளைப் பத்தி விளக்கிச் சொன்னேன். உடனே, சில மருந்துகளை வாங்கி, அவங்களோட ஆய்வுக்கூடத்துக்கு அனுப்பிட்டாங்க! நாளைக்கு முடிவு வந்துடுமாம். நம்ம மருந்தோட தரம்... நாம சொன்ன மாதிரி இருக்குதுன்னு சோதனை முடிவுகள் வந்துட்டா... உடனடியா... நாளைக்கே முப்பது லட்சம் ரூபாய்க்கான ஆணையை கொடுத்துடறதா சொல்லி இருக்காங்க சார்...” என்றான் அடக்கமாக!

எல்லோரும் திகைப்பில் உறைய...

பூத்துக் குலுங்கும் புன்சிரிப்போடு கைதட்டினார். கண்ணபிரானை கட்டித் தழுவினார்; கைகுலுக்கினார் தர்மதுரை...

எல்லோரையும் பார்த்துச் சொன்னார், தர்மதுரை... “நான் இவ்வளவு சந்தோஷப்படுறது ஏன் தெரியுமா? நீங்க எல்லோருமே பல இடங்கள்ல அலைஞ்சி திரிஞ்சி, சுமார் ஆறு லட்சத்துக்கும் அதிகமான விற்பனைக்கு வழி செஞ்சிருக்கீங்க... ஆனா... எடுத்த எடுப்பிலேயே.. எல்லோரும் போகத் தயங்கற ஒரு இடத்துக்குப் போயி, முயற்சி செய்திருக்கார் கண்ணபிரான்! அவங்க சொன்னது போல மருந்த வாங்கலனாலும் நம்மோட புதிய தயாரிப்புகளை பத்தி அவ்ளோ பெரிய இடத்துல தெரியப்படுத்துனதே பெரிய சாதனையா நெனைச்சுக்கலாம். ஒருவேளை அவங்க நம்ம மருந்த வாங்கனும்னு முடிவு பண்ணிட்டா... நம்ம நிறுவனம் ஒரே நாள்ல பிரபலமாகிடும். அதனாலதான் கண்ணபிரானோட முயற்சிய நான் அதிகம் பாராட்டினேன். அதனால உங்க முயற்சிய குறைச்சி மதிப்பிடறதா யாரும் நெனைக்க வேண்டாம். வள்ளுவர் சொல்லியிருக்காரு...

“கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவே லேந்தல் இனிது” ன்னு.

அதாவது, வேல் எடுத்துக்கிட்டு வேட்டைக்குப் போனவன், ஒரு முயலை வேட்டையாடி கொண்டு வர்றதவிட, ஒரு யானைக்கு குறி வச்சேன்; அது தப்பிச்சிடுச்சுன்னு வேலோட வந்து நிற்கிறது மேல்; அதுதான் கண்ணபிரான்” என பெருமையாகச் சொன்னார்.

**தமிழ் வசந்தன்**



## ஆன்மிக சிறுகதை

# வண்டிக்காரன்

அந்த கோவிலுக்கு நீண்டு, உயர்ந்த அழகான மதில்சுவர். சிவப்பு, வெள்ளை பட்டை தீட்டப்பட்டு அழகாகக் காட்சியளித்தது! ஊரின் மையத்தில் இருந்தது இந்த கோயில். சுற்றிலும் நான்கு மாட வீதிகள். அருகிலேயே ஆலயத்தின் தீர்த்த குளம்.

தெற்கு மாட வீதியில் குளத்துக்கும், மதில் சுவருக்கும் இடையில் விசாலமான சாலை. இந்த சாலையில் குளத்தினையொட்டி கரையில் வரிசையாக தேங்காய், பழம், பூ விற்கும் பிரசாத கடைகளும், இன்னும் பல கடைகளும் இருந்தன. இந்த கடைகளின் எதிரே மதில் சுவரையொட்டி சற்று பெரிய அளவில் வளர்ந்திருந்த ஓர் புன்னை மரம்! அந்த மரத்தையே ஒரு தூணாய்க் கொண்டு சிறு தகர கொட்டகை. கொட்டகைக்கு வெளியே மரத்தடியில் கட்டப்பட்டிருந்தது ஒற்றை மாடு. அதனருகே ‘பேரல்’ வைத்துக் கட்டப்பட்டிருந்த ஓர் வண்டி.

இந்த வண்டிக்கும் மாட்டுக்கும் சொந்தக்காரன் யார்? அதாவது அந்த வண்டிக்காரன் யார்? அவன் பெயர் டாமு! இது என்ன பெயர்? யார் வைத்த பெயர்?
சுமார் 25 வருடங்களுக்கு முன்பு கருடசேவை நடந்த அன்று யாரோ தவறவிட்ட இரண்டரை வயது குழந்தையை, அங்கு பூக்கடை வைத்திருந்த ஒரு பெண்மணி எடுத்து ஆதரித்து வந்தார். குழந்தையைத் தேடிக் கொண்டு யாரும் வரவில்லை. தானே பாசத்தோடு வளர்க்க ஆரம்பித்தார்.
அந்த வயதிலேயே சுறுசுறுப்பாக இருந்த குழந்தை, அடிக்கடி குளத்தில் இறங்க முயற்சிப்பான். இவள்

குழந்தையைப் பார்ப்பாளா? தன் வியாபாரத்தை கவனிப்பாளா? அரைஞாண் கயிற்றில் ஒரு கயிறைக் கட்டி, கடையின் கம்பத்தில் கட்டி வைத்திருந்தாள். கோவிலுக்கு வந்த பாகவத குழுவில் இருந்த ராம பாகவதர் என்பவர் அவனது செய்கைகளைக் கூர்ந்து கவனித்து, குழந்தைக்கு தாமோதரன் என பகவானின் பெயரைச் சூட்ட... அங்கிருந்த அனைவரும் தங்கள் வசதிக்கு ஏற்ப அவனை 'டாமு, டாமு' என சுருக்கி அழைத்தனர்.

ஆயிற்று!... முப்பது வயதை நெருங்கிக் கொண்டிருந்தான் டாமு! புன்னகை ததும்பும் முகம். கருத்த தேகம். வலிமை பொருந்திய தோள்கள். யார் என்ன வேலை சொன்னாலும் தட்டாமல் செய்வான்.
தன்னை வளர்த்த பூக்கார பெண்மணி மறைந்தபின் அங்கிருந்த கடைக்காரர்கள் எல்லாம் ஒன்றுகூடி பேசி, ஆலய முகப்பில் உள்ள குடிநீர் தொட்டிக்கும், தங்கள் தொழிலுக்கும் தேவைப்படும் குடிதண்ணீரை அரை கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் குளத்திலிருந்து கொண்டு வர ஒரு வண்டிமாட்டை ஏற்பாடு செய்து கொடுத்தார்கள். பதினைந்து வருடமாக டாமுவுக்கு இதுதான் பிழைப்பு! காசு, பணம் எதையும் யாரிடமும் எதிர்பார்க்க மாட்டான்.
உணவு வேளைகளில் அவன் அங்கிருக்கும் கடைகளுக்குச் சென்று உட்கார்ந்து தேவையானதைக் கேட்டு சாப்பிடுவான். மற்றபடி காசு, பணத்தை எதிர்பார்த்ததும் இல்லை. சல்லிக்காசு கூட வைத்துக் கொள்வதும் இல்லை.

டாமுவிடம் இருக்கும் பல அரிய குணங்களை அறிந்த பல கடைக்காரர்களின் எண்ணம் என்னவென்றால் இவன் வெகுளியா? துறவியா? மகானா? என்பதுதான். எல்லோர்க்கும் செய்யும் தொண்டு, கருணையும் இரக்கமும் உள்ள மனம், ஆண்டவனை வேண்டிக் கூட அதைக்கொடு, இதைக்கொடு என்று கேட்காத குணம், வெள்ளந்தியான பேச்சு; அதில் இழைந்து கிடப்பது தத்துவமா? சித்தாந்தமா? என எவராலும் அறியமுடியாத கருப்பொருள்! இதுதான் டாமுவின் மொத்த வெளிப்பாடு. நாலுமுழ வேட்டியை முழங்கால் தெரிய கட்டிக்கொண்டு அவன் தண்ணீரை கடைகளுக்கு ஊற்றும் போது, அந்த தண்ணீர் சிதறித் தெளித்து இவனது வேட்டியை நனைத்து, கால்களை சிக்கவைக்கும். அந்த ஈர வேட்டியால் தடுமாறி விழாமல் இருக்க காலை எட்டிவைத்து அவன் நடக்கும் பாணியே அவனது அடையாளமாய் ஆகிப்போனது!
ஒருநாள்... வளையல் கடைக்காரர் ரங்கசாமி அழைத்து இவனிடம் இரண்டு வாழைப் பழங்களைக் கொடுத்தார். பழத்தை உரித்து அவன் ரசித்து சாப்பிடும் அழகைப் பார்த்தவாறே, "ஏன்டா, டாமு... எதப்பத்தியும் கவலப்படாம, எப்பவும் இவ்ளோ சந்தோஷமா இருக்கியே.. இது.. உன்னால எப்படிடா முடியுது?" எனக் கேட்டார்.

"எங்கிட்ட எதிர்பார்ப்பே இல்லைங்க அய்யா! இன்னைக்கு பழம் கொடுத்தீங்க... நாளைக்கும் நான் இத உங்ககிட்ட எதிர்பார்க்கக் கூடாது. இப்படித்தான் எல்லாமே. நீங்களும் இந்த மாதிரி இருந்து பாருங்க!" என்றவாறு இரண்டாவது பழத்தின் தோலை உரித்தான்.

"டேய்... நீ ஒன்னும் இல்லாதவன்; எதையும் எதிர்பார்க்க மாட்டே; உன்னால முடியும்! ஆனா கடன உடன வாங்கி கடவச்சி தொழில் பண்ற நான் அப்படி இருக்க முடியுமாடா? ராத்திரியில படுத்தா தூக்கம் வரவே மாட்டுதுடா!" என்றார் ரங்கன்.

சிரித்த டாமு, "அய்யா... ஒன்னும் இல்லாம இருக்கிற எனக்கும் சரி.. எல்லாம் இருக்கிற மத்தவங்களுக்கும் சரி.. ரெண்டும் ரெண்டும் நாலுதான்; கணக்கு ஒன்னு தானே!? நான் யாரு? எனக்கே தெரியாது! ஆனா, எனக்குன்னு இவ்ளோ பேர் இருக்கீங்களே... விவரந்தெரிஞ்சு, நான் ஒருவேள கூட பட்டினியா இருந்ததில்ல; தண்ணிய கொண்டுவந்து தர்ற வேலைய எனக்குன்னே அந்த கடவுள் கொடுத்ததா நெனச்சு, நாம்பாட்டுக்கு அந்த வேலய செய்யறேன்; இங்க இருக்கற நீங்கள்லாம் என்னோட தேவைய பாத்துக்கிறீங்க. எனக்கு உழைப்பு மூலதனம். உங்களுக்கு பணந்தான் மூலதனம். நான் என்னோட கடமைய செய்யற மாதிரி, நீங்க உங்க கடமைய வியாபாரத்தை செய்ங்க. கடமையச்செய்; பலனை எதிர்பாராதேனு பகவான் சொன்ன மாதிரி இருந்துட்டுப் போங்க! எல்லாம் தன்னால நடக்கும்" என்றான்.

“என்னடா பெரிய பெரிய பேச்செல்லாம் பேசுற... இதையெல்லாம் எங்கடா கத்துக்கிட்ட?” ரங்கன்.
“நான் என்ன பள்ளிக்கூடம் போயா இதையெல்லாம் கத்துக்கிட்டேன்... எல்லாம் நம்ம ராமானுஜ தாச பாகவதர் வருவாரே அவர் சொல்லிக் கொடுத்தது தான்... அய்யா... பூக்கட வச்சிருக்காங்களே அமிர்தம் அம்மா... அவங்க... வியாபாரம் ஆகுதோ இல்லையோ மீதி இருக்கிற பூ, துளசிய எல்லாம் பகவானுக்கு கொடுத்துட்டு போயிடுவாங்க! மறுநாள் புதுப்பூவ வாங்கிட்டு வந்து விப்பாங்க. ஏன்னு கேட்டா... தலைக்கு வச்சிக்கிற பூவுன்னா மூனு நாள் கூட வச்சு விக்கலாம். சாமிக்கு போடுற பூ... புதுசாத்தான் இருக்கனும்னு சொல்வாங்க. அவங்களப் போய் கேட்டுப்பாருங்க... ராத்திரியில ஒம்போது மணிக்கெல்லாம் சாப்பிட்டு படுத்து நிம்மதியா தூங்கி, காலைல எழுந்து புதுசா பூவ வாங்கிவந்து வியாபாரம் பண்றாங்க!” டாமு பரவசத்தோடு சொல்ல, குறுக்கிட்ட ரங்கன், “சரிடா... எனக்கும் அதுக்கும் என்னடா சம்பந்தம்? இத ஏன்டா எங்கிட்ட சொல்ற?!” என்றார் சற்றே கடுப்போடு.

“காரணம் இருக்குங்க... இவ்வளவு பெரிய கடைய வச்சி, வியாபாரம் பண்ணி... படுத்தா தூக்கம் வரலைன்னு சொல்றீங்களே... அந்தம்மா சின்ன கடை, கொஞ்சமா வியாபாரம்... இது போதும்னு அதிகம் ஆசப்படாத மனசு... புருசன் இல்லாம ரெண்டு பொண்ணுங்களுக்கு கல்யாணம் பண்ணி வச்சிருக்காங்க!” டாமு.

இடைமறித்த ரங்கன், “என்னடா பெரிய கல்யாணம்... சிம்பிளா கோவில்ல பண்ணுனது ஒரு கல்யாணமா!?”
“பெரிய பெரிய பணக்காரங்களே... பகவான் சன்னதியில தான் கல்யாணம் நடக்கனும்னு வரலையா?... இதுவே போதும்னு நிறைவான மனசு இருந்தாலே, தன்னோட தகுதிக்கு ஏத்த ஏழை வீட்டுப் பையனுங்களா பார்த்து கல்யாணம் பண்ணி வச்சாங்க! அவங்களும் நல்லா இருக்காங்க. தம் பொண்ணுங்கள பெரிய இடத்துல, பணக்கார வீட்டுல கல்யாணம் பண்ண நெனச்சிருந்தா, கடன் வாங்கியிருப்பாங்க... இருக்கிற நிம்மதியும் போயிருக்கும். ஆனா அவங்களுக்கு நல்லா தெரிஞ்சிருக்கு... விரலுக்கு ஏத்த வீக்கம் தான் சரின்னு!... அதுப்படி செஞ்சி நிம்மதியா இருக்காங்க” என்று சிரித்தான் டாமு.

டாமு சொன்னதையெல்லாம் கவனித்து அவனை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த ரங்கன் மனதில் எண்ண அலைகள் மோதத் தொடங்கின.

“இத்தன வருஷமா இங்க இருந்து வியாபாரம் பண்றோம்... இவன் சொல்றதெல்லாம் சரியா தானே இருக்குது.” ரங்கன் யோசிக்கலானார்.
முப்பது ஆண்டுகளுக்கு முன் ஆந்திராவிலிருந்து பிழைப்பு தேடி இந்த ஊருக்கு வளையல் வியாபாரியாக வந்தவர், கோயிலுக்கு அருகே ஒரு கொட்டகை போட்டு உட்கார்ந்தவர், இன்று பெரிய கட்டடத்தில் கடையை நடத்தி வருகிறார்.

மனைவி இறந்து பத்து வருடம் ஆகிறது. ஒரே பெண் கன்னிகா. பத்தாவது வரை படித்தவள். அவளை ஒரு நல்ல இடத்தில் மணமுடித்துக் கொடுக்க வேண்டும். பெரிய இடமாய்த் தேடினால், அவர்கள் கேட்கும் வரதட்சணையும், சீரும் அதிகமாய் இருந்தது. இவரால் முடியவில்லை.
அதனாலேயே அதிக நேரம் கடையைத் திறந்து வைத்திருப்பார். என்ன செய்தாலும் ஓட்டுவது தானே ஓட்டும்... பேசாமல் டாமு சொல்வதைப் போல் நடப்பது நடக்கட்டும் என்று இருந்தால் என்ன என்று நினைத்தார்.
“இருபத்தேழு வயதுப் பெண்! அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடு பகவானே!” என ஆலயத்தின் உள்ளே இருக்கும் பெருமாளை மனதார வேண்டிக் கொண்டார்.

குடும்பப் பெண்ணுக்குத் தேவையான அழகு; அளவான உயரம்! மாநிறம்! தாயை இழந்த பின்னர், தந்தையின் நிழலில் அவர் நலனே தன் நலன் என வாழ்ந்து வரும் அடக்கமான பெண்; அவளை ஒருகணம் மனக்கண்ணில் உற்று நோக்கிய ரங்கன், தன் நெற்றியில் இட்டிருந்த திருமண்ணையே

திருமாலின் திருப்பாதமாக எண்ணி தொட்டு வணங்கிக் கொண்டார்.
அந்த பரந்தாமனின் கருணைப் பார்வை ரங்கன் குடும்பத்தின் மீது விழுந்தது! பக்கத்து ஊரில் இருந்து ஒரு தெலுங்கு குடும்பம் கன்னிகாவை பெண்பார்க்க வந்தது.

பெண்ணை அவர்களுக்குப் பிடித்து விடவே, பேச்சு வார்த்தை நடத்தினார்கள். அவர்கள் கேட்டதெல்லாம் அதிகம் தான் என்றாலும் எப்படியாவது இந்த சம்பந்தத்தை முடித்துவிட வேண்டும் என்பதால் அவர்கள் கேட்ட அனைத்தையும் தருவதாக ஒப்புக்கொண்டார் ரங்கன்!

நிச்சயதார்த்தம் நல்லமுறையில் நடந்து முடிந்தது. திருமணத்திற்கு இன்னும் நாற்பது நாட்களே இருந்த நிலையில் ரங்கன் கடையையும் பார்த்துக் கொண்டு, திருமணத்திற்கான ஏற்பாடுகளையும் கவனித்து வந்தார்.

எல்லா எடுபிடி வேலைகளையும் டாமு கவனித்தான். சீர்வரிசை பாத்திரங்கள், கட்டில், மெத்தை என ரங்கன் வாங்கப் போகும்போது இவனும் கூடவே சென்று அனைத்தையும் வீட்டிற்கு கொண்டு வந்து சேர்த்தான்.

ரங்கன், வரதட்சணையாகக் கொடுக்க வேண்டிய மோட்டார் பைக், ஒரு லட்சம் ரூபாய் பணத்தைப் புரட்ட அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தார். எல்லாவற்றிற்கும் உறுதுணையாக இருந்தான் டாமு.
ஒரு நாள்...
தன்னுடைய ஒற்றை மாட்டு வண்டியுடன் தண்ணீர் எடுக்க குளத்திற்குச் சென்றான். கிட்டத்தட்ட முப்பத்தாறு தவலை தண்ணீர் பிடிக்கும் அந்த வண்டியில் இருந்த 'பேரல்'.
இரண்டு தவலைகளை கையில் பிடித்து அந்த குளத்தின் நாற்பத்தெட்டு படிகளிலும் தாவித்தாவி, டாமு தண்ணீர் நிரப்பும் வேகத்தைக் கண்டு, தண்ணீர் எடுக்க வரும் ஊர்ப்பெண்கள் அனைவரும் ஆச்சர்யப் படுவார்கள்.

அப்படித்தான் அன்று... டாமு இரண்டு கைகளிலும் நீர்நிரம்பிய தவலைகளை பிடித்தபடி வேகமாய் படியேறும் லாவகத்தைப் பார்த்தபடி தண்ணீர் எடுத்தாள் கன்னிகா!
தனக்கு திருமணம் நடந்து விட்டால், இந்தக் குளம்; குளத்தைச் சுற்றியுள்ள மரங்கள்; இந்த இடத்தின் இயற்கை அழகு... இதையெல்லாம் பார்த்து பரவசப்படும் பாக்கியம் எப்படிக் கிடைக்கும்?
வாழ்க்கைப்பட்டு போகும் ஊரில் இம்மாதிரி ஒரு சூழல் இருக்குமா? பணக்கார வீடு என்கிறார்களே... அவர்கள் வீட்டிலேயே குடிதண்ணீர் குழாய் இருக்குமா? என்றெல்லாம் யோசித்தவாறே படியேறினாள் கன்னிகா!
இன்னும் மூன்றே படிகள்; கரையேறப் போகிறாள்; அவளது சிந்தனை திசைமாறி இருந்ததாலோ என்னவோ கால் தடுமாறியது! குடம் இடுப்பை விட்டு நழுவியது!
குடமும் கன்னிகாவும் போட்டி போட்டு உருண்டதைப் பார்த்து எல்லோரும் பதட்டத்துடன் குரல் கொடுத்தார்கள். புறப்படத் தயாராக இருந்த டாமு இதைக் கவனித்து விட்டான்.

முப்பது படிகளுக்கு மேல் உருண்ட கன்னிகா, “அய்யோ... அம்மா... கால் வலிக்குதே!” என்று கதறி அழுதாள். அவளால் கால்களை அசைக்க முடியவில்லை.

இரண்டு பெண்களின் உதவியுடன் டாமு, கன்னிகாவைத் தூக்கி வந்து அங்கே இருந்த ஒரு தள்ளுவண்டியில் போட்டு மருத்துவமனையை நோக்கி, தள்ளிக்கொண்டு சென்றான்.
பதறியபடியே மருத்துவமனைக்கு வந்தார் ரங்கன்! மருத்துவர்கள் பரிசோதித்தார்கள். எக்ஸ்ரே எடுத்தார்கள்.

ரங்கனிடம் சொன்னார்கள்... “இரண்டு கால்களிலும் எலும்பு முறிவு! அதிலும் ஒரு காலில் எலும்பு பலத்த சேதம் அடைந்து விட்டது!” என்று கட்டுப்போட்டு “இன்னும் இரண்டு மாதத்திற்கு நடக்க முடியாது!” என்றார்கள்.

வேதனையும் விரக்தியும் ரங்கனை வாட்டியது. மாப்பிள்ளை வீட்டார், அபசகுணம் என்று கூறி, நிச்சயத்தின் போது போட்ட தங்க மோதிரத்தை திரும்ப வாங்கிச் சென்றார்கள்.

ரங்கனுக்கோ... மகளின் திருமணம் நின்று போன வேதனையை விட, அவள் பழையபடி நடமாட வேண்டும் என்ற கவலையே அதிகமாய் இருந்தது!
ஆயிற்று சுமார் 25 நாட்களுக்குப் பின் வீட்டிற்கு வந்தாள் கன்னிகா! எல்லாம் சரியாகி விட்டது. ஆனால், நடக்கும் போது ஊனம் தெரிந்தது. தாங்கித் தாங்கி நடந்தாள்.

அவளைப் பார்க்கும் போதெல்லாம் துக்கம் மேலிட, மனதிற்குள்ளேயே அழுதார். மகளுடைய வாழ்க்கை என்னாவது? கவலை மனதை அரித்தது. திருமணத்திற்கு வாங்கிவைத்த பணமெல்லாம் மகளின் சிகிச்சைக்கு செலவாகி விட்டது. மேலும் கடன் சேர்ந்தது.

என்ன செய்வது?... டாமு சொன்னதைப் போல, தகுதிக்கு மீறி கடன் வாங்கி, பெரிய இடத்தில் பெண்ணை வாழவைக்க நினைத்தது தவறா? இதற்கு கடவுள் கொடுத்த தண்டனையா இது?
கோவிலுக்கு உள்ளே சென்றார். மனதிலும் உடலிலும் பலமில்லை; சோர்வே மிஞ்சியது! வேறு யார் துணை!? வேண்டினார்... மனமுருக வேண்டினார்.

சங்கு, சக்கரதாரியைப் பார்த்து கண்ணீர் மல்க மன்றாடினார்! என் வாழ்நாள் முடிந்து விட்டால் என் மகளின் வாழ்க்கை என்னாவது? கடவுளே! அவளுக்கு யார் துணை? என கண்ணீருடன் நிற்க, பக்கத்தில் வந்து நின்ற பக்தர் ஒருவர் சுவாமியைப் பார்த்து, “தாமோதரா!” என அழைத்து, கண்களை மூடி, கைகளை தலைக்கு மேல் உயர்த்தி வணங்க... ‘தாமோதரா’ என அந்த பக்தர் இறைவனை அழைத்தது, ரங்கனுக்கு அந்த ஆண்டவனே அடையாளம் காட்டியதாய் தெரிந்தது!
“பகவானே! எனக்கு வழிகாட்டிட்ட!” என்று வணங்கியவர், தனது மேல் துண்டால் கண்களைத் துடைத்தபடி, ‘டாமு!’ என தேடியபடியே சென்றார்.



ரா. பன்னீர்செல்வம்





ஆரூர். ஆர். சுப்பிரமணியன்

# மகான் ஷீர்டி சாய்பாபா
# ஏகாதசியும், வெங்காயமும்!

வடக்கே வாழ்ந்த குருதத்த மகராஜ் என்பவர் அக்காலத்தில் பல கலைகளோடு யோகக் கலையிலும் தேர்ச்சி பெற்று சக்கரவர்த்தியாகத் திகழ்ந்து வந்தார். அவருடைய அபிமானத்துக்குரிய சீடனாக இருந்தான் கிருஷ்ணாசி காசிநாத் ஜோஷி என்னும் இளைஞன். அவனை அனைவரும் செல்லமாக குசபாவ் என அழைப்பார்கள்.

ஒருநாள் தன்னை வணங்கி நின்ற குசபாவ் வைப் பார்த்து குருஜி, “என்னப்பா! தயங்கி தயங்கி என்னையே பார்க்கிறாய்? ஏதேனும் சொல்லனுமா?” என்று கேட்டதும், குசபாவ் “மகா குருஜி! யோகம் உள்ளிட்ட முக்கிய அனைத்து கலைகளையும் எனக்கு கற்பித்து அருளியுள்ளீர்கள். ஆனால்...”

தயங்கிய அவனைப் பார்த்து மெல்லிய புன்னகை செய்த குரு “ம்...பயப்படாமல் உன் மனதில் உள்ளதை பட்டென்று சொல்!” என ஊக்குவித்தார்.

“குருஜி! தங்களின் இன்னொரு சிறப்பான சித்து வேலைகள் குறித்து இதுவரை எனக்கு கற்பித்து அருளவில்லை. அதுதான்...” என குசபாவ் இழுத்தான்.

“ஓ! அந்தக் கலையா!?” என கேள்வி கேட்டுவிட்டு குரு சற்று வினாடிகள் மௌனத்தில் ஆழ்ந்தார். பிறகு, “உனக்கு அது அவ்வளவு அவசியமானதா?” என்று சொல்லிவிட்டு, உன் ஆசைப்படியே நாளையிலிருந்து உனக்கு சித்து வேலைகள் பற்றி கற்பிக்கிறேன்” என உறுதியாகச் சொன்னார். அப்போது குசபாவ் அதனைக் கேட்டு ஆனந்தக் கடலில் மூழ்கியவனாய் பன்முறை நன்றிகள் கூறி குருவை வணங்கினான்.

சூட்டிகை புத்தி கொண்ட குசபாவ், சில தினங்களுக்குள்ளேயே பல சித்து வேலைகளைக் கற்று, நன்கு தேர்ந்து விட்டான். இப்போதெல்லாம் அவன் தன் கையில் ஒரு இரும்பு வளையம் அணியாது இருப்பதில்லை. இரக்க குணம் கொண்ட குசபாவ், ஏழை எளியவர்களுக்கு, தான் கற்ற சித்து வேலைகள் மூலம் வெட்டவெளியிலிருந்து பலவகை தின்பண்டங்கள், உணவுப் பொருட்கள், ஆடைகள் இவற்றை வரவழைத்து அவர்களுக்குப் பரிசாக அளிப்பதை தனது தினசரி வேலைப் பட்டியலில் சேர்த்துக்

கொண்டான். ஆனால் அவன் கொண்டிருந்த இயல்பான நற்குணத்தால் சித்து கலை மூலம் எந்தவொரு தவறான செயலையும் செய்வதில்லை. தவிர, தன் சுயலாபத்திற்கும் பயன்படுத்துவதில்லை.

ஒருநாள் 22 வயதான தன் சீடன் குசபாவை தன்னருகில் அமர்த்திய குருநாதர் அவனிடம், “எனக்கு அருமையானவனே! நான் ஓரிரு தினங்களில் இமயமலைப் பகுதியை நோக்கி பயணிக்கப் போகிறேன். அங்கு இருந்து நீண்ட தவம் புரியும் எண்ணம் கொண்டுள்ளேன். எனக்கு மிக வேண்டியவனாகிய நீ என்னுடன் டில்லிவரை வந்து விட்டு, பிறகு நான் ஆணையிடப் போகும் ஒரு காரியத்தைச் செய்!” என அன்புக் கட்டளையிட்டார்.

இரண்டு தினங்களுக்குள்ளேயே குருஜியின் பயணம் தொடங்கி விட்டது. குசபாவ் அவருடைய பயணப்பையுடன், தன்னுடைய லக்கேஜ்களையும் சுமந்து கொண்டு உற்சாகமாகப் பின்பற்றினான்.

ஒரு வழியாக குருவும், சிஷ்யனும் டில்லி மாநகரை அடைந்தாகி விட்டது. அடுத்து குருநாதர் என்ன கட்டளை இடுவாரோ எனும் ஆவல் குசபாவ்யை பற்றி விட்டது. வந்து சேர்ந்த அன்று மதியம் குரு அவனிடம், “எனக்கு இத்தனை காலம் நீ சிறந்த சேவைகள் அளித்து, என் மனதை நிறைவடையச் செய்துள்ளாய்! இனி உனக்கு ஒரு புது குருநாதரை அணுகி, தொண்டாற்ற ஒரு வழி சொல்கிறேன். இன்றே நீ ஷீர்டிக்கு பயணத்தைத் தொடங்கி, அங்கே மகான் ஷீர்டி பாபாவை தரிசித்து, அவருக்குச் சேவைகள் செய்து வா! அம்மகானின் கருணைப் பார்வையால் உனக்கு நல்ல எதிர்காலம் கிட்டும். உனக்கு என் அன்பு ஆசிகள். நீ உடனே கிளம்பு!” என ஆக்ஞையிட்டார். இத்தகைய சிறந்த குருவை பிரிய நேர்ந்ததே என்ற சோகம் பற்ற, குசபாவ் அவரை வணங்கி விட்டு கண்கலங்க விடைபெற்றான். இச்சம்பவம் கிபி 1888 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒன்று.

ஷீர்டியைப்பற்றி இதுவரை கேள்விப்படாத குசபாவ், ஆங்காங்கே பலரிடம் கேட்டறிந்து ஒரு வழியாய் மகான் பாபா குடிகொண்டிருந்த ஷீர்டி கிராம மசூதிக்கு வந்து சேர்ந்தான். மகான் பாபாவை தரிசிக்க அங்கே பக்தர்கள் கூட்டம் அலை மோதிக்கொண்டு இருந்தது.

கூட்டம் குறையும் வரை காத்திருந்த குசபாவ் மெல்ல மகான் பாபா தரிசனம் அளித்துக் கொண்டிருந்த மேடையை நெருங்கி விட்டான். மகானின் முதல் தரிசனத்திலேயே புல்லரித்துப் போயிருந்தான் குசபாவ். தரிசனத்திற்காக பாபாவை நெருங்கினான். திடீரென பாபா அங்கிருந்த பக்தர்களிடம், “இந்த மாயக்காரனுக்கு இங்கு என்ன வேலை? வெட்டவெளியில் இரும்பு வளையம் போட்ட கையால் தின்பண்டங்களை வரவழைக்கும் இந்த ஜாலக்காரனை இனி மசூதிக்குள் யார் அனுமதித்தாலும் நடப்பதே வேறாக இருக்கும், ஜாக்கிரதை!” என கோபத்துடன் எச்சரித்தார்.

இதனைக் கேட்டு மனம் நொந்து போன குசபாவ், தன் தலையைக் குனிந்து கொண்டே சோர்வுடன் மசூதியை விட்டு வெளியேறினான். புது குருநாதரின் அறிமுக சந்திப்பே இப்படி ஆகிவிட்டதே என மனம் புலம்ப ஆரம்பித்தது அவனுக்கு.

பிறகு ஆழ்ந்த யோசனைக்குப் பிறகு ஒரு முடிவுக்கு வந்த குசபாவ் தனது ஜால வேலைகளை இத்தோடு கைகழுவி விடுவோம், இந்த இரும்பு வளையம் உட்பட, என தீர்மானித்து வளையத்தை வானில் வீசி எறிய, பறந்து போய் அது ஒரு ஓடையில் விழுந்து மறைந்தது.

மறுதினம், குசபாவ் மசூதிக்கு தயக்கமின்றி போனான். அவனை அருகில் வரச்சொல்லி அன்புடன் அழைத்த பாபா, “இனி தினமும் இந்த மசூதியின் மூலையில் அமர்ந்து பக்த ராமதாசரின் ‘தசபோதா’ புனித நூலை தினமும் பாராயணம் செய்துவா!” எனக் கட்டளையிட்டார். அதனை பணிவுடன் ஏற்றுக் கொண்ட குசபாவ் தினசரி பாராயணம் செய்யத் தொடங்கினான்.

தன் வயிற்றுப் பசிக்காக குசபாவ் பிச்சை எடுத்து பசியாற்றிக் கொண்டான். ஒரு காலத்தில் தன்னை நாடியவர்களின் பசிப்பிணியை, தான் கற்ற ஜால வித்தையால் வானில் தின்பண்ட, உணவுப் பொருட்களை வரவழைத்துக் கொடுத்து வந்த தனக்கா இந்த நிலை என அவன் வருந்தவே இல்லை! தன் மனது பக்குவப்பட வேண்டும் என்பதற்காக மகான் பாபாவே இவ்வாறு செய்திருக்கிறார் என அவன் முடிவு செய்து கொண்டான்.

குசபாவின் நிலை உயர்ந்தது. இப்பொழுதெல்லாம் குசபாவை காணும் பக்தர்கள் அவர் மசூதியில் தினமும் செய்யும் பாராயணத்தால், அவரை மதிக்கத் தொடங்கி விட்டார்கள். சிறிது காலம் கழிந்தது. குசாபாவ்வின் மனமாற்ற நிலையை அறிந்து கொண்ட மகான் பாபா, அவர் மீது கனிவு கொண்டு விட்டார்.

ஒருநாள் மகான், குசபாவ்வைக் கூப்பிட்டு, "அன்பனே! நீ கனகாப்பூருக்குச் சென்று அங்குள்ள மூணு தலை சாமியை வணங்கி விட்டு வா!" என ஆக்ஞையிட்டார். மகான் குறிப்பிட்ட தெய்வம் மூன்று சிரசுகள் கொண்ட தத்தாத்ரேயரை! அதன்படி அவர் கனகாப்பூருக்குச் சென்று அத்தெய்வ தரிசனம் பெற்றார். பிறகு வசதி கிடைத்த போதெல்லாம் ஷீர்டியிலிருந்து கனகாப்பூர் சென்று தரிசனம் பெறுவதை தன் வழக்கமாக்கிக் கொண்டு விட்டார் குசபாவ்.

மகானின் கருணைக்குரியவராகிவிட்ட குசபாவ், மசூதியில் அமர்ந்து தினந்தோறும் வழக்கமான பாராயணத்துடன், தத்தாத்ரேயர் பிரார்த்தனை மற்றும் மகான் பாபா தனக்கு ஒரு சமயம் அறிவுறுத்திய, குரு சரித்திர புனித நூலையும் முறைப்படி 108 முறைகள் பாராயணம் புரிவதையும் தனது நடைமுறையாக்கிக் கொண்டு விட்டார். அவர் ஏகாதசி விரதத்தை, யோகச் சக்கரவர்த்தி குருதத்த மகராஜிடம் சீடனாக சேவைபுரிந்த காலத்திலிருந்தே சரியாக அனுஷ்டித்து வந்ததால், அந்த விரதம் ஷீர்டியிலும் தொடர்ந்திருந்தது அவரிடம்.

அன்று ஏகாதசி புண்ணிய திதி நாள். மசூதியில் தன் வழக்கமான பாராயணக் கடமையில் குசபாவ் ஆழ்ந்திருந்தார். அப்போது அவரைத் தன்னருகே வரச்சொன்ன மகான், "அப்பனே! இந்தா இதை வாயில் போட்டுக்கொள்!" என ஒரு அரிந்த வெங்காயத்துண்டைக் கொடுத்தார். 'என்னடா, இந்த சோதனை நமக்கு... ஏகாதசி நாளில் நான் எப்படி வெங்காயத்தை உட்கொள்வது' என்ற தர்ம சங்கட நிலைக்கு உள்ளாகி விட்டார் குசபாவ். "ம்ம்... ஏன் தயக்கம்?" என மகான் அவரை வற்புறுத்தவே, உடனே சாமர்த்தியமாக குசபாவ், "மகானே! தாங்கள் அதை உண்டால், நானும் சாப்பிடுகிறேன்" என்று அடக்கமுடன் பதில் சொன்னார். ஆனால் யாரும் எதிர்பாரா வண்ணம் மகான் தன் அருகில் வைத்திருந்த இன்னொரு துண்டை எடுத்து டக்கென்று தனது வாயில் போட்டுக் கொண்டார். வேறு வழியின்றி குசபாவ்வும் தனக்கு பாபா அளித்த வெங்காயத் துண்டை முகச்சுளிப்புடன் உட்கொண்டார்.

அப்பொழுது பாபா அங்கு கூடியிருந்த பக்தர்களிடம், "இந்த புனித ஏகாதசி திதியில் இவனைத் தவிர யாரும் வெங்காயத்தைச் சாப்பிடுவார்களா?" என கேலியாகச் சொன்னார். அனைவரும் கொல்லென்று சிரித்தார்கள். அப்பொழுது குசபாவ், "நம்ம பாபாவே வெங்காயம் சாப்பிட்டதைப் பார்த்து தானே நானும் அதனைச் சாப்பிட்டேன்" என அதற்கு சமாதானம் சொன்னார். உடனே பாபா, "குசபாவ் சொல்வது முற்றிலும் பொய்! இதோ பாருங்கள் எல்லோரும்!" என்று கூறிக்கொண்டே தன் வாயில் போட்டு அடக்கி வைத்திருந்த துண்டை வெளியே எடுத்து போட்டார் தன் கையால். விழுந்தது வெங்காயத் துண்டு அல்ல... அது சர்க்கரை வள்ளிக் கிழங்கு துண்டு! உடனே பாபா, அவரைத் திட்டியபடியே, கையால் அடித்தும் விட்டார்.

சற்றென்று தாவி, தரையில் கிடந்த அந்தத் துண்டை எடுத்த குசபாவ், அது பிறருடைய எச்சில் பண்டம் என நன்கு அறிந்திருந்தும் தன் வாயில் போட்டுக்கொண்டு மெல்ல ஆரம்பித்து விட்டார்!

இந்துக்களின் புனித நம்பிக்கைகளில் இதுவும் ஒன்று...

ஒரு குருவின் உச்சிஷ்டத்தை பிரசாதமாகப் பெற்று உட்கொண்ட எவரும், அவரவர் குருநாதரின் பூரண நல்லெண்ணத்துடன், ஆசிகளையும் பெற்று விடுவார்கள்!" என்பது.

கொஞ்ச நாழிகைதான் பாபாவின் சினம் நீடித்தது, அது அன்பு அடிதானே! மீண்டும் சாந்த நிலைக்கு வந்துவிட்ட மகான், "என்ன குசபாவ், பயந்துட்டியா!?" என ஆதுரத்துடன் கூறியவாறே, அவரின் சிரசில் தன் கரங்களை வைத்து ஆசீர்வதித்தார். என்ன ஆச்சர்யம்! குசபாவ்வின் கரங்களிலிருந்து உதீ பிரசாதம் கொட்டத் தொடங்கி விட்டது. அந்த உதீ பிரசாதத்தை தன்னை நாடியவர்களிடம் குசபாவ் தன் கையிலிருந்து வரவழைத்துக் கொடுக்க, அதனைப் பெற்றுக் கொண்ட பக்தர்களின் மனம், மற்றும் உடல் துன்பங்கள் நீங்கும் அற்புதம் நடந்து கொண்டே இருந்தது.

தனது வாழ்நாள் முழுவதையும், மகான் ஷீர்டி பாபாவுக்கே அர்ப்பணித்து, அவருடைய நிழலிலேயே இருந்து தொண்டு புரிந்து வந்த குசபாவ், சதா பேரானந்தத்தில் திளைத்திருந்தார்!

மகான் ஷீர்டி பாபாவின் அருள் வாக்குகளில் ஒன்று இது...

"வேறெந்த சிந்தனையும் இல்லாமல், என்னையே நினைந்து, யாண்டும் என்னையே உபாசிக்கும் நித்திய யோகிகளுக்கு யோக க்ஷேமத்தை வழங்குவது என்னுடைய சத்திய பிரமாணமாகும்"

ஜெய் சாய்ராம்!



# வல்லமை, வல்லமைக்கு வல்லமை, வல்லமை கடந்த நிலை

ஹரிதா

இயற்கையின் சிருஷ்டியில் இப்படித்தான் இருக்கிறது. இப்படித்தான் இருக்கவும் வேண்டும்.

ஸ்தூலத்தை விட சூக்குமத்திற்கும், சூக்குமத்தை விட அதிசூக்குமத்திற்கும் வல்லமை அதிகம். அதாவது பூடமாக இருக்கும் தன்மை அதிகரிக்க அதிகரிக்க வல்லமையும் அதிகரிக்கிறது. இயற்கையில் இப்படித்தான் இருக்கிறது.

பஞ்ச பூதங்களை எடுத்துக்கொள்வோம். மண் ஸ்தூலமானது. பூடகத்தன்மை குறைவு. பொறி, புலன்களுக்கு எளிதில் சிக்குகிறது. தெளிவான உருவம் உண்டு. வெளிப்படையானது. ஆனால் மண்ணை விட நீருக்கு பூடகமாக இருக்கும் தன்மை சற்று அதிகம். திட உருவம் கிடையாது. இருக்கும் இடத்தின் உருவத்தையே ஏற்கும். கைகளால் எளிதில் கையாள முடியாது. நெருப்பு அரு உருவமானது. நீரை விட நெருப்பிற்கு பூடகமாக இருக்கும் தன்மை அதிகம். கண்களுக்குத் தெரிகிறது. தொடு உணர்வால் அறிய முடிகிறது. ஆனால் மற்றவைகளுக்கு சிக்குவது இல்லை. காற்றோ கண்களுக்கும் தெரியாது. தொடு உணர்வால் மட்டுமே உணர முடிகிறது. இது அருவம்.

ஆனால் ஆகாயமோ எதிலும் அகப்படாது எங்கும் விரிந்துள்ளது. பொறி, புலன்களுக்கு அகப்படாது, அருவம் கடந்த நிலையில் இருக்கிறது.

பஞ்ச பூதங்களில் மண்ணை விட நீருக்கும், நீரை விட நெருப்பிற்கும், நெருப்பை விட காற்றிற்கும், காற்றை விட ஆகாயத்திற்கும் வல்லமை அதிகம். ஆனால் இவைகள் பஞ்ச பூதங்கள் மட்டுமே.

ஆகாயத்திற்கும் அதிசூக்குமமாக, மகா மகா அதிசூக்குமமாக ஒன்று உள்ளது. அந்த ஒன்று எங்கும் உள்ளது. அது இல்லாத இடம் என்ற ஒன்று கிடையாது. கிடையவே கிடையாது. அது இல்லாத இடமும் அதுதான்!

மகத்தான அந்த மகா ஒன்றிற்கு, மகா மகா ஒன்றிற்கு ஞானிகள் இட்ட பெயர் 'வெட்டவெளி' என்பதாகும்.

பெயரிட யாராலும் இயலாத அந்த மகா ஒன்றிற்கு, அதாவது என்ன பெயரிட்டாலும் அதன் முழு வல்லமையை, அதன் பொருளை, அதன் பெருமையை அந்தப் பெயர் காட்டிவிட, தந்துவிட முடியாத அந்த மகா ஒன்றிற்கு, ஞானிகள் பல்லாயிரக்கணக்கான பெயர்களைச்

சூட்டியுள்ளார்கள்.

அவைகளுள் ஒருசில வருமாறு: சிவம், பிரம்மம், பரம்பொருள், மெய்ப்பொருள், கடவுள், இறைவன்... இப்படி இன்னும் பல ஆயிரக்கணக்கான பெயர்கள் உண்டு.

சிவம் எங்கும் உள்ளது. வெட்ட வெளியும் எங்கும் உள்ளது. சிவத்திற்கு அடி முடி காண முடியாது. வெட்டவெளிக்கும் எல்லை என்ற ஒன்று கிடையாது. சிவத்திற்கு ஆதியும் இல்லை, அந்தமும் இல்லை. வெட்டவெளியும் தோன்றியதும் இல்லை, மறைவதும் இல்லை. சிவம் நிராமயமானது. நிர்மலமானது. நிர்குணமானது. வெட்டவெளியும் அவ்வாறே!

கோடி கோடி அண்டங்களும், பேரண்டங்களும் வெட்ட வெளியில் மிதந்து கொண்டு, விளையாடிக் கொண்டு இருக்கின்றன. எல்லாவற்றிற்கும் வெட்டவெளியே ஆதாரமாகும், மூலமாகும். வெட்டவெளி கண்களுக்கு ஒன்றுமில்லாததாக, வெறும் வெளியாகத் தெரிகிறது. ஆனால்...மூல உண்மை யாதெனில்... அதுதான் 'அது' என்பது. அந்த அது, மகா அதுவாகும். மகா மகா அதுவாகும்.

'பிந்து' (வரிவடிவம்) வைவிட 'விந்து' (ஒளி) சூக்குமமானது. ஆகவே பிந்துவை விட விந்துவிற்கு வல்லமை அதிகம். ஆனால் விந்துவை விட 'நாதம்' (ஒலி) சூக்குமம் நிறைந்தது. எனவே இயற்கையின் சிருஷ்டியில், விந்துவை விட நாதம் வல்லமை மிக்கது.

நாதத்தில் மகா நாதம் உண்டு. அதுவே 'ஓம்' எனும் ஓங்கார நாதமாகும். இதை நாத பிரம்மம் என்று ஞானிகள் சொல்கிறார்கள்.

நாத பிரம்மம் என்பதே சக்தியாகும்! சக்தியை தாயுமானவர் சுவாமிகள் 'நாத வடிவான மகா மந்த்ர ரூபியே' என்றும் 'நாதாந்த வெட்டவெளியே' என்றும் போற்றி, வணங்கி, மகிழ்கிறார். நம்மையும் மகிழ வைக்கிறார்.

எல்லா அண்டங்களையும், பேரண்டங்களையும் படைத்து, துல்லியமாக, அதி நுணுக்கமாக, இயக்கிக் கொண்டு இருப்பது சக்தியே ஆகும். 300 கோடி சித் சக்திகளையும் சக்தியே படைத்துள்ளது. ஏழு கோடி மந்திரங்களும் சக்திக்குக் கட்டுப்பட்டவையே! எல்லாம் சக்தியின் வெளிப்பாடேயாகும்.

சக்தி என்பது வல்லமைக்கு வல்லமையாகும்! எல்லா வல்லமைகளுக்கும் வல்லமையானது!

அதே நேரம் சக்தி தனித்து இயங்காது. சிவத்தை மீறி எதுவும் செய்யாது. அவனின்றி ஒரு அணுவும் அசையாதன்றோ!

சக்தி ஒடுங்கும் தன்மை கொண்டது. அது இறுதியில் சிவத்தில் ஒடுங்கி விடும். சிவம் எதிலும் ஒடுங்காது தனித்து நிற்கும்!

சிவம் சாட்சிப் பொருள். எல்லா வல்லமைகளுக்கும் ஆதாரமாக, வல்லமைகளை சிருஷ்டிக்கும் ஒன்றாக, வல்லமைகளை மற்றவைகளுக்கு அருளும் ஒன்றாக, எல்லா வல்லமைகளுக்கும் அப்பால், வல்லமைகளைக் கடந்து நிற்கும் ஒன்றே சிவம்! சிவத்தின் மறு பெயர் வெட்ட வெளி!

ஆனால் ஒன்றை மறந்துவிடக் கூடாது. அதாவது சிவம் வேறு, சக்தி வேறு அல்ல! இருவரும் ஒருவரே! அதாவது சிவத்தின் பேராற்றலையே நாம் 'சக்தி' என்று பெயர் சூட்டி, போற்றி, வணங்கி, மகிழ்கிறோம். அவ்வளவே!

தாயுமானவர் சுவாமிகள் இப்படிக் கூறுகிறார்;

"அகத்தோடு அணுஅணுவாய் அண்டமெல்லாம் தானாய்

மகத்தாகி நின்றனை நீ வாழி பராபரமே!"



# தாணுமாலயர் திருக்கோயில்



விஜய்
ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்

தேவேந்திரனுடைய சாபம் நீங்க, தேவேந்திரன் இந்த ஸ்தலத்திற்கு வந்து மும்மூர்த்திகளையும் ஒரே சமயத்தில் வழிபட்டு விமோசனம் பெற்றார். சுசீ என்றால் தூய்மை என்று பொருள். தேவேந்திரன் இங்கு தூய்மை பெற்றதால் இந்த இடம் சுசீந்திரம் என அழைக்கப்படுகிறது.

சிவன், விஷ்ணு, பிரம்மா ஆகிய மூன்று தெய்வங்களும் இந்த ஸ்தலத்தில் வழிபடப்படுகின்றனர். அத்ரி மகரிஷியின் பத்தினி அனுசுயா தேவியின் கற்பை சோதிக்க மும்மூர்த்திகளும் சென்றனர். அவர்களை குழந்தையாக மாற்றினார். அவர்களுக்கு உணவூட்டி, தாலாட்டி தூங்கச் செய்தார். மும்மூர்த்திகளின் தேவியரும் இதனை அறிந்து அங்கு வந்தனர். அதனால் மும்மூர்த்திகளுக்கும் பழைய உருவத்தைத் தந்து கற்பின் பெருமையை உலகிற்கு எடுத்துக் காட்டினார்.

மும்மூர்த்திகளும் இந்த ஸ்தலத்தில் உள்ளதால், இந்த ஸ்தலத்தில் அனைத்து பிரார்த்தனைகளும் நிறைவேறும். நீண்ட ஆயுள் கிடைக்கவும், நிறைந்த செல்வம் பெறவும், குழந்தை பாக்கியம் கிடைக்கவும், திருமண தடை நீங்கவும் இங்கு வழிபடுகின்றனர்.

இந்த ஸ்தலத்திற்கு தங்களது ஜென்ம நட்சத்திர நாளில் சென்று தங்கள் வயதிற்கு ஏற்ப விளக்கேற்றி, மும்மூர்த்திகளையும் தரிசித்து அர்ச்சனை செய்து வழிபட்டால் அனைத்து நன்மைகளையும் பெற முடியும்.

குறிப்பு: வயது 31 எனில் 31 விளக்கேற்ற வேண்டும்.



இந்த ஸ்தலத்தில் 18 அடி உயர ஆஞ்சநேயர் நின்ற நிலையில் உள்ளார். பிராம்மியம் யோகத்தில் பிறந்தவர்கள், இந்த ஆஞ்சநேயரை தரிசித்து வெண்ணெய் காப்பு சாத்தி அர்ச்சனை செய்து வழிபட்டால் அனைத்து அவயோகங்களும் நீங்கும்.

உடல் பலம், மன பலம் பெறவும், எதிரிகள் தொல்லை, செய்வினை கோளாறுகள் நீங்கவும் இந்த ஆஞ்சநேயரை வழிபடுவது நன்மை.

கேட்டை நட்சத்திரத்தில் பிறந்தவர்களும், கேட்டை நட்சத்திரத்தில் நின்று ஒரு கிரகம் தசா நடத்தினாலும், அவர்கள் கேட்டை நட்சத்திர நாளில் அல்லது புதன் கிழமைகளில் இந்த ஸ்தலத்தில் உள்ள நந்தியை தீபம் ஏற்றி வழிபட்டால் அனைத்து தீமைகளும் நீங்கி நன்மையான பலன்களை பெறுவார்கள்.

இந்த ஸ்தலம் நாகர்கோவிலில் இருந்து கன்னியாகுமரி செல்லும் வழியில் உள்ளது.



# ஸ்தூல வினை, சூக்கும வினை

ஆன்மீகத்தில் இரண்டு வித வினைகள் உண்டு. ஸ்தூலவினை, சூக்கும வினை. ஸ்தூல வினை என்பது வெளிப்படையானது. மற்றவர்கள் அறிந்து கொள்ளும் வண்ணம் வெளிப்படையாகச் செய்வது. பொறிகளால் செய்வது. சூக்கும வினை என்பது மற்றவர்களின் அறிவுக்கு, மனதுக்கு அகப்படாது செய்வது. சில சமயங்களில் சூக்கும வினையானது, ஸ்தூல வினை போன்று இருந்தாலும், அது காரியமாக மாறும் தன்மை சூக்குமமானதாகவே இருக்கும்.

உதாரணமாக பெருமளவு அன்னதானம் செய்தல், கோயில் கட்டுதல், ஏழை, எளியோர்களுக்கு உதவுதல், தேக சிரமங்களை நீக்குதல்... இவைகள் ஸ்தூல வினைகள்.

யாகம் வளர்த்தல், ஹோமம் செய்தல், தவ சக்தியால் நிஷ்காமிய பணி செய்தல், அபிஷேகம் செய்தல், நினைவால் இறைவனை தியானித்தல், ஆசிகள் வழங்குதல்... இவைகள் சூக்கும வினைகள்.

பலர் ஸ்தூல வினைகளையே பெரியதாக எண்ணுகிறார்கள். ஆனால் அதுவல்ல. ஸ்தூல வினைகளை விட, சூக்கும வினைகள் பல அற்புதங்களை நிகழ்த்தும் வல்லமை கொண்டது.

யாகம் வளர்ப்பதால், ஹோமம் செய்வதால் யாருக்கு என்ன லாபம்? என்றும், பொருள் தான் செலவாகும் என்றும், இதற்காகச் செலவு செய்யும் பொருளை ஏழைகளுக்குத் தரலாம் என்றும், சிலர் கேலி பேசுவார்கள். சிலைகளுக்கு அபிஷேகம் செய்யும் பாலை ஏழைகளுக்கு தரலாமே! என்று கூட சொல்வார்கள். ஆனால் அவர்கள் சூக்கும வினையின் ஆற்றலை அறியாதவர்கள். ஆன்மீகத்தை புரிந்து கொள்ளாதவர்கள்.

யாகம் வளர்ப்பதால், ஹோமம் செய்வதால், அபிஷேகம் செய்வதால், ஆசிகள் வழங்குவதால், தவசக்தியை வெளிப்படுத்துவதால் அண்ட வெளியில் பெரிய அளவில் மாற்றம் ஏற்படும். இந்த மாற்றம் திருவருள் மாற்றமாகும். இத்திருவருள் மாற்றத்தால், அப்பகுதியில் நல்ல மழை பெய்யும், இயற்கை சீற்றம் ஏற்படாது, விபத்துகள் குறையும், நோய் நீங்கும், ஆயுள் கூடும், கவலைகள் துன்பங்கள் மறையும், மக்களிடம் பகை உணர்வு நீங்கி ஒற்றுமையாக ஆனந்த அமைதியோடு வாழ்வார்கள், மனிதர்கள் மட்டுமில்லாது எல்லா உயிர்களுமே அதனதன் நிலைகளுக்கு ஏற்றவாறு சந்தோஷமாய் வாழும், அன்பு, அமைதி, ஆனந்தம் பரவும். ஆகவே சூக்கும வினைகளைக் குறை கூறுவது தவறாகும்.

ஹரிதா

# தண்டியடிகள்

## இறைவன் கொடுத்த பார்வை...



அதிகாலை நேரம்...

ஆழித்தேரோடும் அழகு ரதவீதி.. தலையுயர்த்தி நின்று பிரம்மாண்டம் காட்டும் வண்ணமய கோபுரம்..! தியாகேசரின் அருளாலயமும் குளமான கமலாலயமும் ஆதவன் கரங்களினால் பொன்போல் மின்னியது. ஆலயத்தின் உள்ளே...

ஓதுவார்களின் திருக்குரலால், சுந்தரரின் பதிகங்கள் பக்திப் பரவசத்தோடு எட்டுத்திக்கும் காற்றிலேறி அடியவர்களின் உள்ளங்களில் சிவ சிந்தனையைத் தேன்போல ஊற்றெடுக்க வைத்தது!

எண்ணத்தில் இறையருளை ஏற்றிவைக்கின்ற பாடல்களைக் கேட்டு, அவற்றின் பொருளை அசைபோட்டபடி ஓர் உருவம் கமலாலயக் குளத்தை நோக்கி மெல்ல நடந்து கொண்டிருந்தது.

அந்த உருவத்தின் கைகளிலே ஒரு நீண்ட கோல் இருந்தது. அந்தக் கோலைத் தரையில் தட்டித் தட்டி, சரியான தடம் பார்த்து அடிகளை அளந்து வைத்தபடி நடந்து வரும் அவருக்கு, பார்வை இல்லை என்பதை அவ்வளவு எளிதில் யாராலும் யூகிக்க முடியாது. அந்த அளவுக்கு நிதானம். ஆரூர் வீதிகளை தன்னுடைய அகக் கண்ணால் அளந்தபடி வந்து கொண்டிருந்தார்.

பார்வையற்ற அவர்தான் தண்டியடிகள். திருவாரூர் என்னும் இந்த புண்ணிய பூமியில் அவதரித்து, தியாகேசனின் மீது அளவற்ற பத்தி கொண்டிருந்தும், அவரைக் கண்ணாரக் கண்டு தரிசனம் செய்ய முடியவில்லையே என்னும் ஏக்கம் நெஞ்சு நிறைய இருந்தாலும் அதை ஒரு குறையாய் எண்ணாமல் தன் நெஞ்சகத்தையே கோவிலாகக் கருதி, கண்ணால் காண முடியாத இறைவனுக்கு கற்பனையில் உருவம் கொடுத்து, அனுதினமும் பூஜித்து வந்தார்.

ஆலயத்திற்கு இணையான பரப்பளவைக் கொண்ட ஆலய திருக்குளமான கமலாலயம், சமண சமயத்தவரால் கொஞ்சங் கொஞ்சமாகத் தூர்க்கப்படுவதை பலர் சொல்லக்கேட்டு, அந்தக் குளம் முற்றிலும் தூர்ந்துவிடா வண்ணம், தூர்வார வேண்டும் என்ற அருமையான திருப்பணியைத் தனியொரு மனிதனாகச் செய்து வருகிறார், சில காலமாக!..

இச்செயல், குளக்கரையில் மடம் நிறுவியிருந்த சமணர்களுக்கு எரிச்சலையும் கோபத்தையும் அதிகரிக்கச் செய்தது! “கண் உள்ளவர்களே கண்டும் காணாமல் போகும்போது கண்ணில்லாத இவனுக்கு ஏன் இந்த வீண் வேலை? எப்படி குளத்தைத் தூர் வாருவான் என்பதைப் பார்த்து விடலாம்” என ஏளனம் செய்தனர். அதோடு தண்டியடிகளின் முயற்சிக்கு என்னென்ன முட்டுக்கட்டைகள் போட முடியுமோ அத்தனையும் செய்தனர்.

ஆனால், யார் என்ன செய்தாலும் ‘என் கடன் இறைப்பணி செய்வதே’ என்னும் நிலையில் உறுதியாக இருந்தார் தண்டியடிகள்!

கரையிலிருந்து குளத்திற்குள் இறங்கி, சரியான இடம் பார்த்து தூர்வார வேண்டும்; மண்வாறும் தட்டு, மண்வெட்டி போன்றவற்றை எங்கே வைக்க வேண்டும்; என தன்னுடைய அகக்கண்களாலேயே அளவெடுத்து சில ஏற்பாடுகளைச் செய்து வைத்திருந்தார், தண்டியடிகள்!

குளக்கரையிலே ஒரு நீண்ட குச்சியை நட்டு வைத்து, இன்னொரு குச்சியை குளத்தின் உள்ளே நட்டு வைத்திருந்தார். இரண்டு குச்சிகளின் மேற்புறத்தையும் ஒரு கயிற்றால் கட்டி இணைத்திருந்தார்.

தன் இருப்பிடத்திலிருந்து கோவிலுக்கும், திருக்குளத்திற்கும் தட்டுத்தடுமாறி எப்படியாவது அளந்து அடிவைத்து வருகின்ற வழக்கம் உள்ள அடிகள், குளத்தினை தூர்வார வேண்டும் என்கிற எண்ணம் ஏற்பட்ட உடனேயே இந்த ஏற்பாட்டினைச் செய்து வைத்தார்.

குளக்கரையின் குறிப்பிட்ட இடத்திற்கு வந்து சேர்ந்ததும் கைகளை நீட்டி, நட்டு வைத்திருக்கும் கொம்பின் மேல் உள்ள கயிற்றினைப் பிடித்தபடியே குளத்திற்குள் இறங்குவார். அங்கு இருக்கும் கொம்பின் அடியில் தட்டு, மண்வெட்டி ஆகியவற்றை வைத்திருப்பார். அதை எடுத்து ஒவ்வொரு அடியாக அளந்து தனது தூர்வாரும் பணியினைச் செய்யத் தொடங்குவார்.

இப்படி தனியொரு மனிதனாக குளத்தினை சீர் செய்ய எத்தனை காலம் ஆகும்? எத்தனை காலம் ஆனால் என்ன? பார்வையற்ற இப்பிறவி பரமனின் சேவைக்காகவே பயன்படட்டும்; இறுதி மூச்சு உள்ளவரை தியாகேசருக்கே என் உடல், பொருள், ஆவி அனைத்தும் அர்ப்பணம் செய்வேன் என உறுதியாக இருந்தார்.

“கண்ணுள்ளோருக்கு கண்டதெல்லாம் காட்சி; இவருக்கோ கடவுள் மட்டுமே காட்சி! அவனே சாட்சி!” என்னும் மன உறுதியோடு தன் திருப்பணியைச் செய்துவந்தார்.

சைவத்தை வேரறுக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு செயல்படும் சமணர்களுக்கு இந்த தூயத் தொண்டரான தண்டியடிகளின் செயல்கள் மேன்மேலும் ஆத்திரத்தை உண்டாக்குவதாய் இருந்தது. தங்களுடைய வெறுப்பை எப்படியெல்லாம் வெளிப்படுத்தலாம் என யோசித்து, தண்டியடிகளுக்கு தொல்லைகளைக் கொடுத்து வந்தனர்!

அடையாளத்திற்காக தண்டியடிகள் கட்டி வைத்திருந்த கயிற்றினை அறுத்துப் போட்டனர் ஒருநாள்; மண்வெட்டி தட்டினை எடுத்து மறைத்து வைத்தனர் ஒருநாள்; அடிகளார் கரையில் கொட்டி வைத்திருக்கும் தூர்வாரிய மண்ணை மீண்டும் குளத்தில் தள்ளினர் ஒரு நாள். இப்படியே, ஒவ்வொரு நாளும் தொல்லைகளை சமணர்கள் கொடுத்தபடியே இருக்க… பார்வையற்ற அந்த பரமனின் பக்தரோ… இன்னல்கள் அனைத்தையும் எதிர்கொண்டு, தன் திருப்பணிக்கு நேரும் தடங்கல்களை எல்லாம் தவிடுபொடியாக்கி, தனது பணியினைச் செவ்வனே செய்து வந்தார்.

சமணர்களின் இடைஞ்சல்களையும், அடிகளாரின் அவதிகளையும் பார்த்த சாதாரண பிரஜைகள் “பார்வையற்ற இவருக்கு பாதகம் செய்கிறார்களே பாவிகள்!” என தூற்றினார்களே தவிர, அடிகளாரின் திருப்பணிக்கு உதவிட யாரும் முன்வரவில்லை. அவரவர் வேலையில் அனைவரும் முனைப்புடன் இருக்க… தன் வேலை இதுதான் என எவருடைய உதவியும் எதிர்பாராமல், அந்த இறைவன் ஒருவனே துணையென எண்ணி, முன்னிலும் வேகமாக தூர்வாரும் பணியினைச் செய்து வந்தார்.

ஒரு நாள்…

வழக்கம் போல, காலை நேரத்திலேயே தனது பணியினைத் தொடங்கினார். கொஞ்சம் கொஞ்சமாக தூர்வாரி, அந்த மண்ணினை குளக்கரையில் கொண்டு வந்து கொட்டியபடியே இருந்தார்.

கதிரவன் மெல்ல மெல்ல தனது தேரினை வான் வெளியில் மிதக்கவிட்டு, உக்கிரமாக ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தார். தண்டியடிகளின் உடலில் வியர்வை ஆறாய் பெருகிக்கொண்டிருக்க, அந்த வியர்வை மழையில் அவரது நெற்றியில் பூசியிருந்த திருநீற்றுப் பட்டை, குழைந்து, உடலின் நிறத்திற்கு சற்றே மெருகூட்டிக் கொண்டிருந்தது. கழுத்தில் இருந்த ருத்ராட்சம் நனைந்து, மேலும் அவரது உடலை குளிர்ச்சியாக்கிக் கொண்டிருந்தது.

தன் உடலில் வியர்வை பெருக்கெடுக்கும் போதெல்லாம் அது திருக்குளத்தில் ஊற்றெடுக்கும் தீர்த்தமானது, பெருகிக் கொண்டிருக்கிறது போலும் என்றே எண்ணி, ஆனந்தமடைந்தார் அடிகளார்!

அந்த நேரம் பார்த்து, சமணர்கள் பலர் பெருங்கூட்டமாக அங்கு திரண்டு வந்தனர். அவர்களில் முக்கியஸ்தர் போல இருந்த ஒருவர், "ஓய்..! தண்டியடிகளே! நீர் செய்வது உமக்கே நல்லதாகப் படுகிறதா?" என கோபமாகக் கேட்டார்.

கையில் மண்வெட்டியோடு, குரல்வந்த திசையில் முகத்தைக் காட்டிய அடிகள், "அப்படி ஒன்றும் வேண்டாத செயலை நான் செய்யவில்லையே... ஏன் இப்படிக் கேட்கிறீர்கள்?" என மறுகேள்வி கேட்டார்.

சமணர்களில் மற்றொருவன், "ஆரூரின் வீதிகள் அனைத்தும் உமக்கே சொந்தமா? உமக்குத்தான் பார்வை இல்லையே; பாதையை அளந்தபடி தட்டுத்தடுமாறி நடக்கிறீர்; இதில் நீர் விழுந்தாலும் எழுந்தாலும் யாரும் கவலைப்பட மாட்டார்கள். ஆனால் குளத்து மண்ணையெல்லாம் கொண்டு வந்து ஜனங்கள் நடமாடும் பாதையில் கொட்டுகிறீரே... யாராவது தடுக்கி, தடுமாறி விழுந்தால் என்னாவது? இது என்ன, உன் அப்பன் வீட்டுச் சாலையா?" சற்று கோபமாகவே கேட்டான்.

மெல்லச் சிரித்தபடியே, "சரியாகச் சொன்னீர் அய்யா...! அப்பன் வீட்டுச் சாலைதான்! எனது அப்பன் மட்டுமல்ல... உலக உயிர்கள் அனைத்திற்கும் அப்பனான எம்பெருமான் ஆலயத்தை நோக்கி வரும் சாலைதான் இது; அது மட்டுமல்ல... இங்கு என் ஒருவனுக்குத் தானே பார்வையில்லை; நீர் உட்பட இங்கு எல்லோரும் பார்வையுள்ளவர்கள் தானே?! பிறகு எப்படியப்பா... தடுமாறவோ, தடுக்கி விழவோ போகிறீர்கள்? கண்ணிழந்த நானே என் இறைவனுக்காக உழைக்கும் போது கண்ணுள்ளோர் நல்வழி பார்த்து நடக்க மாட்டார்களா என்ன?... என்று அமைதியாகக் கேட்டார்.

"இந்த வியாக்கியானமெல்லாம் எங்களுக்குத் தேவையில்லை.... நீர் இப்பணியை நிறுத்தப் போகிறீரா இல்லையா?" எரிச்சலுடன் கேட்டார் ஒரு சமணர்.

ஏனோ தெரியவில்லை.. சமணர்களுக்கு, சைவ மதத்தினரைக் கண்டாலே வெறுப்பு. நெற்றியில் நீறணிந்த எவரைக் கண்டாலும் மனதிலே ஒரு கொதிப்பு! சிவப்பணியில் எவர் ஈடுபட்டாலும் இவர்கள் உடலெல்லாம் ஒரு தகிப்பு.

ஆனால்... சிவனடியார்களோ... அன்பே சிவம் என்கிற சொல்லுக்கு இலக்கணமாய் கண்ணில் படுகின்ற சக மனிதர்களிடத்தில் அந்த சிவனையே காண்பவர்கள். எந்த உயிர்கள் மீதும் அன்பு செலுத்துபவர்களாக இருந்தார்கள். இப்படி... பார்க்கின்ற உயிர்களிலெல்லாம் பரமனையே காணும் சைவர்களைப் பார்த்தாலே பகை என்னும் தீ கொழுந்து விட்டு எரிவதால் தான் தண்டியடிகளின் திருப்பணிக்கு தடை போட வந்து நிற்கிறார்கள், சமணர்கள்.

அவர்களது கோபத்தை கண்ணில் காண முடியாவிட்டாலும் குரலில் அவர்களுடைய உஷ்ணம் தெரிந்தது தண்டியடிகளுக்கு! காதில் விழுந்த கோபக்கனலை பொருட்படுத்தாதவராய் அடிகளார் குளத்து மண்ணை அள்ளிக் கொண்டிருக்க... சமணர்களுக்கோ ஆத்திரம்! என்ன சொல்லி இந்தக் குருடனைத் தடுப்பது? என ஆளாளுக்கு யோசிக்கத் தொடங்கினர்.

கூட்டத்தில் முக்கியஸ்தரான சமணர், "இந்த ஆரூரிலே நீர் ஒருவர் தான் சிவத்தைத் தாங்கிப் பிடிக்கிறீரா? எவ்வளவு சைவர்கள் இருக்கிறார்கள்!? அவர்களுக்கெல்லாம் இல்லாத அக்கறை உமக்கு மட்டும் ஏன்?" என்று கேட்க, "ஒரு தாய், பல பிள்ளைகளைப் பெற்று, சீராட்டி, பாராட்டி வளர்த்தாலும் பெற்றவளுக்கு ஒவ்வொரு பிள்ளையும் ஒவ்வொரு விதத்தில் நன்றி செலுத்துவார்கள். நான் என்னுடைய தாயுமான சுவாமிக்கு இவ்விதம் நன்றி செலுத்துகிறேன். இதில் என்ன தவறு?" அமைதியுடன் கேட்டார், அடிகளார்.

அவர்களில் ஒருவன், "வேண்டியதை எல்லாம்

தருவான் உங்கள் கடவுள் என்பீர்களே! அந்த கடவுளிடம், குளத்தைத் தூர்வாரும்படி வேண்டிக் கொள்ளலாமே! பார்வையற்ற நீர் ஏன் இப்படி பாடுபட வேண்டும்? உங்கள் ஆண்டவன் இருப்பது உண்மையானால் கணப்பொழுதில் இக்குளம் சுத்தமாகி விடாதா?" எனக் கூறி பலமாகச் சிரிக்க, அங்கிருந்த சமணர்கள் அனைவரும் சேர்ந்து நகைத்தனர்.

மற்றொருவன், "அது கிடக்கட்டும் அய்யா!... இத்தனை பெரிய குளத்தை விடுங்கள்... இவருடைய முகத்தில் இருக்கும் இந்தச் சிறிய... இரண்டே இரண்டு கண்களுக்கு பார்வையை கொடுப்பாரா, இவர் வணங்கும் சிவபெருமான்?! தியாகேசா, தியாகேசா என்று கூவுகின்றாரே... குளத்தைத் தூர்வாரும் இந்த கண்ணற்ற தியாகிக்கு கண்பார்வையைத் தருவாரா அந்த தியாகேசன்? எல்லாம் வெற்று பக்தி! வீண் பிதற்றல்!" என்றதும் அனைவரும் கைகொட்டி ஆரவாரம் செய்தனர்.

இதனைக் கேட்ட தண்டியடிகளின் முகத்தில் ஒரு பிரகாசம் தோன்றியது. பெருமையுடன் நெஞ்சு நிமிர்த்தினார். "வேண்டியதைக் கொடுப்பவர் தான் என் ஈசன்; இதுவரை அவரிடம் நான் வேண்டியதெல்லாம், என் அறிவுக்குப் புலப்பட்ட இந்த தூர்ந்த குளம் தான்; இக்குளத்தை நான் தூர்வாரி தூய்மை செய்ய வேண்டும்; அதற்கேற்ற மனவலிமையைத்தா என்றுதான் என் இறைவனிடம் வேண்டினேன். நான் வேண்டியபடி மன வலிமையைத் தந்தார். அதனால் தான் நான் பாதையில் மண் கொட்டினேன் என்று கண்மண் தெரியாமல் சேற்றை வாரித்தூற்ற வந்திருக்கிறீர்கள்" என்றதும் அவர்கள் மிகுந்த கோபத்தோடு என்ன சொல்வதென்றே தெரியாமல் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்!

சமணர்களிடமிருந்து பதில் ஏதும் வராது போகவே தண்டியடிகள் தொடர்ந்து, "என் இறைவன் ஈசன் நினைத்தால் கண்களை மட்டுமல்ல; உயிரையே கொடுப்பார்! மார்க்கண்டேயனுக்கு ஆயுளைக் கொடுத்தவர்; மாலவனுக்கு சக்கராயுதம் கொடுத்தவர்; எனக்கு கண் பார்வை கொடுக்க மாட்டாரா?" என ஆவேசமாகக் கேட்டார்.

சமணர்களில் ஒருவன், "அப்படியென்றால் நீர் சிவனிடம் வேண்டிக் கொள்ளும்; பார்வை கிடைக்கிறதா என்று பார்ப்போம்!" என்றனர்.

"அப்படி பார்வை கிடைத்து விட்டால்...?" எனக் கேட்டார், அடிகளார்.

"உமக்கு பார்வை கிடைத்து விட்டால், நாங்கள் அனைவரும் உமக்குத் தடையேதுமின்றி இந்த ஆரூரை விட்டே சென்று விடுகிறோம். இது எங்கள் சமணத்தின் மேல் ஆணை!" என்றார், சமண முக்கியஸ்தர்.

அவ்வளவுதான் அனைவரும் கலைந்து சென்றனர்.

அன்று இரவு...

தனது குடிசையின் திண்ணையில் பலவாறாக சிந்தித்தபடி இருந்தார், தண்டியடிகள்! "எனக்கு கண் பார்வை கிடைக்குமா?... சமணர்கள் வெல்வார்களா? அப்படி அவர்கள் வென்று விட்டால் அய்யோ... நினைக்கவே நெஞ்சம் பதறுகின்றதே... என் இறைவனையல்லவா பழிச்சொல் சேரும். அந்த நிலை வரவேண்டாம், தியாகேசா..! அருள் புரிந்து என்னைக் காத்தருளும்" என வேண்டிக்கொண்டு படுத்தவர், உறக்கத்தில் ஆழ்ந்து விட்டார்.

அவரது கனவில், ஜடாமுடியும், திருநீற்று வாசமும் மணக்க, கையிலே சூலம் ஏந்திய கருணைக்கடவுள் தோன்றி, "பக்தனே... உன் எண்ணப்படியே எல்லாம் நடக்கும்! நீ கண்பார்வை பெறுவாய்; சமணர்கள் கண்பார்வை இழந்து ஆரூரை விட்டே அகன்று விடுவார்கள்! அனைத்தும் நலமாகும்" எனக் கூறி மறைந்தார். அடிகளாரின் தூக்கம் கலைந்தது; உள்ளம் மகிழ்ந்தது!

அதே நேரத்தில், ஆரூரின் மன்னன் கனவிலும் தோன்றினார், தியாகேசர், "மன்னா!.. தண்டியடிகளின் கண்கள் ஒளிபெறும்; சமணர்கள் பார்வையிழந்து ஆரூரை விட்டுச் செல்வர்; நீ... தண்டியடிகளின் விருப்பப்படி, குளத்தை தூர்வாரி தூய்மைப்படுத்து" எனக்கூறி மறைந்தார்.

மறுநாள்... காலை...

அரசனும் அவையோரும் குளக்கரைக்கு வர, பொதுமக்கள் குழுமினர். சமணர்கள் அனைவரும் வந்தனர்! வழக்கம் போல கோலை ஊன்றியபடி வந்த தண்டியடிகள், அரசன் வந்திருப்பதை அறிந்து, அனைவரையும் வணங்கியபின், தன் மடியில் வைத்திருந்த திருநீற்றினை எடுத்து நெற்றியில்

பூசிக்கொண்டு, "அரச பெருமானே! நான் பார்வை பெறுவதும், சமணர்கள் இவ்வூரை விட்டு அகலும்வரை அவர்கள் பார்வை இழப்பதும் ஆண்டவன் சித்தம்! இறைவன் இதை நிகழ்த்துவான்... 'ஓம் நமசிவய' என்று கூறி, திருக்குளத்தில் மூழ்கினார். எல்லோரும் பலவித எதிர்பார்ப்புடன் காத்திருக்க, மூழ்கியவர் எழுந்தார்... கண்களைத் திறந்தார்... தியாகேசரின் ஆலய கோபுரம் கண்ணில் பட்டது! "ஆரூரா! தியாகேசா!" என பெருமகிழ்வோடு ஆனந்தக் கூச்சலிட்டு, தலைக்கு மேல் கைகளை உயர்த்திக் கும்பிட்டார். ஒளிபெற்ற கண்களில் ஆனந்தக் கண்ணீர் அருவியாய் பெருகியது.

அடுத்த கணமே, சமணர்களின் பார்வை பறிபோனது. ஒருவர் கையை மற்றவர் பிடித்தபடி தலை கவிழ்ந்து அவர்கள் வெளியேறத் துவங்கினர்.

மன்னன், "தண்டியடிகளே! தங்களது நோக்கம் நிறைவேறும்; தூர்வாரும் பணிகளை எமது அரசு இப்போதே தொடங்கும். இறைவனின் அருளை முழுமையாய் பெற்ற நீர், இனி அரசனின் விருந்தினர்!" என்றதும் மகிழ்வுடன் ஆலயம் நோக்கி நடந்தார், தியாகேசரைத் தரிசிக்க!...

இப்படி இறைவனின் அருளைப் பெற்ற தண்டியடிகளை நாயன்மார் வரிசையில் இணைத்துக் கொண்டார், இறைவன்!



ரா. பன்னீர்செல்வம்



# அன்றாட சுலப வைத்தியங்கள்

ஆறாத புண்ணுக்கு:

ஆறாத புண்கள் குணமாக கருடன் கிழங்கு என்னும் பேய்ச்சீந்தில் கிழங்கை எண்ணெய்யுடன் சேர்த்துக் காய்ச்சி, பின்பு ஆறாத ரணங்கள், கட்டிகள் இவற்றின் மீது சில தினங்கள் மேல் பூச்சாக பூசிவிட வேண்டும்.

கருடன் கிழங்கைக் கண்டுவிட்டால் போதும், பாம்புகள் பயந்து விலகி ஓடிவிடும்!

வயிற்றுக் கிருமியின் விரோதி:

சிறுவள்ளிக் கிழங்கை நன்கு வெயிலில் காயவைத்து, பின்பு அதன் தோலை அகற்றி விட வேண்டும். பின், அதனை நன்கு இடித்து பக்குவம் செய்து, சூரணமாக்கி விடவேண்டும்.

ஒரு தேக்கரண்டி அளவுக்கு இந்த சூரணத்தை எடுத்து, கொஞ்சம் இஞ்சிச் சாறு சேர்த்து உட்கொள்ள, பாடாய் படுத்தி வந்த வயிற்றில் உள்ள கிருமிகள் இறந்து வெளியேறிவிடும்.

இரத்த ஓட்டம் சீர் பட:

சுலபமாகக் கிடைக்கும் கேரட்டில் வைட்டமின் A உள்பட அநேக சத்துக்கள் உள்ளன.

கேரட்டை உணவில் சேர்த்துக் கொள்வதின் மூலம் நம் இரத்த ஓட்டம் சீராவதோடு, ஜீரண மண்டல உறுப்புக்களான குடல், கல்லீரல், மண்ணீரல் போன்றவை பலம் பெறுகின்றன.

கூடுதல் பயனாக கண் குளிர்ச்சியும், தெளிவான பார்வையும் பெற கேரட் உதவுகிறது.

இவைகள் தவிர கேரட் வயிற்றுப் புழுக்களுக்கு எமனாகவும் உள்ளது.

நல்ல ஜீரண சக்திக்கு:

பிஞ்சு நூற்கோல் காயில் வைட்டமின் உயிர்ச்சத்துக்கள், புரத சத்துக்கள் ஆகியவைகள் இருப்பதால் வயிறு சம்பந்தப்பட்ட கோளாறுகளை நீக்கி, ஜீரண சக்தியைப் பெருக்கிவிடும்.

தங்கள் உணவில் நூற்கோலை சமைத்து தொடர்ந்து உண்பவர்களின் நரம்புத் தளர்ச்சி சம்பந்தப்பட்ட உடல் நடுக்கம் படிப்படியாகக் குறைந்து விடும். கருத்தரித்த பெண்களுக்கு நன்கு பால் சுரக்கவும் நூற்கோல் பலன் தரும்.

உடல் தேமல், படைக்கு:

படை, தேமல் ஆகிய சரும நோய்கள் குணமாக, வெங்காயச் சாற்றுடன், சிறிது வெள்ளைப் பூண்டைச் சேர்த்து மை போல் அரைத்து, படை, தேமல் மீது பூசி, தினமும் காலை, மாலை இருவேளைகளிலும் பற்றாகப் போட்டால் போதும்.

பல் வலியா?

பற்களின் பலவீனம் காரணமாக உண்டாகும் பல்வலி வந்தால் ஒரு வெங்காயத்தை எடுத்து சிறுசிறு துண்டுகளாக நறுக்கி, வலியுள்ள பல்லைச் சுற்றிலும் சற்று நேரம் வைத்திருக்க பல்வலி ஓடிவிடும்!

நீரிழிவு எனும் சர்க்கரை வியாதிக்கு:

தங்கள் உணவில் தினமும் அதிக இனிப்பை சேர்ப்பவர்கள் சர்க்கரை வியாதியை எதிர்நோக்கித் தான் ஆக வேண்டும்.

அதற்கு சில நோய் தீர்வுகள் இவை;

ஒரு கைப்பிடி அளவு கீழா நெல்லி இலைகளுடன், ஒரு டீஸ்பூன் மிளகுத்தூள் சேர்த்து காலை, மாலை

இரண்டு வேளைகளிலும் ஒருவாரம் சாப்பிட நற்பயன் கிடைக்கும்.

அடுத்து நாவல் பழங்களை கொட்டையுடன் வெயிலில் காய வைத்து பின்பு பொடி பண்ணி ஒரு டம்ளர் தண்ணீரில் ஒரு டீஸ்பூன் போட்டு பருகிவர குணம் கிட்டும்.

மற்றொரு நிவாரணமாக ஒரு தேக்கரண்டி மஞ்சள் பொடியை அரை கப் அளவு நெல்லிச் சாற்றில் கலந்து உட்கொள்ளலாம்.

ஜவ்வரிசி கஞ்சி தயாரித்து அதில் மோர், உப்பு கலந்து குடித்தாலும் நீரிழிவு கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும்.

சர்க்கரை வியாதி உள்ளோர் தங்கள் தினசரி உணவில் தக்காளியைச் சேர்த்துக் கொண்டால் நல்லதே!

### பாலுண்ணி அவதி:

பப்பாளி இலைக் காம்பை கிள்ளிவிட, சொட்டும் பாலை காலை, இரவு என இரு பொழுதுகளிலும் பாலுண்ணி மீது தடவிவர, விரைவில் பாலுண்ணி மறைந்துவிடும்.

### மூல நோயா?

நாயுருவி விதைச் சூரணத்தை, துத்திக் கீரையை வதக்கி வரும் கலவையுடன் சேர்த்து உணவு நேரத்தில் உட்கொள்ள பலவகை மூல நோய்களும் படிப்படியாய் குறைந்து விலகி விடும்.

### உடல் காய்ச்சலுக்கு:

காய்ச்சலால் வரும் அவதி நீங்க, உணவில் பசலைக் கீரை சேர்த்து உண்பதோடு, இத்துடன் தயிர், பால், கேழ்வரகுரொட்டி என இவற்றில் ஒன்றை மட்டும் சேர்த்துக் கொண்டால் நல்ல பயனளிக்கும்.

### ஆரோக்கியமான இதயம்:

கோழிக்கீரை என்று வழங்கப்படும் பருப்புக் கீரையைச் சாப்பாட்டுடன் சேர்த்து உண்டுவர, இதயம் என்றும் எவ்வித பாதிப்பும் இன்றி இருக்கும். இக்கீரை ரத்த உறைவை அழிப்பதோடு, மாரடைப்பு வராமலும் பார்த்துக் கொள்கிறது. கெட்ட கொலஸ்ட்ராலைக் குறைத்து, அதனை நல்ல கொலஸ்ட்ராலாக மாற்றிவிடும் குணம் இக்கீரைக்கு உண்டு.

தவிர ரத்தக் கொதிப்பு, முடி கொட்டுதல், மலக்கட்டு, மூட்டு வலி இவற்றையும் போக்க வல்லது பருப்பு கீரை.

### குடல் புழுக்கள் அழிய, அகத்திக்கீரை:

துவர்ப்புடன் கசப்பும் தரும் அகத்திக்கீரை நமக்கு ஒரு அருமருந்தே!

மலச்சிக்கல் அகல, குடல் புழுக்களை ஒழிக்க, உடல் துர்நாற்றம் போக, நெஞ்சு சளித் தொல்லை, உடல் வீக்கம் குறைய என பல நோய் நிவாரணியாகத் திகழும். நம் உணவில் சில நாட்கள் மட்டும் சேர்த்து வந்தால் போதுமானது.

### உறுதியான எலும்பு மண்டலத்துக்கு:

சாதாரணமாக வயல், வரப்புகளில் கூட கிடைக்கும் கரிசலாங்கண்ணிக் கீரை பல வகைகளிலும் தீர்வு தரும் மருந்தாகச் செயல்படுகிறது.

மாவுப்பொருள், புரதம், கால்சியம், பாஸ்பரஸ், இரும்பு என பல்வகைச் சத்துக்கள் இக்கீரையில் அடங்கும்.

எலும்பு மண்டலம் உறுதியாக இருக்கவும், நம் நரம்பு மண்டலம் துடிப்புடன் திகழவும், தலை முடி அடிக்கடி உதிர்வதைத் தடுக்கவும், உடல் பருமனை குறைக்கவும், மலச்சிக்கல் இன்றி இருக்கவும், நம்முடைய கல்லீரல், மண்ணீரல் உறுப்புகள் கெட்டுப் போகாமல் இருக்கவும், உடல் சூடு ஒரே சீராக அமையவும், என கரிசலாங்கண்ணிக் கீரை சேர்த்துப்பட்ட உணவு, ஒரு சிறந்த பாதுகாப்பான தாவர உணவாகச் சிறக்கிறது!



குடந்தை நாராயணி

# தானமும், தர்மமும்



தானம் என்பது நம்மை விட நிலையில் உயர்ந்தவர்களுக்குச் செய்வதாகும். அதாவது கல்வி கேள்வியில், ஞானத்தில், தவத்தில்... உயர்ந்தவர்களுக்குச் செய்வதாகும். உதாரணமாக வேதம் கற்றறிந்த அந்தணர்கள், குலகுருக்கள், சுத்த துறவிகள், உத்தமமான சாதுக்கள்... போன்றோர்களுக்குச் செய்வது.

தர்மம் என்பது நம்மை விட நிலையில் தாழ்ந்தவர்களுக்குச் செய்வதாகும். உதாரணமாக ஆதரவற்ற முதியோர்கள். நிர்கதியாய் இருக்கும் அநாதைகள், மனநலம் குன்றியவர்கள், வாழ்வாதாரத்திற்காக சிரமப்படுபவர்கள், உணவிற்காக யாசிப்பவர்கள், அடிப்படைத் தேவைகளான உண்ண உணவு, உடுத்த உடை, இருக்க இடம் இதற்காகச் சிரமப்படுபவர்களுக்கு செய்வது.

ஞானிகள் கருத்து யாதெனில்; தானம் செய்வதால் புண்ணியங்கள் சேரும். தர்மம் செய்வதால் செய்த பாவம் விலகும்.

அதாவது செய்த தானத்திற்கு ஏற்ப சேரும் புண்ணியங்கள் வரும் காலங்களிலோ, அடுத்தடுத்த பிறவிகளிலோ வெளிப்பட்டு ஆனந்தமாய் வாழ வைக்கும். ஓங்கி, உயர்ந்து, வாழ்வாங்கு வாழலாம். அது போலவே செய்த தர்மத்திற்கு ஏற்ப நாம் கடந்த காலங்களில் செய்த, சென்ற பிறவிகளில் செய்த பாவங்களும், சாபங்களும் விலகும். இதனால் வருங்கால துன்பங்களிலிருந்தும், துர்நிகழ்வுகளிலிருந்தும், கவலைகளிலிருந்தும் தப்பிக்கலாம்.

அவரவர்கள், அவரவர் நிலைக்கு ஏற்ப தானமும், தர்மமும் செய்து அடுத்த நிலைக்கு உயர்வோம்.

ஹரிதா

சித்தர் பூமி

# பூண்டி மகான்

# மணலில் புதைந்து தியானம்



மகான்கள் என்றாலே மர்மம் நிறைந்தவர்கள் என மக்கள் நினைக்கின்றனர். ஏனென்றால், சாதாரணமான மக்களின் பார்வைக்கு, மகான்களின் செயல்பாடுகள் எல்லாமே மர்மமாகத்தான் இருக்கும். ஆனால், அந்த மகான்களிடம் மர்மம் ஏதும் இருக்காது. எல்லாமே மகேசன் செயல் என, மக்களின் நல்வாழ்வுக்கு வழிகாட்டியவர்கள் மகான்கள்.

அப்படிப்பட்ட மகான்களில், கடந்த தலைமுறை கண்ட கடவுளின் சொரூபம் தான் பூண்டி மகான் ஆவார்!

இவரது பெயர் என்ன? எங்கிருந்து வந்தார்? இது இன்று வரை யாருக்குமே தெரியாது.

திருவண்ணாமலை என்னும் புண்ணிய பூமிக்கு அருகில் உள்ள கலசபாக்கம் என்னும் புனித தலத்திற்கு எங்கிருந்தோ ரயிலில் வந்து இறங்கியுள்ளார். சில காலம் அந்தப் பகுதியில் உள்ள பல ஊர்களில் சுற்றித் திரிந்த வண்ணம் இருந்திருக்கிறார்.

கிழிந்த சட்டைகளை ஒன்றின் மேல் ஒன்றாக பல சட்டைகள் போட்ட ஒல்லியான தேகம். நீண்ட வெளுத்த தாடி. கையில் எப்போதும் வீணாய்ப்போன பொருட்கள் அடங்கிய ஒரு மூட்டை! இப்படியொரு தோற்றத்தில் உள்ள ஒருவரைப் பார்க்கும் போது சாதாரண மனிதர்களுக்கு என்ன தோன்றும்?!...

வழக்கம் போல 'பிச்சைக்காரன்' என்றனர் சிலர். வேறு சிலரோ 'பைத்தியக்காரன்' என்றார்கள். காரணம்; ஞானிகளை பார்த்தவுடன் இனங்காணும் அளவுக்கு சாதாரண மனிதர்களுக்கு ஞானம் ஏது? ஆகவே, மனிதப் பிறவிகளின் பொதுவான நோக்கு இப்படித்தான் இருந்தது.

அங்கே, இங்கே என சுற்றித்திரிந்த சுவாமிகள், கலசப்பாக்கத்திற்கு அருகில் உள்ள பூண்டி என்கிற ஊர் வந்து சேர்ந்தார். அது 1940 ஆம் ஆண்டு!

அலைகள் ஆனந்த தாளம் போட்டபடி, அசைந்து மிதந்து செல்லும் செய்யாறு சிலுசிலுப்பைத் தந்து கொண்டிருக்கும் சிறிய ஊர்.

தான் எங்கே, எப்படி இருக்க வேண்டும் என்பதை தாங்களே தீர்மானிப்பவர்கள் தான் மகான்கள். அப்படித்தான் தனக்கான இருப்பிடமாக அந்த ஆற்றங்கரையைத் தேர்ந்தெடுத்தார் சுவாமிகள்.

ஊருக்கு வெளியே, ஆற்றங்கரையோரம் வீடா

இருக்கும்? முட்புதர்களுக்கு இடையே, பஞ்சு மெத்தையில் படுத்திருப்பது போல ஆனந்த சயனத்தில் இருப்பார்.

திடீரென 'காக்கரை' பகுதியில் உள்ள சுடுகாட்டிற்குச் செல்வார். அங்கே ஏகாந்த நிலையில் ஆனந்தம் காண்பார். இப்படி இருக்கும் ஒருவர் தன்னை மகான் என்று வெளிப்படுத்திக் கொள்ளும் நேரம் வந்தது.

மகானின் செயல்பாடுகளைக் கூர்ந்து கவனித்த ஒரு அன்பரின் நெஞ்சில், "இவரிடம் ஏதோ சக்தி உள்ளது" என்கிற எண்ணம் உண்டாக, அவரை தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று, உணவருந்தச் செய்தார். இதற்குப் பிறகு இவரிடம் ஏதோ சக்தி உள்ளது என்பதை அறிந்த மக்கள், இவரது தரிசனம் பெறுவதற்காக தேடிவரத் தொடங்கினர்.

ஆற்றங்கரையில் இவரைத் தேடிச்சென்ற மக்கள் இவரை 'ஆற்று சாமியார்' என்று அழைக்கத் துவங்கினார்கள்.

தன்னைப் பார்க்க வரும் பக்தர்கள் அனைவருக்கும் விபூதி பூசினார், சுவாமிகள். இதன்மூலம் மக்களுடைய வினைகள் தீர்ந்தன; இவரை நாடி வந்தவர்கள் தங்களது பிரச்சனைகள் தீரப்பெற்றார்கள். உடலில் தீராத நோய் என்று வந்தவர்களுக்கு, அருகிலே இருக்கும் செடிகளின் தழைகளை எடுத்து கசக்கி, மூலிகைச் சாறு என்று கொடுப்பார். உடனே அவர்கள் நோய் நீங்கப் பெற்றார்கள்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பார்கள். அப்படிப்பட்ட செல்வத்தை வழங்கும் மகானை மக்கள் கொண்டாடத் தலைப்பட்டனர்!

இது தவிர, மகான்களுக்கே உரித்தான மகத்தான பண்பு இவரிடம் காணப்பட்டது. அதாவது, ஓரிடத்தில் அவர் அமர்ந்து ஒரு சில பக்தர்களுக்கு ஆசி வழங்கிக் கொண்டிருக்கும் அதே வேளையில், இன்னொரு இடத்தில் அவசியம் கருதி, வேறு ஒருவருக்கு ஆசி வழங்கிக் கொண்டிருப்பார். இப்படி ஒரே நேரத்தில் பல இடங்களில் தன்னுடைய பக்தர்களுக்கு தரிசனம் கொடுப்பது சித்த புருஷர்களின் இயல்பு அல்லவா? பூண்டி மகானின் இத்தகைய சித்துகள் நாளடைவில் நாடு முழுவதும் பரவத் தொடங்கியது.

இந்த நிலையில், அந்தப் பகுதி முழுவதும் கடுமையான வறட்சி நிலவியது. செய்யாற்றின் தண்ணீரை நம்பி விவசாயம் செய்த மக்கள் செய்வதறியாது திகைத்தனர். கரைபுரண்டு நீரோட வேண்டிய ஆற்றில், கண்ணுக்கு எட்டிய தூரம் வரை மணலே காட்சியளித்தது!

மக்களில் சிலர் மகானை பார்ப்பதற்காக ஆற்றங்கரைக்கு வந்த போது, கடுமையான வெப்பத்தில் தகித்து சூடாகிப் போயிருந்த ஆற்று மணலை மலர்ப்படுக்கை போல பாவித்து, வெற்றுடம்போடு படுத்துக் கிடந்தார், சுவாமிகள்!

பார்த்தவர்கள் எல்லாம் பதைபதைத்துப் போனார்கள். வெறுங்காலைத் தரையில் வைக்க முடியாத அளவிற்கு சூடு தாளவில்லை... அப்படியிருக்க... சூடேறி நெருப்பாய்த் தகிக்கும் ஆற்று மணலை படுக்கையாக்கி, அனந்த சயனத்தில் ஆழ்ந்துள்ளாரே...! இது என்ன அதிசயம்! என வியப்படைந்தோர் சிலர்; பதைபதைத்தோர் பலர்!

இந்தக் கடும் பஞ்சத்தையும், வறட்சியையும் தாளமுடியாத பூண்டி மக்கள் பெரும்பாலானோர் ஒன்று சேர்ந்து, மகானை சந்தித்து தீர்வு கேட்க நினைத்தனர். இது நடந்தது 1943 ஆம் ஆண்டு. மக்கள் அனைவரும் மகானிடம் சென்று, "சுவாமி... மழையில்லாமல் நாங்கள் அவதிப்படுகிறோம்; மாடு, கன்று தாகம் தீர்க்கக்கூட தண்ணீர் இல்லை; ஆற்றுப்பாசனம் இல்லாமல் விவசாயமும் படுத்து விட்டது. எங்கள் வாழ்க்கைக்கு நீங்கள் தான் வழிகாட்ட வேண்டும்; தங்கள் கருணையால் மழை பெய்யச் செய்யவேண்டும்" என வேண்டினர்.

சில வினாடிகள் கண்களை மூடி, தியானத்தில் அமர்ந்த சுவாமிகள், கண்களைத் திறந்து எல்லோரையும் பார்த்தார். "இன்று இரவு மழை பெய்யும்; இன்னல்கள் தீரும்" என ஆசி கூறினார். மக்கள் சுவாமிகள் மீது கொண்ட அளவற்ற நம்பிக்கையோடு மகிழ்வுடன் கலைந்து சென்றனர்.

சுவாமிகள் சொன்னது போலவே, அன்று இரவு பெய்ய ஆரம்பித்த மழை, நின்று நிதானமாக இரண்டு நாட்கள் நீடித்தது. மக்கள் யாரும் வீட்டைவிட்டு வெளியே வரமுடியாத நிலை. செய்யாற்றில் கடும் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது.

மழை நின்ற பிறகுதான், மக்களுக்கு பூண்டி மகானின் நினைவே வந்தது. இரண்டு நாட்கள் விடாமல் பெய்த

மழையில் சுவாமிக்கு என்ன ஆனதோ? என்று பதட்டமடைந்தார்கள். அவரைக் காணவேண்டும் என்று பதறி, ஆற்றங்கரைக்கு ஓடினார்கள்.

வழக்கமாக அவர் இருக்கும் இடத்தில் பெரிய மண்மேடு தான் காணப்பட்டது. பதறித் துடித்த கிராம மக்கள் மண்ணை அகற்றிவிட்டுப் பார்த்த போது... அங்கே, எதுவுமே நடவாதது போல் மகான் தியான கோலத்தில் அமர்ந்திருப்பதைக் கண்டனர். இறையருள் பெற்ற ஞானியரை இயற்கை சீற்றங்கள் எதுவும் செய்யாது என்பதனை அனைவரும் உணர்ந்தனர். இதன்பிறகு, மகானின் புகழ் மாநிலமெங்கம் பரவி, மக்கள் அவரை போற்றி வணங்கத் தலைப்பட்டனர்.

ஒரு முறை வில்வாரணி என்னும் ஊரைச் சேர்ந்த ஒரு நபர், சுவாமிகளை தனக்கே உரிமையானவராக நினைத்து, தன்னுடைய வீட்டுக்கு உணவருந்த அழைத்தார். சுவாமிகளும் சென்றார். அவருக்கு சிறப்பான உணவளித்த அவர், சுவாமிகள் வெளியே சென்று விடாதபடி, உள்ளேவைத்து பூட்டி விட்டார்.

நள்ளிரவு நேரம்... மாட்டுக்கு தண்ணீர் வைக்கும் தொட்டி ஒன்று, அந்த வீட்டிற்கு வெளியே இருந்தது. சுமார் ஐந்து குடம் கொண்ட தண்ணீர் மாடுகளுக்காக நிரப்பப்பட்டு இருந்தது. அந்தத் தொட்டியிலிருந்து ஏதோ சத்தம் வரவே, அந்த நபர் எழுந்து வந்து பார்த்தார். அவரது கண்களை அவராலயே நம்ப முடியவில்லை!

தொட்டியில் இருந்த அத்தனை தண்ணீரையும் சொட்டு விடாமல் குடித்துக் கொண்டிருந்தார், பூண்டி மகான்! இவருக்கோ மிகப் பெரும் அதிர்ச்சி! இவ்வளவு தண்ணீரையும் ஒருவரால் எப்படி குடித்திருக்க முடியும்? அத்துடன் பூட்டிய பூட்டு அப்படியே இருக்க... உள்ளிருந்தவர் எப்படி வெளியே வந்தார்?... நாம் நினைத்தது போல் அல்ல... இவர் பெரிய ஞானி! தவறு செய்து விட்டேனே... என கதறியபடி சுவாமிகளின் காலிலே விழுந்து தன்னை மன்னித்து விடுமாறு கதறினார்.

காட்டாற்றுக்கு அணைபோட எவரால் இயலும்? இந்த சம்பவத்திற்குப் பின் பூண்டி மகானை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் யாருக்குமே ஏற்படவில்லை. சுவாமிகளின் மகிமையை முன்னிலும் அதிகமாக உணரத் தொடங்கினர், மக்கள்!

1959 ஆம் ஆண்டு, பூண்டி கிராமத்தில் சாலையோரம் இருந்த ஒரு வீட்டின் திண்ணையில் சுவாமிகள் தானே வந்து அமர்ந்தார். இந்த இடத்தில் ஒரு நாள், இரு நாள் அல்ல, சரியாக 19 ஆண்டுகள்... அதாவது தான் ஜீவன்முக்தி அடையும் வரையில் இந்தத் திண்ணையிலேயே அமர்ந்திருந்தார், சுவாமிகள் பூண்டிமகான்.

இந்த காலகட்டத்தில் பூண்டி மகான் நிகழ்த்திய சித்து வேலைகள் அனேகம்! ஒருமுறை, சுவாமிகளை தரிசனம் செய்ய தொலைதூரத்திலிருந்து வந்த ஒரு பெண்மணியை வழியில் மடக்கிய சில திருடர்கள், அந்தப் பெண்மணியின் நகைகளை பறித்துக்கொண்டு ஓடினர்!

அந்தப் பெண்ணோ... அழுது அரற்றியபடியே, சுவாமிகளின் முன் வந்து தன் நிலையைச் சொல்லி கதற... ஒரு இரும்புக் கம்பியை எடுத்து, தன் நெற்றியில் வைத்து தியானித்த சுவாமிகள், அந்த பெண்ணிடம் கொடுக்க... அது தங்கக்கம்பியாக மாறியிருந்ததைக் கண்ட பக்தர்கள் சொல்ல முடியா அளவுக்கு வியப்படைந்தனர்.

அதிகாலை நேரத்தில் வந்து பார்த்த ஒருவருக்கு மிகப்பெரிய கருநாகம் போல காட்சி தந்தார்... அவர் அலறி அடித்து ஓடுவதைக் கண்டு, சுய உருவில் வந்து சிரித்தாராம். இன்னொருவருக்கு சிங்கம் படுத்திருப்பது போல காட்சி கொடுப்பாராம்.

பக்தர்கள், உணவுப் பொருட்களுடன் சுவாமிகளைத் தேடி வருவர். அவர்கள் கொடுக்கும் உணவை சுவாமிகள் வாங்கிச் சாப்பிட்டு விட்டால் பிறவிப்பயன் பெற்றுவிட்ட ஆனந்தத்தை அடைவதோடு, துன்பங்கள் தீரப்பெற்றனர்.

ஒரு சிலரைப் பார்த்ததுமே அவர்கள் பாவம் செய்தவர்கள் என்பதனை சுவாமிகள் உணர்ந்து கொள்வார். அவர்களை விலகிக் போகும்படி சொல்வதோடு அவர்கள் கொடுக்கும் உணவுகளை ஒரு ஓரமாக வீசிவிடுவார். அவற்றை யாரும் தொடக்கூடாது என்றும் சொல்லிவிடுவார்.

அப்படி வீசப்பட்ட உணவுப் பொருட்கள், பெருமளவு குவிந்திருக்கும். எத்தனை நாட்கள் ஆனாலும் அந்த உணவுப் பொருட்களிலிருந்து துர்நாற்றம் வராது என்பது நம் மகானின் மகிமையாகும்.

தினம் தினம் பூண்டி மகானை சந்திக்க, அப்பகுதி மக்கள் மட்டுமின்றி, நாடெங்கிலுமிருந்து பக்தர்கள் வந்தனர். நல்லோரது குறைகளையெல்லாம் நம் மகான் தீர்த்து வைத்தார்.

ஆற்றங்கரை வழியாக பால் கொண்டு செல்லும் பால்காரர் ஒருவர் தினமும் சுவாமிகளுக்கு ஒரு குவளை பால் கொடுப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். ஒருநாள் அப்படி அவர் பாலைக் கொடுத்தபோது சுவாமிகள், “எல்லாப் பாலையும் கொண்டுவா” என கட்டளையிட்டார். அவர் அப்படியே கொண்டுவந்து கொடுத்தார். மொத்த பாலையும் ஒரே மூச்சில் குடித்தார் சுவாமிகள். எல்லோரும் பார்த்தபடியிருக்க... அடுத்த சில நொடிகளில் தான் குடித்த பால் மொத்தத்தையும் வாந்தி எடுத்தார்! பிறகு தான் அந்தப் பாலில் விஷப்பூச்சிகள் இருப்பது தெரியவந்தது.

மொத்தப் பாலையும் பால்காரர் விற்றிருந்தால், எத்தனை குழந்தைகள், எத்தனை பெரியவர்கள் பாதிக்கப் பட்டிருப்பார்கள்? அதனைத் தடுக்க, தன்னையே வருத்திக் கொண்டார், நம் பூண்டி மகான்.

இப்படி, பூண்டி மகான் செய்த திருவிளையாடல்களும், சித்து விளையாட்டுகளும் ஏராளம். இதமான வாழ்வுதேடி வந்தவர்கள் யாவர்க்கும் இறைவனாகவே தோன்றி இன்ப வாழ்வைக் கொடுத்தார். குறைகளோடு வந்தவர்களைக் கோபுரத்தில் ஏற்றி வைத்த கண்கண்ட தெய்வம் தான் ஆற்று சுவாமிகள் என்கிற நம் பூண்டி மகான் ஆவார்.

அதனால்தான் திருமுருக கிருபானந்த வாரியார், விசிறி சுவாமிகள் போன்ற மகான்கள், பூண்டி மகானின் பெருமை, புகழை தனது பக்தர்களிடம் எடுத்துச் சொன்னார்கள்.

இத்தனை அற்புதங்கள் நிகழ்த்தி, எல்லோரது நல்வாழ்வுக்கும் வகைசெய்த பூண்டி மகான் தான் வந்த வேலை முடிந்து விட்டது; இனி முக்தியடைவேன் என தனது பக்தர்களிடம் கூறி, 1978 ஆம் ஆண்டு, தான் அமர்ந்திருந்த திண்ணையிலேயே ஜீவசமாதி அடைந்தார்.

அவரது பக்தர்கள் இவ்விடத்தில் கற்கோவில் அமைத்து, இன்று வரை வழிபட்டு வருகின்றனர். திருவண்ணாமலையிலிருந்து 20 கிலோமீட்டர் தொலைவே உள்ள பூண்டிக்கு சென்று, இன்றும் கருணையோடு அருளும் மகானின் தரிசனம் பெறுவோம்.



**ரா. பன்னீர்செல்வம்**

# மனதின் அனைத்து ஆசைகளையும்
## நிறைவேற்ற எளிய லால் கிதாப் பரிகாரங்கள்



திரு. செந்தில் நாதன்
ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்






இந்த உலகத்தில் மனிதனாய் பிறந்த ஒவ்வொருவருக்கும் ஆசைகள் என்று எல்லா காலக்கட்டத்திலும் உண்டு. ஆசைகள் வேண்டுமானால் மாறலாமே தவிர ஆசைகள் இல்லாத நிலை என்று ஏதுவும் இல்லை. மாணவர்களுக்கு படிப்பில் வெற்றிபெற ஆசை. இலைஞர்களுக்கு காதலில் வெற்றிபெற ஆசை. திருமண வயதில் இருப்பவர்களுக்கு தனக்கு பிடித்தமான துணை அமையவேண்டும் என்று ஆசை. மத்திம வயதில் இருப்பவர்களுக்கு சொத்து சேர்க்கவேண்டும் என்று ஆசை. வயதானவர்களுக்கு ஆன்மீக வாழ்வின் மீது ஆசை. இப்படி ஆசைகள் இல்லாதவர்களே இந்த உலகில் இல்லை.

அவரவர் ஆசைகளை நிறைவேற்ற படாதபாடு படவேண்டியதும் உள்ளது. சிலருக்கு வாழ்க்கை முழுவதும் தனது ஆசைகளே நிறைவேறாமல் போவதும் உண்டு. தன் மனதின் ஆசைகளை எளிதாக நிறைவேற்றுவதற்கு கீழே மிக எளிமையான லால் கிதாப் பரிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. அனைவரும் அவற்றை முறையாக செய்து அவர்கள் மனதில் உள்ள ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ள கீழே கொடுக்கப்பட்டுள்ள பரிகாரங்களை பார்ப்போம்.

1. கடலை மாவால் செய்யப்பட்ட இனிப்பான லட்டுக்களை புதங்கிழமை அன்று விநாயகருக்கு படைத்து வழிபட்டுவர வேண்டும்.

2. ஐந்து விதமான பழ வகைகளை எதாவது ஒரு கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு தானமாக வழங்க வேண்டும்.

3. வீட்டின் வெளிபுறத்தில் துளசி மாடத்தில் துளசி செடியை வளர்த்து தினமும் தண்ணீர் ஊற்றி வரவேண்டும். அவ்வாறு நீர் ஊற்றும் போது மகா விஷ்ணுவிடம் மனதின் ஆசைகளை நிறைவேற்றி தருமாறு வேண்டிக்கொள்ள வேண்டும்.

4. ஒரு அரச மரத்தின் கீழே விளக்கேற்றி சாம்பிராணி மற்றும் ஊதுபத்தியை ஏற்றி வழிபட்டு வரவேண்டும்.

5. திங்கள் கிழமைகளில் சிவ லிங்கத்தின் மீது பால் அபிஷேகம் செய்து வழிபட்டு வரவேண்டும். அது மட்டும் அல்லாமல் வில்வ இலைகளை கொண்டும் அர்ச்சனை செய்ய வேண்டும்.

6. ஆல மர இலைகளில் உங்கள் ஆசைகளை எழுதி ஓடும் ஆற்றில் விட வேண்டும்.

7. மிக விரைவில் உங்கள் ஆசைகள் நிறைவேற ஒரு தேங்காயை வெள்ளை துணியில் சுற்றி ஓடும் நீரில் விட்டுவர வேண்டும்.

உங்கள் ஆசைகள் அனைத்தும் நிறைவேற மிகப்பெறிய அழவுள்ள மஹா விஷ்ணுவின் படமும் மஹா லட்சுமியின் படமும் வைத்து தினமும் வழிபாடு செய்து வரவேண்டும்.



# விரும்பியதை அருளும் உறையூர் வெக்காளி அம்மன்!!

இப்பிரபஞ்சமே சக்தியின்றி அசைவதில்லை. எல்லா உருவிலும் எங்கும் காணப்படும் அந்த பராசக்திதான் அனைத்தையும் இயக்கி வருகிறார். அதனாலேயே ஒவ்வோர் ஊரிலும், ஒவ்வொரு வடிவிலும் பல்வேறு பெயர் தாங்கி அருள்பாலித்து வருகிறாள்.

அன்னை பராசக்தி திருச்சி உறையூரில் வானமே கூரையாய்க் கொண்டு வடக்கு நோக்கிய யோக பீடத்தில் அமர்ந்து வெக்காளி அம்மனாகக் கம்பீரமாகக் காட்சி தருகிறார். ஒரு கரத்தில் திரிசூலம், ஒரு கரத்தில் உடுக்கை, மற்றொரு கரத்தில் பாசம், இன்னொரு கரத்தில் அட்சய பாத்திரம் என நான்கு கரங்களைக் கொண்டிருக்கிறாள். கழுத்தில் திருமாங்கல்யமும், முத்தாரம், அட்டிகை, தலையில் பொன்முடி, கையில் வளையல்கள் அணிந்திருக்கிறாள். பீடத்தில் வலது காலை மடித்தும், இடது காலை அசுரன் மீது பதியவைத்தும் அருள்பாலிக்கிறாள். இடுப்பில் யோக பட்டம் அணிந்திருக்கிறாள். வலத்துக்காலை மடித்து இடத்துக்கால் பாதத்தை அசுரன் மீது பதியவைத்திருப்பது அபூர்வ காட்சியாகும். வலது கால் மடித்து இடது காலை ஊன்றியது சுகாசனம் ஆகும். இவ்வாறு இருப்பதால் யாவர்க்கும் சுகமே பிரசாதம் என்பதாகும்.

“வெக்காளி” என்றால் வெஃகாளிஸ்ரீவெக்காளி

வெம்ஸ்ரீ வெம்மை, விருப்பம் மற்றும் வெயில் முதலிய மூன்று பொருள்களும் தருவதாகும். மங்கலப் பொருள் அனைத்தும் தருபவள் வெக்காளியே ஆவாள்.

அனைத்து கோயில்களிலும் மேல் விமானமானது கருவறைக்கு மேல் இருக்கும். ஆனால் வெக்காளி அம்மன் கோயிலில் மேல் விமானம் கிடையாது. இந்த கோயிலில் இருக்கும் வெக்காளி அம்மன் விரும்பியதை அருளும் சக்தி படைத்தவர். மழை, வெயில், பனி என அனைத்தையும் தாங்கி பக்தர்களின் குறைகளையும், நோய்களையும் தீர்த்து மக்களைக் காத்து அருள்பாலிக்கின்றார்.

இந்த ஊருக்கு வாசபுரி, கோழியூர், மூக்கீச்சுரம், தேவிபுரம், உரகபுரம் ஆகிய சிறப்புப் பெயர்கள் உண்டு. உறையூர் முற்காலச் சோழர்களின் தலைநகரமாகும். முற்கால சோழர்களின் குல தெய்வமான வெக்காளி அம்மன், திருச்சி நகரின் காவல் தெய்வமாக இருக்கின்றார்.

### ஸ்தல வரலாறு:

உறையூரை வன்பராந்தகன் என்ற மன்னர் ஆட்சி செய்த காலத்தில் சாரமா என்ற முனிவர் நந்தவனம் அமைத்துப் பல மலர்ச் செடிகளை வளர்த்தார். அதில் மலரும் பூக்களைக் கட்டி, நாள்தோறும் திருச்சி மலைக்கோட்டை அருள்மிகு தாயுமானவர் சுவாமிக்கு அணிவித்து வந்தார். ஆனால் மன்னன் வன்பராந்தகன் தனது மனைவி புவனமாதேவியின் கூந்தலில் சூடுவதற்காகத் தினமும் அவனது ஆட்கள் நந்தவனத்திற்கு வந்து பூக்களைச் சாரமா முனிவரின் அனுமதி பெறாமலேயே பறித்துச் சென்றனர். தாயுமானவருக்குரிய மலர்கள் மன்னருக்குச் செல்வதைக் கண்டு வன்பராந்தகனிடம் முறையிட்டார். ஆனால் முனிவரை மன்னர் அலட்சியப்படுத்தினார், இதனால் மனம் வருந்திய முனிவர்,

தாயுமானவரிடம் முறையிட்டார். இதனால் கிழக்கு நோக்கிய சிவபெருமான், கோபக்கனல் கொண்டு மேற்கு நோக்கித் திரும்பினார். அவரது உக்கிரப் பார்வையால், உறையூரையும் அங்கிருந்த மன்னன் அரண்மனையும் மண் மழை பொழிய வைத்தார். இதனால் வீடிழந்த மக்கள், தங்களைக் காக்க எல்லைத் தெய்வமாக அமைந்த வெக்காளியம்மனிடம் தஞ்சம் புகுந்தனர். தாயுமானவ சுவாமியின் சினத்தைத் தணிக்க முழு நிலவாக மாறி, அவர் முன்பு தோன்றினாள். அன்னையின் குளிர்ந்த பார்வை கண்டு இறைவன் அமைதி கொண்டதால் மண் மழை நின்றது. மக்களின் துயரம் கண்டு வருந்திய அன்னை, மக்கள் அனைவருக்கும் வீடு கிடைக்கும் வரை நானும் உங்களைப் போல வெட்ட வெளியிலேயே இருக்கிறேன் என்று அருளியதாக ஸ்தல வரலாறு கூறுகிறது.

### கோயில் அமைப்பு:

கோயிலைச் சுற்றிலும் அழகான மண்டபம் அமைந்தாலும், வெக்காளி அம்மன் மட்டும் தன் வாக்குப்படி வெட்டவெளியில் நடுநாயகமாக வடக்கு முகமாய் வானமே கூரையாக, மேகங்களே திருவாசியாக, மழையே அபிஷேகமாக, நட்சத்திரங்களே மலர்களாகக் கொண்டு இருக்கிறாள்.உடுக்கை, பாசம், சூலம் ஏந்திய நிலையில் அருள்பாலிக்கின்றார். ஆலயத்திற்கு தெற்கு, வடக்கு வாசல்கள் உள்ளன. தெற்கு வாசலில் நுழைந்தால் இடது பக்கம் வல்லப கணபதி சந்நிதி அமைந்துள்ளது. அவரை வணங்கிச் சென்றால், விசாலாட்சி சமேத விஸ்வநாதர் சந்நிதி உள்ளது, இதைத் தொடர்ந்து வள்ளி - தெய்வானை சமேத முருகன், காத்தவராயன், புலி வாகனத்துடன்



கூடிய பெரியண்ணன், மதுரைவீரன் சந்நிதிகள் அமைந்துள்ளன.

அடுத்ததாக நாகப்பிரதிஷ்டையுடன் விநாயகர் சன்னதி அமையப் பெற்றுள்ளது. இதனைத் தொடர்ந்து, உற்சவர் வெக்காளி, வடக்கு சுவரில் துர்க்கை, பொங்கு சனீஸ்வரர் என அனைத்து சந்நிதிகளும் வரிசையாக அமைந்துள்ளன.

இக்கோயிலுக்கு ஸ்தல மரமோ, தீர்த்தமோ கிடையாது.



### பிரார்த்தனை:

பக்தர்கள் தங்கள் மனதில் உள்ள குறைகளையும், வேண்டுதல்களை அலுவலகத்தில் சிறு காணிக்கை செலுத்தி, ஆலயத்தில் தரும் சீட்டில் எழுதி அதனை வெக்காளியின் திருப்பாதங்களில் வைத்து வணங்கி,

பிறகு அம்மன் முன்புள்ள திரிசூலத்தில் கட்டி விடுகின்றனர். இதன்மூலம் தங்கள் குறைகள் நிவர்த்தியாகும் என்பது ஐதீகம். தங்களின் பிரார்த்தனை நிறைவேறியதும், பக்தர்கள் கோயிலுக்குத் தாங்கள் வேண்டியதைக் காணிக்கையாகச் செலுத்துவது இன்றும் நிகழ்ந்து வருகிறது.

வெக்காளி அம்மனுக்கு விளக்கேற்றி வழிபட்டால் பெண்களுக்குத் திருமணத் தடையும் புத்திர தோஷமும் நீங்கும்

### நேர்த்திக்கடன்:

தங்கள் வேண்டுதல் நிறைவேறியதும் அம்மனுக்கு அபிஷேகம் செய்தும், வஸ்திரம் அணிவித்தும், நேர்த்திக்கடனை நிறைவேற்றுவார்கள்.

### திருவிழாக்கள்:

இந்த கோயிலில் பன்னிரண்டு மாதமும் திருவிழாக்கள் சிறப்பான முறையில் நடைபெறுகின்றது. சித்திரை மாத சித்திரைப் பெருந்திருவிழா, வைகாசி கடைசி வெள்ளியில் மாம்பழ அபிஷேகம், ஆனி மூன்றாவது வெள்ளியில் காய்கனி அலங்காரம், ஆடி அனைத்து வெள்ளிக்கிழமைகளில் சிறப்பு அபிஷேக, அலங்கார வழிபாடு, ஆவணியில் மகா சர்வசண்டி ஹோமம் மற்றும் பெருந்தீப வழிபாடு, புரட்டாசியில் நவராத்திரி திருவிழாவில் மற்ற கோயில்களைக் காட்டிலும் இத்திருக்கோயிலில் கருவறை அம்மனுக்கு அலங்காரம், அம்மனுக்கு உற்சவம் செய்யப்படுவதும் விசேஷமாகும். கார்த்திகை தீபத் திருவிழா, சொக்கப்பனை வழிபாடு. தை வெள்ளிக்கிழமைகளில், தைப்பூசத் திருநாளில் அம்மன் புறப்பாடு, மாசி கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் ஏகதின லட்சார்ச்சனை, பங்குனியில் பூச்சொரிதல் விழா.

### பௌர்ணமியில் சிறப்பு அபிஷேகம்.

வெக்காளி அம்மனுக்கு ஒவ்வொரு பௌர்ணமி தினத்தன்று அபிஷேக வழிபாடு நடைபெறும். ஒவ்வொரு மாதத்துக்கும் ஒவ்வொரு பொருள்கள் என்பது இங்குச் சிறப்பு.

### கோயில் திறந்திருக்கும் நேரம்:

இந்த கோயில் காலை 6 மணி முதல் 11 மணி வரை

மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரை திறந்திருக்கும்

### கோயில் அமைவிடம்:

திருச்சி மாநகரின் மத்திய பேருந்து நிலையத்திலிருந்து 6 கி.மீ. தொலைவிலும், சத்திரம் பேருந்து நிலையத்திலிருந்து 2 கி.மீ. தொலைவிலும் இக்கோயில் உள்ளது.

### போக்குவரத்து வசதி:

திருச்சி மத்திய, சத்திரம் பேருந்து நிலையங்களிலிருந்து உறையூர் வழித்தடத்தில் இயக்கப்படும் அனைத்து நகரப் பேருந்துகளிலும் செல்லலாம்.

திருச்சி ரயில் நிலையம் மற்றும் திருச்சி விமான நிலையத்திலிருந்து இக்கோயிலுக்குச் செல்ல கார், ஆட்டோக்கள் உள்ளிட்ட வாகன வசதிகள் உள்ளன.

### முகவரி:

அருள்மிகு வெக்காளி அம்மன் திருக்கோயில், உறையூர், திருச்சி மாவட்டம்.

### உறையூர் வெக்காளியம்மன் 108 போற்றி!

1. ஓம் சக்தியே போற்றி!
2. ஓம் இச்சா சக்தியே போற்றி!
3. ஓம் ஞான சக்தியே போற்றி!
4. ஓம் வெக்காளி அம்மயே போற்றி!
5. ஓம் ஆதி சக்தியே போற்றி!
6. ஓம் அகிலாண்ட நாயகியே போற்றி!
7. ஓம் எங்கும் நிறைந்தாய் போற்றி!
8. ஓம் ஏழைகளின் தாயே போற்றி!
9. ஓம் மங்கல நாயகி போற்றி!
10 ஓம் மதுரையை எரித்தாய் போற்றி!
11. ஓம் ஈசனின் தேவி போற்றி!
12. ஓம் இடபாகம் அமர்ந்தாய் போற்றி!
13. ஓம் தில்லைகாளியே போற்றி!
14. ஓம் சிறுவாச்சூர் காளியே போற்றி!
15. ஓம் அம்மை உமையே போற்றி!
16. ஓம் ஆனந்த வல்லி போற்றி!
17. ஓம் மாயனின் தங்கை போற்றி!
18. ஓம் மணி மந்திரகாளி போற்றி!
19. ஓம் ஆனந்த நடனமாடும் தேவியே போற்றி!
20. ஓம் செங்கண்மா தங்கை போற்றி!
21. ஓம் சிதம்பரம் காளி போற்றி!
22. ஓம் வேலனின் தாயே போற்றி!
23. ஓம் வேல் தந்த வித்தகி போற்றி!
24. ஓம் சந்தன காப்பில் சிரிப்பாய் போற்றி!
25. ஓம் சங்கரன் நாயகி போற்றி!
26. ஓம் உறையூரின் தேவி போற்றி!
27. ஓம் உள்ளத்தில் நிறைந்தாய் போற்றி!
28. ஓம் மங்கையர்க்கரசி போற்றி!

29. ஓம் மாணிக்க வல்லி போற்றி!
30. ஓம் கருணை உள்ளம் கொண்டாய் போற்றி!
31. ஓம் கற்பகத்தருவே போற்றி!
32. ஓம் கனக வல்லியே போற்றி!
33. ஓம் காரணி பூரணி போற்றி!
34. ஓம் தக்கன் கடை மொழிதாய் போற்றி !
35. ஓம் சாம்பவி சங்கரி போற்றி!
36. ஓம் அங்கையர் கண்ணி போற்றி!
37. ஓம் ஆதிபராசக்தியே போற்றி!
38. ஓம் வெட்ட வெளியில் அமர்ந்தாய் போற்றி!
39. ஓம் வெக்காளி தேவியே போற்றி!
40. ஓம் மோகத்தை அழிப்பாய் போற்றி!
41. ஓம் முக்கண்ணன் தேவியே போற்றி!
42. ஓம் சிம்ம வாகினியே போற்றி!
43. ஓம் சிக்கலை தீர்ப்பாய் போற்றி!
44. ஓம் மக்கள் மனதில் நிறைந்தாய் போற்றி!
45. ஓம் மழலைச் செல்வம் தருவாய் போற்றி!
46. ஓம் தத்துவ பொருளே ஆனாய் போற்றி!
47. ஓம் சாம்பவி சங்கரி மனோன்மணி போற்றி!
48. ஓம் சரணாபுயத்தி சம்ஹாரியே போற்றி!
49. ஓம் நமோ பகவதி உத்தமி போற்றி!
50. ஓம் பஞ்சாசர பகவதி போற்றி!
51. ஓம் எஞ்சாகரத்தி இன்பதாண்டவியே போற்றி!
52. ஓம் ஆணவம் அகற்றிஆட்கொள்வாய் போற்றி!
53. ஓம் நவ வடிவான நாராயணி போற்றி!
54. ஓம் ஜோதி சுடராய் ஜொலிப்பாய் போற்றி
55. ஓம் சிவ சிவ சிவசங்கரி போற்றி!
56. ஓம் தந்தையும் தாயும் ஆனாய் போற்றி!
57. ஓம் இடைப்பின் தலையில் இருப்பாய் போற்றி!
58. ஓம் கடை சுழி முனையில் கலந்தாய் போற்றி!
59. ஓம் முச்சுடராகி முளைந்தாய் போற்றி!
60. ஓம் மூலத்தில் நின்ற முதல்வியே போற்றி!
61. ஓம் ஜாலங்கள் புரியும் சமர்ப்பியே போற்றி!
62. ஓம் ஒரெழுத்தான உத்தமியே போற்றி!
63. ஓம் ஈரெழுத்தான ஈஸ்வரியே போற்றி!
64. ஓம் முன்றெழுத்தான முக்கண்ணியே போற்றி!
65. ஓம் நான்கெழுத்தான நாராயணியே போற்றி!
66. ஓம் ஐந்தெழுத்தான அம்பிகையே போற்றி!
67. ஓம் ஆதியும் அந்தமும் ஆனாய் போற்றி!
68. ஓம் அகந்தையை அழிக்கும் அன்னையே போற்றி!
69. ஓம் குற்றம் பொறுக்கும் குணவதியே போற்றி!
70. ஓம் குருவாய் விளங்கும் கோலவிழியே போற்றி!
71. ஓம் சின்மயமாக சிரிப்பாய் போற்றி!
72. ஓம் தன் மயமாக தனித்தாய் போற்றி !
73. ஓம் வேதாந்த மால வித்தைகியே போற்றி!
74. ஓம் வேற்றுமையில்லா விமலியே போற்றி!
75. ஓம் நாற்பத்து முக்கோண நாயகியே போற்றி!
76. ஓம் அரனோடு அறியாய் அமர்ந்தாய் போற்றி!
77. ஓம் பரனோடு பறைவாய் இருப்பாய் போற்றி!
78. ஓம் மோன பாத்திரத்தின் முடிவே போற்றி!
79. ஓம் ஞானஷேத்திர வடிவே போற்றி!
80. ஓம் நடுநிலை ஆன நான்மறை போற்றி!
81. ஓம் கொடுவினை அகற்றும் குண்டலி போற்றி!
82. ஓம் சுத்த சிவத்தில் ஜொலிப்பாய் போற்றி!
83. ஓம் சக்தி சிவமாய் இருப்பாய் போற்றி!
84. ஓம் சுக சொரூப சூழ்ச்சியே போற்றி!
85. ஓம் அகண்ட பூரணி ஆனவள் போற்றி!
86. ஓம் மாலை திருமகள் வானீயே போற்றி!
87. ஓம் அன்னையே வடிவுடைய அம்மையே போற்றி!
88. ஓம் கன்னியாய் சிவகாம சுந்தரியே போற்றி!
89. ஓம் மாலை திருமகள் வடிவே போற்றி!
90. ஓம் ஆட்சியாய் நீலாய ஆட்சியே போற்றி!
91. ஓம் நாரணி பூரணி நாயகி போற்றி!
92. ஓம் ஆரணியாம் விசாலாட்சியே போற்றி!
93. ஓம் கன்னியாம் பத்ரகாளியே போற்றி!
94. ஓம் மண்ணும் துர்க்கை ஆனாய் போற்றி!
95. ஓம் ஏந்திர வித்தைகள் செய்பவள் போற்றி!
96. ஓம் மந்திர சொரூபினி மௌலியே போற்றி!
97. ஓம் மாய குண்டலி மகேஸ்வரியே போற்றி!
98. ஓம் ஆயிரம் நாமங்கள் கொண்டாய் போற்றி!
99. ஓம் ஆனந்த வடிவுடை நண்பனே போற்றி!
100. ஓம் மணவாக்கு கடந்த மாகாளியே போற்றி!
101. ஓம் சர்வ சம்ஹாரி சக்தியே போற்றி!
102. ஓம் என் உள்ளத்தின் உள்ளே இருப்பாய் போற்றி!
103. ஓம் மன்னுயிர் குயிராய் இருப்பாய் போற்றி!
104. ஓம் மகிமை மிகுகாஞ்சி காமாட்சியே போற்றி!
105. ஓம் கனகம் பொழிகின்ற காமகோட்டத்தே போற்றி!
106. ஓம் மனங்கவர் காயத்ரி மாமண்டபத்தே போற்றி!
107. ஓம் வெற்றி கம்பம் விளங்கும்மாலையத்தே போற்றி!
108. ஓம் வேதனை நீக்கும் வெக்காளி அம்மையே போற்றி

விரும்பியதை அருளும் உறையூர் வெக்காளியம்மன் திருவருளால் நாடும் வீடும் சகல நலம் பெற்று வாழட்டும் என்று வேண்டிக் கொள்வோம்.

ஓம் சக்தி..!! பராசக்தி...!!!



திருவாரூர் சு.சேகர்

# ஆன்மீக கேள்விகளும் அர்த்தமுள்ள பதில்களும்



ஆரூர். ஆர். சுப்பிரமணியன்

**தஞ்சை பெரிய கோயில் பற்றி...?**
சுமார் 1000 ஆண்டுகளைக் கடந்து விட்ட இந்த பெருவுடையார் திருக்கோயில் கருவறையைச் சுற்றி அமைந்துள்ள சுற்றறை கொண்ட பெயர் “சாந்தாரநாழி” என்பதாம்.

மூலவர் கிழக்கு நோக்கிய தத்புருஷம் எனும் முகங்கொண்டு அருள, சாந்தாரநாழியின் தெற்கு பக்கம் அகோர மூர்த்தியும், மேற்கு திசையில் சத்யோஜாதமூர்த்தியுமாக பத்து திருக்கரங்களுடன் பிரதோஷ நடனம் புரிபவராக சந்தியாநிருத்த மூர்த்தியும், வடப்பக்கத்தில் வாமதேவமாக மனோன்மணியும், உயர் திருமேனிகளாக தரிசனம் கிட்டும்.

இது மூர்த்தி கொண்ட சிறப்பாகும். இப்படி அழகுற பல சிற்பத் திறன்களுடன் பெரிய ஆலயம் உருவாக்கிய பெரிய மனது கொண்ட இராஜ இராஜ சோழன் என்றும் தமிழரின் வணக்கத்துக்குரியவர் ஆவார்.

**உண்மையான மகிழ்ச்சி எதில் கிடைக்கும்?**
“உண்மையான சந்தோஷம், நாம் எவ்வளவு செல்வம் சேர்க்கிறோம் என்பதில் இல்லை; அதில் எவ்வளவு தர்மம் செய்கிறோம் என்பதில்தான் கிடைக்கும்” என்பார் மகாகவி ரவிந்திரநாத் தாகூர் அவர்கள்.

**மூன்று ஆச்சார்ய புருஷர்களான ஸ்ரீ சங்கரர், ஸ்ரீஇராமானுஜர், ஸ்ரீமாத்வர் ஆகியோரைப் பற்றிய நூற்களை எழுதிய தேசபக்தர் யார்?**
“தேசபக்தர்“ சுப்பிமணிய சிவாவே அவர்!

ஸ்ரீராமானுஜ விஜயம் என்ற நூல் 615 பக்கங்களுடனும், ஸ்ரீமாத்வ விஜயம் என்ற புத்தகம் 251 பக்கங்களுடனும், ஸ்ரீசங்கர விஜயம் நூலையும் இயற்றித் தந்த சிவா “மோக்ஷ சாதன ரகசியங்கள்” என்ற அரிய நூலையும் இயற்றி ஆன்மீக உலகிற்கு சிறப்பு சேர்த்துள்ளார்.

**ஆன்மீகச் சாதனை குறித்து எளிய விளக்கமென்ன?**
“மஞ்சட் காமாலையில் பாதிக்கப்பட்டவனுக்கு சர்க்கரை கொண்ட இனிப்பு தெரியாது. ஆனால் தினந்தோறும் கொஞ்சம் கொஞ்சம் சர்க்கரை, கல்கண்டு சாப்பிட்டு வந்தால் ருசியும் கிடைக்கும்; நோயும் குணம்பெறும். அது போல அக்ஞானம் மனிதனை சூழ்ந்திருக்கையில், இறைவனின் நாம ருசி

கிட்டாது அவனுக்கு. ஆன்மீகச் சாதனையைத் தொடர்ந்து மேற்கொண்டால் மட்டுமே அக்ஞான இருள் விலகி, இறைவன் திருநாமத்தில் அவை கிடைக்கும்.”

இக்கருத்தை அருளியவர் வேத வியாசர்.

“வைதீக மதம்“ என்று எது அழைக்கப்படுகிறது.
சந்தேகமின்றி புனிதமான இந்து மதம்தான்.

வேத அடிப்படையில், வேத பிராமணத்தில் வேதஞ் சார்ந்த ஒரே மதம் இந்துமதம்!

தென்றலையே தூதாக அனுப்பிய தெய்வீகப் பெண் யார்?
கண்ணன் கோபியர்களைப் பிரிந்து மதுரா சென்று விட, அவர் மீது கொண்ட ஏக்கத்தால் தென்றலையே தூதாக அனுப்பியவள் ராதை.

அதில் ஒரு சுவையான வரி - “தென்றலே! நீ செல்லும் பாதையில் பல நந்தவனங்கள் இருக்க, நீ அவற்றுள் மெய்மறந்து போய், கண்ணனிடம் போய் சொல்ல வேண்டிய என் செய்தியை மறந்துவிடாதே!” என.

மகான் விவேகானந்தர் தமிழ்நாட்டுக்கு எத்தனை முறைகள் வருகை தந்துள்ளார்?
1892இல் முதன்முறையாக தமிழகம் வந்த சுவாமி விவேகானந்தர் ராமநாதபுரம் ராஜா பாஸ்கர சேதுபதி உட்பட அநேக பக்தர்களை சந்தித்துள்ளார். சுவாமிஜி மேற்கத்திய நாடுகள் செல்ல, அவர்களே காரணமானார்கள்.

கன்னியாகுமரியில் உள்ள ஸ்ரீபாத பாறையில் சுவாமிஜி 1892ம் ஆண்டு டிசம்பர் 24 முதல் 26 முடிய அமர்ந்து கடுந்தவம் மேற்கொண்டார்.

அடுத்து சுவாமிஜி கி.பி. 1897இல் பிப்ரவரி 6 முதல் 15 வரை சென்னை ஐஸ் ஹவுஸ் கட்டிடத்தில் தங்கி சிறப்புரைகளை ஆற்றியது வரலாற்று செய்தியாகிறது.

இந்த விஜயத்தின் போது சுவாமிஜிக்கு, சென்னை நகரமே அதுவரை கண்டிராத வரவேற்பு அளிக்கப்பட்டதாம்.

ஆசார்யர்கள் என்பவர்கள் யார்?

நம் அக உள்ளத்து இருளை, அதாவது அஞ்ஞானத்தை ஞானமென்னும் விளக்கேற்றி போக்குபவர்கள்தான் ஆசார்யர்கள் ஆவர்.

அதனால்தான் பகவான் கிருஷ்ணர் அர்ஜுனனை தன் சிஷ்யனாக்கி, தான் ஆசார்யனாக அமர்ந்து (கீதாசார்யன்) கீதோபதேசமருளினார் என்பார்கள்.

அமுதும், நஞ்சும் இடம் பெற்ற ஒரே பாடல் எது? அதனை இயற்றியவர் யார்?

அண்ணல் செய்து அலைகடல் கடைந்து அதனுள்

கண்ணுதல் நஞ்சு உண்ணக் கண்டவனே!

விண்ணவர் அமுது உண, அமுதில் வரும்

பெண் அமுது உண்ட பெருமானே”

என பகவானை அமுதிலும், நஞ்சிலும் கண்டு மகிழ்வார் நம்மாழ்வார் அவர்கள்.

மகாகவி பாரதியார் உள்ளத்தைக் கவர்ந்து பாட வைத்த தெய்வம் எது?
இது பற்றி பிரபல எழுத்தாளர் வெ.சாமிநாத சர்மா வாயிலாகவே இதைக் கேட்கலாமே.

“பாரதியார் ஒரு சமயம் சென்னை ராயப்பேட்டை மௌபரீஸ் ரோட்டிலுள்ள குகானந்த நிலையத்திற்கு வந்திருந்தார். அப்பொழுது (திரு.வி.க.) கல்யாண சுந்தர முதலியாரும் வந்திருந்தார். நானும் வேறு சில நண்பர்களும் அங்கிருந்தோம். மாலை நேரம்.

நிலையத்து மண்டபத்தில் குமரக் கடவுளின் திருஉருவப் படம் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த உருவம் பாரதியாரின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்து விட்டது. “முருகா, முருகா, முருகா“ என்று தொடங்கும் பாடலை அவர் உணர்ச்சி ததும்ப பாடினார். “வருவாய் மயில் மீதினிலே வடிவேலுடனே வருவாய்“ என்ற சரணத்தைப் பாடி, அதையே திரும்பத் திரும்ப சொன்னபோது, அந்த குமர வடிவம் அவரை நோக்கி மெதுவாக வருவது போலவே இருந்தது! நாங்கள் அனைவரும் பரவசர்களானோம். அந்தக் காட்சி என் நெஞ்சை விட்டு என்றும் அகலவே அகலாது.”

பரமேசுவரன் திரிபுராசுரனை வதஞ் செய்த நிகழ்வு.

சுவாரசியம் கொண்டதா?

ஈசுவரன் திரிபுராசுரனை வதம் செய்கையில் - பூமி ரதமாக இருந்தது. இரு சக்கரங்களாக சந்திர சூரியர்கள் அமைந்தனர்.

வில்லாக செயல்பட்டது மேருமலை; ஆதிசேஷன் நாண் கயிறானார். மகாவிஷ்ணு பாணமாகிவிட, பிரம்மா சாரதியாக அமர்ந்தார்.

நான்கு வேதங்கள் நான்கு குதிரைகளாக, அக்குதிரைகளின் தலைகளில் உபநிடதங்கள் இடம் பெற்றன.

இப்படித்தான் கைலைநாதன் அந்த அசுரனை வதஞ் செய்தார்.

சுமார் 1100 ஆண்டுகளுக்கு முற்பட்ட சிவாலயம் எங்குள்ளது?

வேலூர் மாவட்ட எல்லை கிராமமான அணைக்கட்டா புத்தூரில் தான் இப்பழமையான சிவாலயம் உள்ளது.

இவ்வாலயம் செல்ல, சென்னையிலிருந்து மேற்கே 65கி.மீ. தொலைவில் உள்ள பேரம்பாக்கம் ஊர் வந்து, அங்கிருந்து மேற்கே 5 கி.மீ. தூரம் போனால், அரக்கோணம் வட்டத்தில் உள்ள இவ்வூர் வரும்.

கி.பி. 965இல் இவ்வூர் சிறப்பாகத் திகழ்ந்ததை இந்திய தொல்லியல் துறை கி.பி. 1895இல் மேற்கொண்ட ஆய்வில் கண்டுபிடித்தனர். பல கல்வெட்டுகளும் இங்கு உள்ளன.

“அணை அக்கரைப்புத்தூர்“ மருவி இன்றைய அணைக்கட்டாப்புதூர் ஆனது. இவ்வூர் ஆலயத்தில் அன்னை காமாட்சி சமேத ஆதித்ய மகாதேவர் என்கிற ஏகாம்பரேசுவரர் குடி கொண்டுள்ளார்.

இதே ஆலயத்தின் வடமேற்கில் ஸ்ரீதேவி, பூதேவி சமேத ஸ்ரீனிவாசப் பெருமாளும் தரிசனம் தருகிறார்.

குடும்ப ஒற்றுமை ஏற்பட, திருமணம் நடைபெற, இத்தல தரிசனம் பெறலாம்.

சத்சங்கம் எவ்வகையில் சிறப்பானது?

பகவான் கண்ணன் சத்சங்கம் குறித்து மிக உயர்வாக எடுத்துரைத்துள்ளார்.

சத்சங்க கூட்டுறவால் பக்தன் இறைவனை எளிதாக அடைந்துவிட முடியும்.

சத்சங்கம் என்பது என்ன?

ஆன்றோர்கள், சான்றோர்கள், முனிவர்கள், மகான்கள், துறவிகள், சாதுக்கள், ஞானிகள், ஆன்மீக உள்ளங் கொண்டவர் இப்படி அனைத்து சீலர்களுடன் கொள்ளும் தொடர்பு வீணாகுமா? ஆகாது என்பதே திடமான பதில்.

பாகவத நூல், இராமாயண இதிகாசம் இவை சத்சங்கத்தை போற்றுகின்றன.

இறைவன் அருளால் கிடைக்கும் சத்சங்க இணைப்பு, ஒருவனை இறைவனிடமே உரிய காலத்தில் இணைத்து விடும்.

ஆத்மா செய்யும் காரியமென்ன?

ஒருவனுடைய மனதையும், தான் என்ற அகந்தையையும் அடக்கி அவனை சாதாரண மனிதனிலிருந்து இறைநிலைக்கு உயர்த்தும் தன்மை கொண்டதே ஆத்மா.

மனிதன் ஆத்மஞானம் பெற நிறைய சாதனைகளைக் கடக்க வேண்டும் என்பது பெரியவர்களின் கண்டுபிடிப்பும், ஏன் தெய்வாக்குமதுவே!

அழகன் முருகனின் ஆறு ஆதார மையங்கள் எங்கெங்கு உள்ளன?

மூலாதார மையம் திருப்பரங்குன்றத்திலும், சுவாதிஷ்டானம், திருச்செந்தூரிலும், பூரகம் பழனியிலும், அநாகதம் திருவேரகத்திலும், விசுத்தி குன்று தோறாடலிலும், ஆக்ஞை பழமுதிர்ச் சோலையிலும் கந்தவேளின் ஆதார மையத்தலங்களாகும்.

# மணம் வீசும் மனங்கள்!
# குருபக்தி மனம்





ஆரூர். ஆர். சுப்பிரமணியன்

“ஈஸ்வரனைக் காட்டிலும் குரு பெரியவர்; ஈஸ்வர பக்தியைக் காட்டிலும் குருபக்தி விசேஷம் என்கிறார்களே, ஏன்? என்று கேட்டால், அவரை யாரும் பார்க்கவில்லை. பிரத்தியக்ஷமாக நாம் பார்க்கக்கூடிய ஒரு மனிதர் எப்போதும் சுத்தமாய், ஞானம் உடையவராய், அசைவு இல்லாத சித்தம் உடையவராய், அப்பழுக்கு இல்லாமல் நமக்கு கிடைத்துவிட்டால், நாம் எந்த மனச்சாந்தியைத் தேடி ஈஸ்வரனிடத்தில் போகிறோமோ அந்த சாந்தி குருவிடம் பக்தி செலுத்தினாலே கிடைத்து விடுகிறது. அதனால் தான்

“குருர் ப்ரஹ்மா குருர் விஷ்ணு;
குரு தேவோ மகேஸ்வர:” என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஜகத்தை சிருஷ்டிப்பது, பரிபாலிப்பது போன்ற பல காரியங்கள் ஈஸ்வரனுக்கு இருக்கின்றன. அவை எல்லாம் குருவுக்கு இல்லை. அவனுக்கு (ஈஸ்வரனுக்கு) ஆபீஸ் உண்டு; இவருக்கு (குருவிற்கு) இல்லை. ஆபீஸ் இருக்கிறவனிடம் போய் தொந்தரவு கொடுப்பதை விட, ஆபீஸ் இல்லாமல் சும்மா இருக்கிறவரிடம் நம் காரியத்தை மிக எளிமையாக முடித்துக்கொண்டு விடலாம். ஈஸ்வரனுக்கு என்ன என்ன உத்தமமான குணங்கள் எல்லாம் இருக்கின்றனவோ அவை எல்லாம் இந்த ‘குரு’விடத்தில் இருக்கின்றன.

இப்படி குருபக்தி குறித்து எளிமையாக மனதில் பதியும்படி யாரால் கூற முடியும்?
ஆம்! இப்படி அருளியிருப்பவர் நம் ஜகத்குருவாகத் திகழும் காஞ்சி மகாப் பெரியவர் தான்! ‘தெய்வத்தின் குரலாய்’ அது என்றும் நமக்கு ஒலித்துக் கொண்டே இருக்கும்!

ஈஸ்வரனை விட ஒரு குரு இன்னும் மேலானவராக சிறப்பது எப்படி?
ஒருவர் ஏதேனும் தவறு செய்து விட்டால், குறிப்பாக, கடவுள் சம்பந்தப்பட்ட காரியம் குறித்து ஆண்டவனிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்பதில்லை. இதனை நாம் குருவாக மதிக்கும் ஒருவரிடம் அதனைக் கோரலாம், குரு மன்னித்தாலே போதுமானது. ஆனால் குருவிடம் ஏதேனும் தவறிழைத்து விட்டு கடவுளிடம் இதற்காக போனால் ஒன்றும் நடக்காது. அந்த குரு மன்னித்து விட்டால் தான் உண்டு!

குரு கீதை நூல் உரைப்பது இது…

‘சிவே ருஷ்டே குரு ஸ்த்ராத; குரென ருஷ்டே ந கச்சன’ என்று.

“குருவுக்கே கோபம் வந்துவிட்டால் உன்னைக் காப்பாற்றுபவர் யாருமே கிடையாது” என்பது இதன் பொருள்.

அதனால்தான் பண்டைய காலத்திலிருந்து குருவின் அன்பிற்கு பாத்திரமாவதையும், அவர் சொல் கேட்டு நடப்பதையும், ஒரு கடமையாக தங்கள் வாழ்வின் ஒரு பகுதியாகக் கொண்டு வாழ்ந்து சரித்திரம் படைத்திருக்கிறார்கள், நல்ல சிஷ்ய மனோபாவம் கொண்டவர்கள்.

புராண காலத்தில் வாழ்ந்த சிறந்த மகரிஷிகளில் ஒருவர் தௌம்யரிஷி என்பவர். அவரிடம் முக்கிய சீடர்களில் ஒருவனாக இருந்தவன் ஆருணி என்ற குருசொல்லைத் தட்டாதவன்.

அன்று அடைமழை பொழிந்து கொண்டிருந்த நேரம் அது. அப்பொழுது ஆருணியின் குரு பக்தியை சோதிக்க சிந்தை கொண்ட தௌம்யரிஷி அவனை அழைத்து, “உடனே நீ நம் வயல் பகுதிக்குப் புறப்பட்டு போய் அங்கு தேங்கியுள்ள மழை நீர் வெளியே வராதபடி அங்குள்ள மடையை நன்கு அடைத்துவா!” என ஆக்ஞையிட்டார். மறு வார்த்தை பேசாமல் ஆருணி அவ்வயல் பக்கம் விரைந்து சென்றான்.

கடும் மழை வயல் பக்கமும் கொட்டிக் கொண்டிருந்ததால், அதனையொட்டி இருந்த மடையில் நீர் வெள்ளமாக ஓடிக்கொண்டிருந்தது. சேறு, சகதி, மழை நீர், இவற்றைப் பொருட்படுத்தாத ஆருணி குருவின் உத்திரவை நிறைவேற்றும் ஒரே நோக்கத்தோடு அங்குள்ள மண்ணைத் திரட்டி மடை மீது போட தற்காலிகமாக நீர் அதன் மூலம் போகாமல் நின்று போனாலும், மறுபடியும் உடைத்துக் கொண்டு வயல் திசைகளில் ஓட ஆரம்பித்து விட்டது. இம்மாதிரி அவன் பல முறை செய்தும் மடை உடைப்பு தொடர்ந்தது. சற்று திகைத்துப் போன அச்சீடன், ஒரு முடிவு செய்து உடையும் மடைப்பகுதி முழுமையும் அடைத்தவாறே படுத்துவிட்டான். இதனால் மடை உடைப்பு அறவே நின்று போனது!

வயலுக்குச் சென்ற சிஷ்யன் பலமணி நேரம் கடந்தும் ஆசிரமம் ஏன் திரும்பவில்லை என்ற எண்ணம் கொண்ட குருநாதர் தௌம்யரிஷி, உடனே அங்கே புறப்பட்டுப் போனார்.

மடையை அடைத்து ஆருணி படுத்திருந்த நிலையை தௌம்யரிஷி கண்டு விட்டு கலங்கிப்போனார். “ஏனப்பா, இப்படி?” என ஆதரத்துடன் குரு கேட்கவே, அவன் படுத்தவாறே தன் நிலையைச் சொன்னான். கூடவே, மரியாதை நிமித்தம் தான் எழுந்தால், மடை மீண்டும் உடையும் அபாயம் உள்ளதால், இந்நிலைக்கு மன்னிப்பும் குருவிடம் கோரினான்.

ஆருணி கொண்டிருந்த குருபக்தி தௌம்யரிஷியின் மனதைத் தொட்டு விடவே, அவர் ஆனந்தமுடன், “ஆருணி! உன் குருபக்தியை மெச்சி, உனக்கு எல்லா சாஸ்திரங்களும் இனி பரிபூரணமாக விளங்கட்டும். உன் உடலை வருத்திக்கொண்டு மடைநீர் வெளிவராமல் தடுத்ததால் உனக்கு ‘உத்தாலகன்’ என்ற பெயர் உண்டாகட்டும்” எனவும் ஆசீர்வதித்தார்.

அவ்வாறே குருவின் ஆசிகளின் படி ‘உத்தாலகன்’ எதிர் காலத்தில் அனைத்து சாஸ்திரங்களிலும் புலமை படைத்தவனாய் சிறந்து விளங்கினான்.

“ஓம் ஸஹ னாவவது

ஸஹ னௌ புனக்து

ஸஹ வீர்யம் கரவா வஹை

தேஜஸ் வினாவ தீதகஸ்து

மா வித் விஷா வஹை

ஓம் சாந்தி சாந்தி சாந்தி”

ஒரு குருவும், அவருடைய சீடனும் ஆன்மீகப் பிடிப்புடன் இருக்க வேண்டும் என்ற தத்துவத்தை மேலே கூறப்பட்ட ‘கடோப நிடத’ ஆன்மீக சுலோகம் அறிவுறுத்த, அதன் முழு பொருள் இப்படி அமையும்.

“எங்களை இறைவன் ஒன்றாகக் காப்பதாக! நாங்கள் இருவரும் ஒன்றாகவே பரிபாலிக்கப்படுவதாக! நாங்கள் ஒன்றிணைந்து வீரியமுடன் செயலாற்றுவதாக! நாங்கள் கற்றுத்தேர்ந்து தெளிவு பெறுவதாக! நாங்கள் ஒருவரை ஒருவர்

வெறுக்காதிருப்போமாக!" என.

சீடன், ஆளும் அரசனாகவே இருந்தாலும் அவன் தனது குருவின் சிறுசிறு ஆணைகளுக்குக் கூட கட்டுப்பட்டே ஆக வேண்டும் என்பது ஒரு நியதி.

அக்காலத்தில் நாடாண்ட பல சக்கரவர்த்திகள், மன்னர்கள், குறுநில அரசர்கள் என இத்தகையவர்களின் அவையில் ராஜகுரு என்ற பதவியும் இடம் பெற்றிருந்தது என்பதை புராண மற்றும் சரித்திர நூல்கள் மூலம் அறிய முடிகிறது.

ஒரு காலத்தில் காஷ்மீர் தேசத்தில் வாழ்ந்து வந்த மேதையின் பெயர் கையட் என்பது. இவருடைய குருகுலத்தில் பலர் சீடர்களாக இருந்து பாடம் கேட்டு, பின்பு அறிஞர்களாக விளங்கியுள்ளனர். கையட்டின் மாணவனாக காஷ்மீர் தேச இளவரசனும், சில ஆண்டுகள் இருந்து பல கலைகளைக் கற்று வந்தான், அவரிடம்.

ஒரு கட்டத்தில் இளவரசனின் கல்வி பயிற்சிகள் முடிவடைந்தவுடன், விடைபெறும் தருணத்தில் குருநாதரான கையட்டை சாஷ்டாங்கமாக பயபக்தியுடன் நமஸ்கரித்து விட்டு, பணிவுடன் தன் இருகரம் கூப்பி, "அய்யனே! தாங்கள் என்னை ஆசீர்வதிக்கும் இந்நேரத்தில், தாங்கள் விரும்பும் எவற்றையும் என் குருதட்சணையாக சமர்ப்பிக்க, அனுமதிக்க வேண்டும்" என விண்ணப்பித்தான். அக்கோரிக்கையை அன்புடன் மறுத்த கையட் "இளவரசனே! நீ நாடாளும் வாய்ப்பு பெற்று, பதவியில் அமர்ந்தவுடன், உன் வாழ்நாள் காலம் வரையில் நீதி, தர்மம் குலையாது நல்லாட்சி புரிந்தால் போதும்! அதனையே நான் குருதட்சணையாக ஏற்றுக் கொள்வேன்" எனக் கூற, கேட்டவன் வேதனைப்பட்டான். "மதிப்பிற்குரிய குருநாதரே! இந்த பதில் எனக்கு மனநிறைவைத் தராது. எனவே என் திருப்திக்காவது ஏதாவது கேட்டு என்னிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்" என அவருடைய பாதத்தைப் பிடித்து மீண்டும் கேட்டுக் கொண்டான்.

தர்ம சங்கடத்திற்கு உள்ளான கையட், அவனை எப்படி சமாளிப்பது என ஒரு கணம் யோசித்து விட்டு, "இளவரசனே! நீ உள்ளே சென்று என் தர்மபத்தினியிடம் இதைக் கூறு! அவள் என்ன கேட்பாளோ, அதனையே உன் குருதட்சணையாக சமர்ப்பித்து விடு அவளிடம்!" என சாமர்த்தியமாக, இளவரசனை இல்லத்தின் அடுக்களைப் பக்கம் போகச் சொல்ல, அவனும் உள்ளே சென்று குரு பத்தினியை நமஸ்கரித்து தனது குருதட்சணை தரும் ஆசையைக் கூறினான். அவளும் "இதெல்லாம் எதற்கு மகனே! ஆயுள் வரை உன் அன்பும், நன்றியும் மட்டும் போதுமே!" என மறுத்துச் சொன்னாள். இளவரசன் குருதட்சணை செலுத்தும் கொள்கையில் உறுதியாக இருப்பதை உணர்ந்து கொண்ட குரு பத்தினி, அடுக்களையில் உள்ள ஒரு மூடியிருந்த பாத்திரத்தை திறந்து பார்த்தாள்.

ப்பொழுது குரு பத்தினிக்கு உதித்த யுத்தியின்படி "அப்பனே! இன்றைய சாயங்கால ஆகாரம் பண்ண இரண்டே இரண்டு பிடி மாவு குறைகிறது. அதனையே எனக்கு குருதட்சணையாகக் கொடுத்தால் போதும் என அன்புடன் மொழிந்தாள். "அப்படியே தாயே! என அவளை வணங்கிவிட்டு, இல்லத்திற்கு வெளியே சென்று அரை மணி நேரத்தில் திரும்பிய இளவரசன் அந்த குருபத்தினி கேட்ட இரண்டு பிடி மாவை பக்தி மனமுடன் குரு தட்சணையாகச் செலுத்தி மகிழ்ந்தான்.

அநேகமாக இந்த குருதட்சணை தான் உலகிலேயே குறைந்த ஒன்றாக இருக்கக் கூடும்!

நிகழும் கலிகாலத்தில் நடைபெறும் அரசியல் வினைகளில் பணமும், பதவியுமே பிரதானமாக இருந்து, இந்த பரந்த உலகையே ஆட்டுவிப்பது கண்கூடான ஒன்று.

"ower and Money do many things இதுவே தாரக மந்திரமாக, குறிப்பாக நம் நாட்டில் செயல்பட, பொதுமக்கள் ஒரு சிலர் தவிர, எண்ணிக்கையற்ற அரசியல்வாதிகளின் பிடியில் பலர் சிக்கித் தவித்து வருவதை அனுபவப் பூர்வமாக பார்த்து வருகிறோம்.

ஆனால் பண்டைய காலங்களில் குறிப்பாக இராமபிரானின் தந்தையார் தசரத மன்னன் போன்று வாழ்ந்து, நாடாண்டு வந்த பல மன்னர்களின் காலகட்டங்களில் 'Corruption' ஏன் அவர்களைப் பற்றவில்லை? இதன் காரணம் அவர்களை Correction செய்யத் தக்க, வசிஷ்டர் போன்ற குருநாதர்கள் அவர்கள் கூடவே இருந்து வந்துள்ளது தான்!" இப்படி நகைச்சுவையாக பிரபல எழுத்தாளர் கி. வா. ஜகந்நாதன் அவர்கள், ஒரு பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறியுள்ளது இன்றைய சூழ்நிலைக்கு எவ்வளவு

பொருத்தமுள்ளதாக அமைந்துள்ளது!

நிறைகுடம் என்றுமே தளும்பாது. ஆனால் குறை குட நிலை என்ன?

மன்னர்கள் காலத்தில் நடந்த ஒரு உண்மை நிகழ்ச்சி இது...

ஒரு குருவிடம் பாடம் கேட்டு சில மாதங்களே ஆன மணிவர்மன் என்ற சீடனுக்கு, தான் அத்தனை கலைகளிலும் புலமை பெற்றுவிட்டதான எண்ணத்தைப் பெற்று விட்டான். எல்லாம் கற்று விட்டோம் என்ற இறுமாப்புடன் தனது குருநாதரை ஒருநாள் வணங்கிய அந்த சீடன், “ஐயனே! நான் கோவூர் நாட்டு அரசனின் அரச சபையில் காலியாக உள்ள ஒரு பெரும் பதவியில் சேரும் உத்தேசமுடன் இருப்பதாலும், இனி நான் கற்றுக்கொள்ள புதியவை ஏதுமில்லை என்பதை அறிந்துள்ளதாலும், எனக்கு நல்லாசிகள் கூறி அனுப்ப வேண்டுகிறேன்” என தெரிவித்தான். ஆனால் அவனுடைய குருவோ, “மணிவர்மா! இன்னும் கற்றுக்கொள்ள உனக்கு அநேக விஷயங்கள் இருக்க, இப்படி ஏன் அவசரப்படுகிறாய்?” எனக் கேட்டார். “ஐயனே! என்னை தயவுசெய்து தடுக்க வேண்டாம். ஒரு நல்ல பதவி கிட்டும் வாய்ப்பை நான் இழக்க விரும்பவில்லை” என பிடிவாதமாக அவன் பதிலளித்தான். அச் சீடனை பரிதாபமாகப் பார்த்து விட்டு குரு, “சரி அப்பனே! நீ உடனே புறப்படு! என் நல்லாசிகள்” எனக் கூறி விடை கொடுத்தார்.

கோவூர் நாட்டை மணிவர்மன் அடைந்த பிறகு தான், அவனுக்குத் தெரிந்தது கோவூர் மன்னனின் அரசவையில் இடம்பெற வேண்டும் என்றால், அம்மன்னனின் தலைமை குருநாதர் கோசலரின் சில கேள்விகளுக்கு தக்க விடைகள் அளிக்க வேண்டுமென்று. “இருந்தால் என்ன நாம் தான் அனைத்தும் கற்ற பண்டிதன் ஆயிற்றே!” என்ற கர்வம் பற்றவே, அரசவைக்குள் சென்றான் அவன்.

கோவூர் மன்னன் அரியணையில் அமர்ந்திருக்க, அவருக்கு சமீபம் உள்ள இருக்கையில் தலைமை குரு உட்கார்ந்திருந்தார்.

சபையில் நுழைந்த மணிவர்மன், அரசன் உள்ளிட்ட அவையோரை பணிவுடன் வணங்கினான். அவனை ஏறிட்டுப் பார்த்துவிட்டு தலைமை குரு, அரசனிடம், “மன்னா! இந்த சபையில் பதவி கோரி வந்துள்ள இந்த இளைஞனிடம் சில கேள்விகள் கேட்க தாங்கள் அனுமதிக்க வேண்டும்” எனக் கேட்டுக்கொள்ள, அரசனும் தன் இசைவைத் தந்தார்.

உடனே இளைஞனிடம் கோசலர், “மணிவர்மா! உன்னை இரண்டே இரண்டு கேள்விகள் மட்டுமே கேட்பேன். விடைகள் சரியாக இருந்தால், அரசரின் ஒப்புதல் பெற்று உனக்கு இங்கே இடம்பெறும் வாய்ப்பு உண்டாகும். கேட்டுக்கொள்! இது முதல் கேள்வி...

“இந்நாட்டின் பெயரும், நம் அரசரின் பெயரும், ஏன் என் பெயரும் கூட ‘கோ’வில்தான் தொடக்கமாகிறது. இப்படி ‘கோ’வில் ஆரம்பமாகும் 10 வார்த்தைகளை, குறிப்பாக அவைகள் ஆன்மீக சம்பந்தம் கொண்டதாயும், சாதாரண மக்கள் கூட அறிந்ததாயும், கூடவே அவர்களுக்குத் தேவையானதாகவும் உள்ளவற்றை மட்டுமே கூறவேண்டும். அதுவும் ஐந்தே நொடிகளில். புரிந்ததா?” எனக் கேட்டார்.

இச்சவாலை உடனடியாக ஏற்றுக்கொண்ட அரைகுறை படிப்பாளியான மணிவர்மன் தன் மோவாயில் விரல்களால் தட்டியபடியே யோசிக்க ஆரம்பித்தான்... தீவிரமாய் யோசித்தான்... அதென்னவோ அவன் கொண்ட சிற்றறிவுக்கு பதிலே தோன்றவில்லை. அவன் முகத்தில் வியர்வை துளிகள் நிறைய தோன்றி விட்டன. எங்கோ வசமாகச் சிக்கிக்கொண்ட எலி நிலையில் அவன் காணப்பட்டான்.

ராஜகுரு மணிவர்மனின் புத்திசாலித்தனத்தை இப்போது எடைபோட்டு விட்டார். கடைசியில் மணிவர்மன் ராஜகுருவிடமே பலகீனமான குரலில், “தாங்களே பதிலை கூறி விடுங்கள்” எனச் சொல்லி, சபையில் தலைகுனிந்து நின்றான்.

அப்பொழுது மன்னருக்கு சாமரம் வீசிக் கொண்டிருந்த ஒரு பணியாள் அவரிடம் பவ்யமாக ஏதோ கூறி அனுமதி பெற்று ராஜகுருவை நமஸ்கரித்து விட்டு, “குருசாமி! நான் அந்தக் கேள்விக்கு பதில் சொல்லலாமா?” என வினயமுடன் கேட்டான்.

“ஓ! சொல்லேன்” என ராஜகுரு இசைவு தரவே, சாமரப் பணியாளன் உற்சாகமுடன் இப்படி பதிலை எவ்வித தயக்கமும் இன்றி விளக்கமாக

அச்சபையில் எவரும் கேட்கும் வகையில் உரைத்தான்.

'கோ'தாவரி - ஏழு புண்ணிய நதிகளில் ஒன்று.

'கோ'விந்தன் - பகவான் கண்ணனின் திருநாமங்களில் ஒன்று.

'கோ'பாலன் - இடையர்குல வாசியாக வாழ்க்கையில் கொண்ட ஒரு திருநாமம்.

'கோ'துனி - இதன் பொருள் பசு மாட்டின் குளம்பில் உள்ள மண்ணும், புழுதியும் சேர்ந்த ஒன்று. மேலும், அவை மாலையில் மேய்ப்பவனுடன் கொட்டிலுக்கு திரும்பும் 'கோ' அதாவது வேளை எனவும் பொருள்படும்.

'கோ'கர்ணம் - மாட்டின் காது என்று அர்த்தம் தரக்கூடிய இந்தப் பெயரில் ஒரு சிவத்தலம் தேவாரத் திருப்பதிகளில் ஒன்றாக, மகான் சம்பந்தர், மகான் அப்பரால் இது பாடல் பெற்ற தலம்.

'கோது'மை - நவதானியங்களில் ஒன்று.

'கோ'தா - வில்லிபுத்தூர் தேவி ஆண்டாள் கொண்ட வடமொழித் திருநாமம்.

'கோ'தமர் - இராமாயண காவியத்தில் வரும் ஒரு பாத்திரமான அகல்கையின் பார்த்தாவான மகரிஷி கோதமர்.

'கோ'வர்தனம் - பகவான் கிருஷ்ணர் ஆயர்பாடி வாசியாக இருக்கையில் இந்த மலையை குடையாகப் பிடித்து ஜனங்களைக் காத்தருளினார்.

'கோ'மதி - தவமிருக்கும் தேவி கோமதியம்மன்.

இப்படி சாமரம் வீசுபவன் தட்டுத் தடங்கலின்றி, அழகாக பதில் சொன்னதைக் கேட்டு, மன்னன், ராஜகுரு உள்ளிட்ட அந்த அவையே உற்சாகமுடன் கைதட்டி, அவனைப் பாராட்டினார்கள். அக்கணமே மன்னன் ஒரு தட்டுநிறைய பொற்காசுகள் வைக்கப்பட்ட தங்கத் தாம்பாளத்தை வரவழைத்து ராஜகுரு மூலம் பிரமாதமாக 'கோ' பற்றி சொன்ன பணியாளனுக்கு வழங்கச் செய்தான்.

இந்த நாட்டு மன்னனின் சிற்றாளே இப்படி ஐந்தே நொடிகளில் சரியான விடை அளித்திருக்க, தன் படிப்புத் திறமையின் கொள்ளளவு என்ன என நன்றாகப் புரிந்து கொண்டு விட்ட மணிவர்மன், தனது குருவின் மனதை கிட்டத்தட்ட புண்படுத்தி, உதாசீனப்படுத்தி விட்ட செய்கைக்கு வெட்கப்பட்டான். உடனே அந்த அவையில் உள்ள அனைவருக்கும் சாஷ்டாங்க முறையில் நமஸ்கரித்து விட்டு, அரசனின் அனுமதி பெற்று, குருவைநாடி விரைந்தான் மணிவர்மன். அவன் சிந்தையில் ஓடிய அன்றைய எண்ணம், அவரிடம் மன்றாடி மன்னிப்பு கோரிப் பெற்று, மீண்டும் அவரிடம் பலகாலம் பாடங்கள் கேட்க வேண்டும் என்பதே!

(தொடரும்)



## அரிய ஆன்மீக தகவல்

# மூன்று முக பிரம்மன்

கொங்கு நாட்டில் அமைந்துள்ள சிவாலயங்களில் மிகவும் முக்கியமானது கொடுமுடி என்னும் புண்ணியத்தலம் ஆகும். பெருமைமிகு இத்தலத்தில் வீற்றிருந்து பேரருள் புரியும் இறைவன் ஈசன், இங்கே மகுடேஸ்வரர் என்கிற இனிய நாமம் கொண்டுள்ளார்.

இத்தலத்திற்கு ஏராளமான வரலாற்றுச் சிறப்புகளும், புராண பின்புலமும் உண்டு. அவற்றில் சிலவற்றை இங்கே காண்போம்.

கயிலை மலையில் சிவனாருக்கும் பார்வதி தேவிக்கும் திருமணம் நடைபெற்ற போது தேவர்கள், ரிஷிகள், முனிவர்கள் என உலகமே இறைவனின் திருமண கோலத்தைக் காண, கயிலையில் திரண்டதால், உலகின் வடபுலமானது தாழ்ந்து தென்பகுதி உயர்ந்து விட்டது. அதை சமநிலைப்படுத்தத் தகுந்தவர் இவர்தான் என தீர்மானித்து, குறுமுனியாம் அகத்திய பெருமானை தென்புலம் செல்ல பணித்தார், ஈசனார்!
அப்படி தென்பகுதி நோக்கி வந்த அகத்தியர் விந்திய மலையின் செருக்கை அடக்கி, அரக்கர் பலரைக் கொன்றும் வென்றும் கொங்கு நாட்டினை அடைந்தார். இங்கிருக்கும் ஒரு மலையில் அமர்ந்து தவத்தில் ஈடுபட்டிருந்தார். அவருக்கு பக்கத்தில் இருந்த கமண்டலத்தில் காவிரியை அடக்கி வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அகத்தியரின் கமண்டலத்தில் காவிரி அடைபட்டு விட்டதால், அதனால் கிடைக்க வேண்டிய பயன்கள் எதுவும் கிடைக்காமல் போய்விட, இதனை உணர்ந்த தேவர்கள் இறைவன் ஈசனிடம் முறையிட, சிவபெருமான் விநாயகரை அழைத்து காவிரியை விடுவிக்கும் படி ஆணையிட, காக்கையின் வடிவெடுத்த விநாயகப் பெருமான், அகத்தியரின் கமண்டலத்தைக் கவிழ்த்து காவிரியை ஓட வைத்தார். காவிரி கண்ட விநாயகர் என பெயர் பெற்றார், ஆனை முகன்.

இவ்வாறு கமண்டலம் கவிழ்ந்து காவிரி ஓடத் தொடங்கிய தலமே இந்தக் கொடுமுடி தலமாகும். தெற்கு நோக்கி ஓடிவந்த காவிரி, இந்த இடத்திலிருந்து தான் கிழக்கு நோக்கி ஓடுகிறது. இவ்விடத்தில் காவிரியின் நடுவிலே, ‘அகத்தியர் பாறை’ அமைந்துள்ளது. இந்தப் பாறையில் மேற்கண்ட வரலாற்றினைக் குறிக்கும் வகையில் அகத்தியர், விநாயகர், கமண்டலம், காகம் போன்ற திருவுருவங்கள் அமைக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

இத்துடன் இன்னொரு புராண நிகழ்வும் இந்தத் தலத்திற்கு பெருமையையும், புதுமையையும் கூட்டுவதாய் உள்ளது.

சிவபெருமானின் திருவடியினைக்காண திருமாலும், முடியினைக் காண பிரம்மனும் சென்றது நம் அனைவருக்கும் தெரியும். அதில் பிரம்மனுக்காக பொய்சாட்சி சொன்ன தாழம்பூவை பூஜைக்கு பயன்படாது எனவும் சபித்து, பிரம்மனுக்கு பூவுலகில் கோவிலும் வழிபாடும் கூடாது எனவும் சபித்தார்.
இந்த சாபம் தீரவேண்டும் என்பதற்காக, இந்த தலத்திற்கு வந்த பிரம்மதேவன் வன்னி மரமாக வடிவெடுத்து தவமியற்றினார். இன்றும் இத்தலத்தில் வன்னிமரம் உள்ளது. அம்மரமே பிரம்மனாக காட்சி தருகிறது. மரத்தின் அடியில் பிரம்மன் சிலாரூமாக காட்சி தருகிறார்.

இதில் ஆச்சர்யமான செய்தி என்னவென்றால் இங்குள்ள பிரம்மனுக்கு மூன்று முகங்களே உள்ளது. நான்காவது முகமாக வன்னி மரம் அமைந்துள்ளது. இத்தலத்திற்கு வரும் பக்தர்கள் மூன்றுமுக பிரம்மனை வணங்கி, தங்கள் தலைவிதி மாற வேண்டிக்கொள்வது வழக்கமாக உள்ளது.

மேலும், இந்த தலத்தில்தான் பரத்வாஜ முனிவர் வேண்டிக் கேட்டுக்கொண்டதன் பேரில், இறைவன் ஈசன் நடனக் காட்சியை தந்தருளினார். இந்நிகழ்ச்சியை நினைவூட்டும் விதமாகவும், போற்றும் விதமாகவும் சித்திரை மாதம் பௌர்ணமியன்று மாலை நேரத்தில் இந்த உற்சவம் நடத்தப்படுகிறது.



இந்த ஆலயத்தில் உள்ள குஞ்சிதபாத நடராஜ பெருமானுக்கு சிறப்பு அபிஷேகங்கள் சித்ரா பௌர்ணமி தினத்தில் நடைபெறுகிறது. ஏராளமான புண்ணியங்களைத் தந்தருளும் கொடுமுடி தலத்திற்குச் சென்று, இறைவன் மகுடேஸ்வரரையும், காவிரி கண்ட விநாயகப் பெருமானையும், மூன்றுமுக பிரம்மனையும் வணங்கி, காவிரி போல் இன்பங்கள் பெருக வாழ வேண்டும்.



ரா. பன்னீர்செல்வம்

# நவம்பர் மாத ராசி பலன்




விஜய்

ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்




## மேஷ ராசி

துணிச்சல் மிக்க மேஷ ராசி நேயர்களே! தடைகளைத் தாண்டி வெற்றி காணும் மாதம் இந்த நவம்பர் மாதம். புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள், பல தடைகள் வந்தாலும் விடா முயற்சியால் வெற்றியடைவீர்கள். பிடிவாத குணம் மேலோங்கும், விட்டுக் கொடுத்து செல்வதின் மூலம் அனைத்து செயல்களிலும் எளிதில் வெற்றியடைய முடியும். தகவல் தொடர்பு போன்ற துறைகளில் இருப்பவர்கள் வார்த்தைகளில் நிதானத்தைக் கடைபிடிக்க வேண்டும். பயணங்களால் உடல் நலம் பாதிக்கப்படலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கூட்டாளிகளுக்காகவோ அல்லது வாழ்க்கைத் துணைவருக்காகவோ உங்கள் வருமானத்தை செலவு செய்ய நேரிடும். மாத பிற்பகுதியில் வெளிநாடு செல்ல வாய்ப்பு கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள்.



## ரிஷப ராசி

ரிஷப ராசி நேயர்களே! அனைத்து திறமைகளும் உங்களிடத்தில் இருக்கும். ஆனால் வெளிப்படுத்த வாய்ப்புகள் கிடைப்பதில் தடை, தாமதம் ஏற்படும். மாத துவக்கத்தில் உங்கள் வருமானமானது கடன், நோய், வழக்கு, எதிரிகளால் ஏற்படும் பாதிப்புகளை தவிர்ப்பதற்காக செலவு செய்ய நேரிடும். மாத பிற்பகுதியில் அனைத்து தொல்லைகளும் தொலைந்து போய்விடும். உங்கள் திறமைகள் வெளிப்படும், மதிப்பு மரியாதை கிடைக்கும். தொழிலில் லாபம் கிடைக்கும். குடும்பத்தில் நிம்மதியான சூழ்நிலை உருவாகும். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு புகழ் கிடைக்கும்.



## மிதுன ராசி

மிதுன ராசி நேயர்களே! தைரியம், தன்னம்பிக்கை கூடும். எத்தனை தீமைகள் வந்தாலும் அனைத்தும் இறுதியில் நன்மையாக மாறிவிடும், விளைவுகள் உங்களுக்கு வெற்றியையும், லாபத்தையும், மகிழ்ச்சியையும் தரும். போட்டி, பந்தயங்களில் வெற்றி காண்பீர்கள். குலதெய்வ வழிபாடு உங்களுக்கு மிகுந்த நன்மையைத் தரும். குழந்தை பிறப்பதில் தாமதம் உள்ளவர்கள் மருத்துவம் பார்க்கத் துவங்கலாம். மாணவர்கள் கல்வியில் மேன்மை அடைவார்கள். பூர்வீகத்தில் உங்கள் ஆதிக்கம் மேலோங்கும். வீடு, வாகனம், சொத்துக்கள் வாங்க முடியும். திருமண தடை நீங்கும். சுயதொழில் செய்பவர்கள் முதலீடுகள் செய்யக்கூடாது. வேலையில் பதவி உயர்வு கிடைக்கும்.




## கடக ராசி

கடக ராசி நேயர்களே! இந்த நவம்பர் மாதத்தில் உங்கள் தகுதிகள் உயரும். உங்களின் வளர்ச்சி தலைக்கனத்தை தரும், தலைக்கனத்தால் கூட்டாளிகளிடமும், வாழ்க்கை துணையிடமும் கருத்து வேறுபாடுகள் தோன்றும். அம்மன் வழிபாட்டு மூலமும், தியானம் செய்வதின் மூலமும தீமைகள் நடக்காமல் உங்களை பாதுகாத்துக் கொள்ள முடியும். வடக்கு திசை அனைத்து செயல்களுக்கும் நன்மையானது. கூட்டுக் குடும்பத்தில் வசிப்பவர்கள் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். திருமண வயதில் உள்ளவர்கள் அனைத்து முயற்சிகளும் நீங்களாகவே முன்வந்து செய்வதின் மூலம் கைகூடும். பூர்வீகம் சார்ந்த விஷயங்களில் ஈடுபடாமல் இருப்பது விரயங்களைத் தவிர்க்கும்.



## சிம்ம ராசி

சிம்ம ராசி நேயர்களே! முன்னோர்கள் வழிபாட்டால் முன்னேற்றம் காணும் மாதமாகும் இந்த நவம்பர் மாதம். வருமானம் உயரும், சேமிப்பு அதிகரிக்கும். குடும்ப நபர்களின் தேவைகளை பூர்த்தி செய்து வைக்க முடியும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நலம். புதிய நபர்களின் அறிமுகத்தால் புதிய முயற்சிகளில் ஈடுபட்டால், தகுதி குறைவை சந்திக்க நேரும். அன்றாட வேலைகளைச் செய்வதின் மூலம் எந்த பாதிப்பும் கிடையாது. தெற்கு திசை அனைத்து செயல்களுக்கும் நன்மையானதாக அமையும். சுய தொழில் துவங்கக் கூடாது, தொழில் முதலீடுகள் செய்யக்கூடாது. வேலையில் நல்ல முன்னேற்றம் உண்டு. வீடு, சொத்துக்களால் லாபம் கிடைக்கும்.



## கன்னி ராசி

கன்னி ராசி நேயர்களே! அனைத்து வகையிலும் நன்மைகள் நடக்கும் மாதம் நவம்பர் மாதமாகும். உங்கள் தகுதிகள் உயரும், சமுதாயத்தில் புகழ் கிடைக்கும். வருமானம், சேமிப்பு உயரும், புதிய ஆபரணங்கள் வாங்குவீர்கள். வீட்டிற்குத் தேவையான புதிய பொருட்கள் வாங்குவீர்கள். வீடு, வாகனம், சொத்துக்கள் வாங்குவதற்கான வாய்ப்புகள் வரும். திருமண தடைகள் நீங்கும். மனதிற்கு பிடித்தவாறு வாழ்க்கை துணை அமையும் காலமாகும், காதல் கைகூடும். உங்கள் தொழில் வளர்ச்சியடையும், லாபம் கிடைக்கும். லாபங்களை பூர்வீகத்திலும், குழந்தைகளுக்காகவும் முதலீடு செய்யலாம். வார்த்தைகளில் நிதானம் தேவை, வாக்குறுதிகளைத் தவிர்ப்பது நன்மை தரும்.




## துலாம் ராசி

துலாம் ராசி நேயர்களே! உங்கள் ராசிநாதன் பலமாக இருப்பது மிகுந்த நன்மையைத் தரும். உங்கள் திறமைகளை வெளிப்படுத்த அனைத்து வாய்ப்புகளும் கிடைக்கும். தொழில் வளர்ச்சிக்கும், வருமான உயர்வுக்கும் தேவையான தகுதிகளை வளர்த்துக் கொள்ள முடியும். மாணவர்கள் சிறப்பான முன்னேற்றம் காண்பார்கள். உங்கள் புத்தி கூர்மை வெளிப்படும். நீங்கள் தீட்டும் திட்டங்கள் உங்களுக்கு மிகப்பெரிய வெற்றியைத் தரும். கிழக்கு திசை அனைத்து செயல்களுக்கும் நன்மையானதாக அமையும். விநாயகர் வழிபாடு அனைத்து தடைகளையும் நீக்கும் மற்றும் உங்களது அனைத்து விருப்பங்களையும் நிறைவேற்றும்.



## விருச்சிக ராசி

விருச்சிக ராசி நேயர்களே! அனைத்து செயல்களிலும் நிதானத்தைக் கடைபிடிக்க வேண்டும். உங்கள் ராசிநாதன் வக்ரமடைவதால், தடை தாமதங்கள் அதிகரிக்கும், குழப்பங்கள் தோன்றும், மனநிம்மதி குறையும். பேராசை, தவறான எண்ணங்கள் தோன்றும். ஆன்மீகத்தில் ஈடுபடுவது சிந்தனைகளை சீராக வைத்துக்கொள்ள உதவும். பிரதிபலன் எதிர்பார்க்காமல், கடமை என எண்ணிச் செய்யும் அனைத்து செயல்களும் வெற்றியடையும். இந்த மாதத்தில் மருத்துவ செலவுகள் அதிகரிக்கலாம், இழப்புகள், விபத்துகள் நேரலாம். சிவ வழிபாடு அனைத்து துன்பங்களையும் நீக்கி நன்மை புரியும்.



## தனுசு ராசி

தனுசு ராசி நேயர்களே! சிறப்பான மாதமாக இந்த நவம்பர் மாதம் அமையும். மாத துவக்கத்தில் உங்கள் விருப்பங்கள் அனைத்தும் நிறைவேற வாய்ப்புகள் கிடைக்கும். தொழில் லாபமடையும், திருமணம் கைகூடும், குழந்தைகளால் மன நிம்மதி கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி இருக்கும். நீண்டதூர பிரயாணங்களால் லாபம் உண்டு. ஆன்மீக யாத்திரை மன அமைதியைத் தரும். சொத்து வாங்கும் வாய்ப்புகள் கிடைக்கும். தெளிவான முடிவுகள் எடுப்பதால் அனைத்து செயல்களிலும் வெற்றி கிடைக்கும். செவ்வாய் கிழமைகளில் முருகன் வழிபாடு செய்வது மிகவும் சிறப்பு, அது அனைத்து துன்பங்களையும் நீக்கி வெற்றி தரும்.



## மகர ராசி

மகர ராசி நேயர்களே! குழப்பங்கள் நீங்கி தெளிவான மனநிலை ஏற்படும். தன்னம்பிக்கை பிறக்கும். கூட்டாளி உங்களைத் தேடி வருவார், உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து வைப்பார். திருமணம் கைகூடும், வாழ்க்கை துணைவர் உங்களைத் தேடி வருவார். வேலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும், பதவி உயர்வு கிடைக்கும். நிர்வாகம் சார்ந்த துறையில் இருப்பவர்களுக்கு அனைவரது ஒத்துழைப்பும் கிடைக்கும். உங்கள் தகுதிகள் உயரும், புகழ் கிடைக்கும், முன்னேற்றப் பாதையில் புதிய பயணம் துவங்குவீர்கள். சிந்தனை தெளிவாகும், மனம் அமைதியையும், மகிழ்ச்சியையும் பெறும்.



## கும்ப ராசி

கும்ப ராசி நேயர்களே! பொறுமையை கடைப்பிடிக்க வேண்டிய மாதம் இந்த நவம்பர் மாதம் ஆகும். விரயங்கள் அதிகரிக்கும். கடைசி நிமிட தடை, தாமதங்கள் ஏற்படும். அனைத்து திட்டங்களையும் முன் கூட்டியே சரிபார்த்துக் கொள்வது இழப்புகளைத் தவிர்க்க உதவும். உடல் நலனில் அதிக கவனம் தேவை, மனம், உடல் இரண்டுமே பாதிக்கப்படலாம். திருமண தடை ஏற்படும், வாழ்க்கை துணைவருடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படலாம், கூட்டாளிகளிடம் கவனமாக இருக்க வேண்டும். கூட்டுத் தொழில் செய்யக் கூடாது. முதலீடுகளைத் தவிர்க்க வேண்டும். கருப்பசாமி வழிபாடு பாதிப்புகளில் இருந்து உங்களை பாதுகாத்துக் கொள்ள உதவும்.



## மீனம் ராசி

மீன ராசி நேயர்களே! அனைத்து வகையிலும் மிக நன்மையான பலன்கள் நடக்கும் மாதம் இந்த நவம்பர் மாதம். கிழக்கு திசை அனைத்து செயல்களுக்கும் நன்மையானதாக அமையும். உங்கள் தகுதிகள் உயரும், செல்வச் செழிப்பு உண்டாகும். சமுதாயத்தில் புகழ், மரியாதை கிடைக்கும். திருமணம் கைகூடும், மனதிற்கு பிடித்தவாறு வாழ்க்கை துணை அமையும். குடும்பத்தில் மகிழ்ச்சி இருக்கும். புதிய நபர் உங்கள் வாழ்க்கையில் வசந்த காலத்தை துவங்கி வைப்பார். தொழில் வளர்ச்சியடையும், லாபம் கிடைக்கும். காதல் கைகூடும். குரு பகவான் வழிபாடு மிகுந்த நன்மையைத் தரும்.